வெளியீடு 12-1-1981]

[Issued 12-1-1981

76 | 81

1626 1476

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை 1980 ஆகஸ்ட் 5—தொகுதி VII—எண் 2

Tuesday 5th August 1980—Volume VII—No. 2

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்]

[Price 3-15 Paise

## உள்ளடக்கம்

**5—8—1980**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 91—123 |
| 2. | தகவல் கோரல்— | 123, 128-130 |
| | (அ) உறுப்பினர்களது அறிவிக்கைகள் | |
| | (ஆ) நடவடிக்கைச் சுருக்க வெளியீடு .. | 125 |
| | (இ) சட்டமன்ற உறுப்பினர் மீது ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் நடவடிக்கை .. | 125—126 |
| | (ஈ) சட்டசபையில் திரு. பா. ஜீவானந்தம் அவர்களின் படம் திறப்பு .. | 132—134 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம்— கீழ்ப்பெண்ணாத்தூரில் சிறுநாத்தூர் கிராமத்தில் சாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே மோதல் .. .. .. | 127—128 |
| 4. | அறிவிப்புகள்— | |
| | (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி .. .. .. | 130—131 |
| | (ஆ) அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம் .. .. .. | 131 |
| | (இ) மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு நியமனம் .. .. | 132 |
| 5. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) திருப்பூர் நூற்பாலையில் சில தொழிலாளர்கள் வேலை நீக்கம் .. .. | 134—138 |
| | (ஆ) கலசபாக்கம் தொகுதியில், ஒரு கிராமத்தில் விவசாயிகளின் நிலங்களை பொதுப்பணித் துறை எடுத்துக் கொண்டு நட்டயீடு கொடுக்காமல் இருத்தல் .. .. .. | 138—140 |

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980 .. 140
(ஆ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980) .. .. .. 140—175
(இ) பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1980) .. .. .. 176—210
(ஈ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1980) .. .. 210—211
7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் — 212

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1980, ஆகஸ்ட் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

“ அவையறிந்தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.”

பேசப்படும் சொற்களின் வகை முறைகளின் தன்மைகளை ஆய்ந்து, பொருள் வன்மைகளையும், இயல்புகளையும் உணர்ந்த நிலையான உணர்வுடன் காணப் படும் அவையின் நிலை உணர்ந்து அறிந்து பேசுதல் வேண்டும்.

### அனல் மின் நிலையங்கள்.

* **வினா எண் 98.—திரு. இல. பலராமன் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் புதிய அனல் மின் நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) மாநிலத்தில் நீர் மின்சக்தி உற்பத்திக்கான வளங்கள் அநேகமாக தீர்ந்து விட்டன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த புதிய அனல் மின் நிலையங்களை எங்கெங்கு அமைத்துக் கொள்ள அரசு திட்டம் இட்டிருக்கிறது. உற்பத்தி திறன் எவ்வளவு? எவ்வளவு செலவு ஆகும்? மத்திய அரசுக்கு அதற்கான அனுமதிக்கு எழுதப்பட்டு விட்டதா போன்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அதில் மேட்டூர் அனல் மின் திட்டம் ஒன்று. அது ஏற்கெனவே தயாரிக்கப் பெற்று 420 மெகாவாட் அளவிற்கு உற்பத்தி திறன் கொண்ட அந்தத் திட்டத்தை, மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப் பெற்றிருக்கிறது. அதற்கான ஒப்பு தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வட சென்னையில் 630 மெகாவாட் கொண்ட ஒரு திட்டத்தை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த செப்டம்பர் மாத இறுதிக்குள் மின் வாரியம் அந்த திட்டத்தின் நகலை அரசுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

அதே போல நெய்வேலியில் நிலக்கரியில் இருந்து தயாரிப்பதற்கென ஒரு அனல் மின் நிலையத்திற்கான அனுமதியை அவர்கள் ஏற்கெனவே மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அதிலே மேலும் 2 யூனிட் போட்டு 1,050 மெகாவாட்டாக அந்த திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பெறும் என்று எதிர் பார்க்கப்பெறுகிறது.

செலவுகளைப் பொறுத்தவரையில் மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு 165 கோடி ரூபாய் என்றும், வட சென்னைக்கு 253 கோடி ரூபாய் என்றும், நெய்வேலிக்கு—இப்பொழுது அனுமதி பெற்றிருப்பதற்கு 630 மெகா வாட்டுக்கு 358 கோடி ரூபாய் என்ற அளவிலும் கூடுதலாக போடப்பெறும் 2யூனிட்டுகளுக்கும் 210 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் மின் தேவைக்கென புதிய மின் நிலையங்களை நிர்ணயிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற அனல் மின் நிலையங்கள் முழு சக்தியோடு இயங்கவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா ? பொதுவாக அந்த மின் நிலையங்களுக்கென வாங்கப் பெற்றிருக் கிற இயந்திரங்கள் கடல் தண்ணீரைக் கண்டாலே அலர்ஜி ஏற்பட்டு பழுதா கின்றன என்று சொல்லப்படுவது உண்மையா ? அப்படி என்றால் அவற்றின் தீர்மானத்தில் ஏதோ தவறு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகையினால் அதை தடுத்து அந்த மின் நிலையங்கள் முழு சக்தியோடு உற்பத்தி செய்யும் அளவிற்கு நடவடிக்கை எடுக்க முதலில் அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன் ?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நம்மிடத் திலே மூன்று அனல் மின் திட்டங்கள் இருக்கின்றன. தமிழக மின் வாரியத் தின் கீழ் இயங்குபவைகளை சொல்கிறேன். ஒன்று, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம், இரண்டாவது எண்ணூர் அனல் மின் நிலையம், மூன்றா வது தூத்துக்குடி அனல் மின் நிலையம்

அதில் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அது கடந்த 27 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதிலே எந்த அளவிற்கு எதிர்பார்த்தோமோ அந்த அளவிற்கு உற்பத்தித் திறனைத் தருகிறது. எண்ணூர் அனல் மின் நிலையம்தான் எதிர்பார்த்த உற்பத்தி திறனை கொடுக்க வில்லை. அதிலுள்ள சில இயந்திரங்களுக்கு கடல் தண்ணீர் என்றாலும் சிறிது அலர்ஜி இருக்கிறது. மின் உற்பத்தியிலிருந்தேயும் கொஞ்சம் அலர்ஜி இருக்கிறது. அதிலிருக்கும் 2 யூனிட்டுகள் செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து தான் இறக்குமதி செய்யப்பெற்றன. மேலும் சில சாதனங்களை செகோஸ்லோ வாக்கியாவின் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பாரத் ஹெவி எலக்ட்ரிக் கல்ஸ் நிறுவனம் தயாரித்து அளித்திருக்கிறது. அவற்றில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அமைப்பில், இயக்கத்தில் (டிசைன் அண்டு ஆப்பரேஷன்) சில குறைபாடுகள் இருக்கின்றன. செக்கோஸ்லோவாக்கியா நாட்டிலே இத்தகைய குறைபாடுகள் இருப்பதாக அங்கிருந்து வந்த நிபுணர்களிட மிருந்து நாம் அறிகிறோம். அவர்கள் சில ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் நிச்சயமாக உற்பத்தித் திறனை, எதிர்பார்க்கிற உற்பத்தித் திறனை எட்ட முடியும் என்று எதிர் பார்க்கிறோம். தூத்துக்குடியில், இப்போதுதான் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது.

**திரு. செ. சிவசாமி :** திட்டங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப் படும் என்று சதா காலமும் மத்திய அரசு சொல்லிக்கொண்டே இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் வரவில்லை என்று குறை பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு பல திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசுக்கு ஏன் அனுப்பவில்லை ? இப்போது அனுப்பப்பட்டிருக்கிற திட்டங் களை விரைவுபடுத்த என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நிறையத் திட்டங்களை நாம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அண்மையில்கூட மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களை நேரில்

[1980 ஆகஸ்ட் 5,

சந்தித்தபோது மத்திய அரசு நிர்மாணித்து வருகிற கல்பாக்கம் அணுமின் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்றும் விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதுவும் போதாது என்று கூடங்குளத்தில் ஒரு அணுமின் நிலையம் தேவை என்றும் சொல்லியுள்ளார். தமிழ் நாடு அரசு நம் தேவையை நிறைவு செய்ய பல திட்டங்களை வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று. இரண்டையும் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் கொடுக்கப்படவில்லை.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட இருக்கிற இரண்டாவது மின் நிலையம் எப்போது முடிவடையும்? தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட இருக்கக்கூடிய இரண்டாவது மின் நிலையம் உற்பத்தி ஆரம்பித்தவுடன் அதன் உற்பத்தித் திறனால் தமிழ்நாட்டிலுள்ள மின் தட்டுப்பாடு அதன் மூலம் தவிர்க்கப்பட இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** 1979 ஆம் ஆண்டு முதலாவது இயந்திரம் இயங்க ஆரம்பித்து விட்டது. இரண்டாவது இயந்திரம் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். தூத்துக்குடி அனல் மின் நிலையம் உற்பத்தி செய்தால் மட்டும் நம் தேவை நிறைவேறும் என்று நம்புவதற்கு இல்லை. நம் தேவை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. அதனால்தான் புதிய மின் உற்பத்தித் திட்டங்களைப் போட்டு நாம் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

**திரு. ரா. உமாநாத் :** புதிய மின் நிலைய அமைப்புத் திட்டங்களை நம் மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். மின் உற்பத்தியும் விநியோகமும் மத்திய அரசின் அதிகார வரம்பில் மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை மத்திய அமைச்சர் அடிக்கடி வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நம்முடைய அரசின் நிலை என்ன? சமீபத்தில் நடந்திருக்கக்கூடிய கூட்டத்தில், மத்தியில் நடந்திருக்கக்கூடிய கூட்டத்தில் அந்த நிலையை வலியுறுத்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற அதே உணர்வின் அடிப்படையிலேதான் மத்திய அரசு கூட்டிய மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மின் உற்பத்தித் திட்டங்களை



1980 ஆகஸ்ட் 5]

மத்திய அரசு ஏற்றுக்கொள்வதால் எந்தவிதப் பலனும் ஏற்பட்டு விடாது என்ற கருத்து தமிழ்நாடு அரசால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில்கூட, அதை ஒரு யோசனையாகச் சொன்னோமே தவிர அதை வலியுறுத்தவில்லை என்ற அளவில்தான் எங்களுக்கு பதில் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சினை இப்போது இல்லை.

**திரு. ப. நெடுமாறன் :** எல்லா மாவட்டங்களிலும் புதிய அனல் மின் நிலையங்கள் அமைக்கும் பரிசீலனை ஆராயப்பட்டு வருகிறது. ஏற்கெனவே மதுரை மாவட்டத்தில் இருந்த சமயநல்லூர் அனல் மின் நிலையத் திட்டம் முந்தைய அரசினால் விற்கப்பட்டுவிட்டது. அதை மீண்டும் ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சமயம் வரும்போது கவனிக்கலாம்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** அமைச்சர் அவர்கள் புதிதாக பல அனல் மின் நிலையங்கள் ஏற்படுத்த இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் முழுப்பயன் கொடுக்காமல் இருக்கின்றன. ஆகவே தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம், எண்ணூர் அனல் மின் நிலையத் திட்டம் இவற்றை முழுமையாகத் துவங்க ஆவன செய்வார்களா? எண்ணூர் மின் நிலையம் நாசவேலை காரணமாக சேதப்பட்டு மின் உற்பத்தி தடைப்பட்டது என்று சொல்கிறார்களே, அதுவும் உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நாசவேலை காரணம் என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நாம் எத்தகைய இயந்திரங்களை வைத்திருக்கிறோமோ அதே போல் இந்தியா முழுவதும் இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். எல்லா இயந்திரங்களும் அதே மாதிரித்தான் குறைவான மின் உற்பத்தி தந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நாசவேலை என்று யாரேனும் சொல்வார்களானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை தயவுசெய்து நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களில் இருக்கிற அத்தனை சாதனங்களும் இந்திய அரசால் நடத்தப்படுகிற நிறுவனங்கள் தருபவை. அதேபோல் நம்முடைய நாட்டைச் சேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்கள் தான் இவற்றை அமைத்து உருவாக்கி இயக்கி வருகிறார்கள். ஆகவே நாமே செய்வதால் சில நடைமுறை குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நாம் படிப்படியாக நிவர்த்தி செய்து நம்மை நாமே நிலை நிறுத்திக் கொள்கிற அளவிற்கு வளர வேண்டும். அப்படி வளருகிற கட்டத்தில் ஏற்படுகிற பிரச்சினையால் இந்த உற்பத்திக் குறைவே தவிர வேறு அல்ல.

[1980 ஆகஸ்ட் 5

(முற்பகல் 9-10)

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் நல்ல முறையில் செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் நேரில் போய்ப் பார்த்தபோது, அங்கிருந்த அதிகாரிகள், இது மிகவும் பழைய காலத்திலே அமைக்கப்பட்டது, பழுதடைந்திருக்கிறது, மெஷின்கள் மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இதே போன்று சுற்றுப்புற காம்பவுண்ட் சுவர் இல்லாமல், அங்கே நிலக்கரி திருடு போகின்ற மோசமான நிலை இருக்கிறது. எனவே இதையெல்லாம் சீரமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல், 27 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. நாம் எதிர்பார்க்கின்ற உற்பத்தியைக் கொடுக்கின்றது என்று சொன்னேனே தவிர, சிறந்த முறையில் உற்பத்தித் திறனைக் கொண்டது என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பல்வேறு நிலைகளைக் கணக்கில் கொண்டு, பழைய 2 மெஷின்களை மாற்றி, 2 புது மெஷின்கள் அதாவது 60 மெகாவாட் கொண்ட புது மெஷின்களை அமைப்பதற்கான திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அநேகமாக இந்த மாதக் கடைசியில் மின்சார வாரியத்திலிருந்து அதற்கான திட்டம் அரசுக்கு வருமென்று எதிர்பார்க்கிறோம். ஏற்கெனவே, இரண்டு 15 மெகா வாட் கொண்ட அந்த இயந்திரங்களை மாற்றி, இரண்டு 60 மெகா வாட் கொண்டதாக மாற்றியமைக்கப்பட இருக்கிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் தேவைப்படுகின்ற ஒன்று. நம்முடைய கல்பாக்கம் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான ஹெவி வாட்டரை கொடுப்பதிலே மத்திய அரசுக்கு தயக்கம். மற்றும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி கொடுப்பதிலும் தயக்கம். வேகன்கள் அளிப்பதிலும் தேக்கம். இப்படிப்பட்ட நிலையில், மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஆர்ப்பாட்டத்திலும் தயக்கம்.



1980 ஆகஸ்ட் 5]

**கொங்கணாபுரம் ஒன்றியப் பகுதியில் 'ராகிமால்ட்' தொழிற்சாலை.**

***வினா எண் 99.—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 'ராகிமால்ட்' தொழிற்சாலை ஒன்று துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கணாபுரம் பகுதியில் மூலப்பொருளான ராகி ஏராளமாக விளைகின்றது. அங்கே ஒரு தொழிற்சாலை நிறுவினால், அந்தப் பகுதியிலே உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கு வேலை கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசு இனி மேலாவது அங்கே ராகி மால்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் அரசிடம் ஏதும் திட்டமில்லை. அதுபற்றி அப்படிப்பட்ட தொழிற்சாலை துவக்க வேறு எவரும் சான்றிதழ் கேட்கவில்லை. யாராவது முயற்சி எடுத்தால், நிச்சயமாக அரசு ஆதரவு நல்கும்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக விளையக்கூடிய மரவள்ளிக் கிழங்கை வைத்து, குளுகோஸ் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 5

### சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை.

வினா எண் 100—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை இயங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் ?

(ஈ) விரிவு படுத்தும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) 1976-77 ஆம் ஆண்டு சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை ஒன்று வனத் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. 1977 முதல் 1979 வரை 302 முதலைக் குட்டிகள் இப்பண்ணையில் வளர்க்கப்பட்டு உள்ளன. மூன்று வயது வரையிலான முதலைக்குட்டிகள் மேல் வளர்ச்சிக்காக நீர்த்தேக்கங்களில் விடப்படுகிறது.

(இ) வருமானம் இதுவரையில் அரசிற்கு இல்லை. வர்த்தக ரீதியில் இப்பண்ணை ஆரம்பிக்கப்படவில்லை. முதலைகளை அதன் அழிவின்று காத்து புகலிடம் அமைத்து வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(ஈ) 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 2.40 லட்சம் செலவில் இப்பண்ணையின் மேம்பாட்டிற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் உதவியுடன் மேற்படி திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : அந்தப் பண்ணை வர்த்தக ரீதியில் நடத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முதலை இனத்தை விருத்தி செய்வது என்று மட்டுமில்லாமல் வர்த்தக ரீதியில் நடத்தப்பட்டால் அரசுக்கு லாபம் வருகிற நிலைமை இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அழிந்து கொண்டிருக்கும் முதலை இனத்தை வளர்க்க வேண்டுமென்ற முயற்சியில் அது துவக்கப்பட்டிருக்கிறது. பெருமளவில் முதலைகள் வளர்க்கப்பட்டால் வர்த்தக ரீதியாக உள்நாட்டுத் தேவைகளையும் சிறப்பாக வெளிநாட்டுத் தேவைகளுக்கும்கூட பயன்படுத்துகிற அளவுக்கு பெரிய அளவில் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க இயலும்.



1980 ஆகஸ்ட் 5]

திரு. என். எஸ். வி. சித்தன் : இது மாதிரி முதலைப் பண்ணை, பாம்புப் பண்ணை என்று ஆரம்பிப்பதால் பயன் இருக்கிறதா ? இதற்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவழிப்பதை விட்டுவிட்டு பயனுள்ள மீன் பண்ணைகளை ஆக்கபூர்வமான வழிகளில் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ? முதலைப் பண்ணையில் ஏதாவது முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பாம்புப் பண்ணை என்பது நூற்றுக் கணக்கில் வளர்க்கப்படுகின்ற பண்ணையாக அமைக்கப்படவில்லை. ஏதோ ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக ஒரு பண்ணை அமைக்கப்பட்டு பாம்புகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள உயிரினங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அது பாதுகாக்கப்படுகிறது. ஆனால் முதலைப் பண்ணை என்று சொல்லும்போது அதனுடைய தோல் முக்கியமாக மக்களுடைய உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிற முக்கியமான அடிப்படைப் பொருளாக இருக்கிறது. அதனால் அது பலனுள்ளதாக இருக்கிறது. ஆனால் முதலை கண்ணீர் வடித்ததை நான் இதுவரை பார்க்கவில்லை ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்திருந்தால் அவர்கள் சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : கோட்டையைச் சுற்றி அகழி நல்ல அமைப்பில் இருக்கிறது அதிலே முதலைகளை வளர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கோட்டையைச் சுற்றி இருக்கிற அகழிகளில் முதலைகளை வளர்ப்பது ஒரு காலத்தில் படையெடுப்பைத் தடுப்பதற்காகப் பயன்பட்டிருக்கலாம். இன்றைக்கு அது தேவையில்லை.

திரு. இரா. கருப்பையா : கல்லணை அருகில் கிளிக்கோட்டை என்ற இடத்தில் முதலைப் பண்ணை இருக்கிறதா ? அதன் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முன்னாலே இது போன்ற ஒரு கேள்விக்கு இந்த மன்றத்தில் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த விவரம் இல்லை, தனியாகக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

திரு. விஜய ரெகுநாத தொண்டைமான் : இயற்கையாகவே பல இடங்களில் முதலைகள் வளர்ந்து வருகின்றன. உதாரணமாக மதுரை மாவட்டத்தில் அமராவதி டாங்கில் முதலைகள் வளர்ந்து வருகின்றன. ஆற்றி

லும் முதலைகள் வளர்ந்து வருகின்றன. இந்தமாதிரி இடங்களில் முதலைகளை வளர்த்தால் கொஞ்சம் சவுகரியமாக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் முதலைப் பண்ணைகளை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** திட்டம் நீர்த் தேக்கங்களில் முதலைகளை வைத்து வளர்ப்பது அல்ல. குறுகிய அளவில் தண்ணீரை வைத்து சிறு குட்டிகளாக வளர்த்து மூன்று வருஷங்கள் ஆன பிறகு நீர்த்தேக்கங்களில் விடுகிறோம். நீர்த்தேக்கங்களில் முதலைப் பண்ணைகள் வளர்ப்பது என்ற பிரச்சினை எழவில்லை.

**திரு. த. வேணுகோபால் :** சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை அமைத்து முதலைகளை வளர்க்கும் திட்டத்தை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது முதலைகள் வளர்க்க நல்ல இடமாக இருப்பதால் அதை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 2.40 லட்சத்திற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று முன்னாலேயே தெரிவித்தேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** அமைச்சர் அவர்கள் அணைக் கட்டிலுள்ள முதலைகளைப் பற்றிச் சொன்னார்கள். நாட்டில் பல முதலைகள் ஆளைப் பிடித்துச் சாப்பிடும் அளவுக்கு இருக்கின்றனவே, அதை வளர்க்காமல் தடுக்க நடவடிக்கை உண்டா ?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அணைக்கட்டு முதலியவற்றிலே இருப்பதைப்பற்றித்தான் இங்கே கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, முதலையினுடைய தோல் பல வகைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள் என்ன என்ன வகைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதோடு முதலையினுடைய கறி உபயோகப்படுத்தப்படுகிறதா என்பதையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் :** தலைவர் அவர்களே, முதலையினுடைய தோல் எந்த எந்த இனத்திற்குப் பயன்படுகின்றது என்ற விவரமான





குறிப்பு இப்போது என்னிடத்திலே இல்லை ஆனா[illegible] அது உபயோகப்படுத்தப் படுகிறது, அதற்கு கிராக்கி இருக்கிறது என்ற த[illegible]வல் [illegible]ருக்கிறது. ஆனால் கறியைப் பற்றிய ஆராய்ச்சியில் நாங்கள் இன்னும் [illegible]ல.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** தலைவர் அவர்களே, 3 ஆண்டுகள் வளர்ச்சி பெற்ற முதலைக் குட்டிகளை நீர்த் தேக்கத்திலே விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறபோது கிராமங்களிலே பெரும் பீதி ஏற்படுகிறது. கண்மாயிலே முதலை வந்து விட்டது என்று பயப்படுகிறார்கள். அதேமாதிரி நீர்த்தேக்கங்களிலிருந்து ஒரு முதலை தப்பி வந்து விட்டதாக செய்தியெல்லாம்கூட வந்தது. அப்படி தப்பி வந்துவிடாமல் இருக்கக்கூடிய முறையிலே அதைத் தடுக்க நடவடிக்கைகள் என்ன என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, நீரிலே யிருந்து முதலை வெளியே வந்துவிட்டால், தரைக்கு வந்து விட்டாலே தன் சக்தியை இழந்து விடுகிறது. ஆகவே அதிலே ஆபத்தில்லை. நீரிலே இருக்கிற போது தான் அதற்கு அதன் சக்தி இருக்கும். நீரிலே முதலைகளால் மாத்திரமல்ல, எத்தனையோ விடமான ஆபத்துக்கள் இருக்கின்றன ஆகவே இதனாலே ஆபத்துக்கள் இராது.

ஏலகிரி மலைப்பகுதியில் சுற்றுலா விடுதி.

***.வினா எண் 101 திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி மலையில் சுற்றுலா வாரியத்தின் மூலம் ஒரு புதிய உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ):—சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஏலகிரி மலையில் ரூ. 1.00 இலட்சம் செலவில் ஒவ்வொன்றிலும் இரண்டு அறைகளுடன் கூடிய இரு குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இவைகள், பராமரிப்பதற்காக வனத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், இக்குடில்களில் வசதிகளை செய்யும்பொருட்டு 1980-81-ல் ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு சுற்றுலா வாரியத்தின் மூலம் உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

[1980 ஆகஸ்ட் 5

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் நிறைய பயணிகள் வந்து தங்குகிறார்கள். அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு உணவு விடுதி வசதியாக இல்லை. ஆகவே அங்கே உணவு விடுதியை நடத்த அரசாங்கமே முன்வருமா ?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, ஏலகிரி மலை என்பது வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற ஒரு நல்ல முக்கியமான மலை வாசஸ்தலம். அது ஏழைகளின் உதகமண்டலம் என்ற சிறப்புப் பெயரைக்கூடப் பெற்றிருக்கிறது. அங்கே உணவு விடுதி நடத்துவதற்காக வியாபார ரீதியிலே தனிப்பட்டவர்கள் முன்வந்தால் அதற்குத் தேவையான உதவிகளை சுற்றுலாத் துறையோ அல்லது அரசோ முயற்சிகளை இயன்ற வரையில் செய்வது பற்றி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூமாபட்டி தாய்-சேய் நலவிடுதி கட்டிடம்.

*** வினா எண் 102 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்** துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம் கூமாபட்டி கிராமத்தில் தாய்-சேய் நலவிடுதி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் நான்கு ஆண்டுகள் ஆகியும் செயல்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை. அந்தக் கட்டடத்தில்தான் தாய்சேய் நல நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிற அளவுக்கு அதிகாரிகள் தவறான தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருப்பது எனக்கு மன வேதனையைத் தருகிறது. அது

* * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விடுதி நடக்கிறதா இல்லையா என்று கேளுங்கள்.



1980 ஆகஸ்ட் 5]

**திரு. இரா. தாமரைக்கனி :** அமைச்சர் நேரடியாக வந்து பார்த்து அந்த குறைபாடுகளை நீக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பின்னால் குறிப்பிட்டவைகள் எல்லாம் நீக்கிவிட வேண்டாம் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து அவற்றை நீக்கிவிட வேண்டும். அது நடத்த வேண்டும் என்ற ஆர்வத்திலே கேள்விகள் கேட்கப்பட வேண்டும். தொகுதிக்குப் பயனுள்ளதாக கேள்விகள் கேட்கப்படவேண்டும்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, உங்களிடமிருந்து எங்களுக்கு ப்ரொட்டக்ஷன் வேண்டும். என்னவென்றால், அந்தத் தாய் சேய் நலவிடுதி நான்கு ஆண்டுகளாக சுத்தமாக இல்லை என்பது அங்கத்தினருடைய நிலை. ஃபங்ஷன் ஃபங்ஷன் பண்ணவே இல்லை என்பது உறுப்பினருடைய நிலை. ஃபங்ஷன் பண்ணுகிறது என்பது அமைச்சருடைய பதில். இதில் ஃபேக்டைப் பொறுத்த வரையில், ஒன்றுக்கொன்று காண்ட்ரடக்டரியாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது ? எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வரலாம். அதிகாரிகள் தப்பாகக் கொடுத்திருந்தாலும் அதற்கு அமைச்சர்தான் பொறுப்பாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் கேள்வி கேட்ட உறுப்பினரோ ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருக்கிறார். எனவே அவர் பிரிவிலேஜ் மோஷன் மூவ் செய்ய முடியாது. உண்டு என்று அமைச்சர் சொல்கிறார் ; இல்லை என்று அங்கத்தினர் சொல்கிறார். இதற்கு என்ன வழி என்று தலைவரவர்கள்தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையைப் பொறுத்தவரையில் இருக்கின்ற நிலைமையை நான் சொல்கிறேன். கேள்வி கேட்பதற்கு அங்கத்தி னருக்கு உரிமை இருக்கிறது. அதிகாரிகள் தருகின்ற பதிலை வாங்கி அமைச் சர் இங்கே தருகிறார். எனவே அவர் சொல்வது, இந்தச் சபைக்கு மட்டும் அல்ல, நாடு முழுவதற்கும் இந்தச் செய்தி அவையின் வாயிலாக அறிவிக்கப் படுகிறது. ஆகவே, அமைச்சர் சொல்வதைத்தான் நாம் நம்பியாக வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, கூமாபட்டியில் தாய்-சேய் நலவிடுதி நடந்து கொண்டிருப்பதாகத்தான் இங்கே குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், கடந்த நான்காண்டுக் காலமாக, அது கட்டி முடிக்கப்பட்டு, மகப்பேறு உதவியாளரைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் அது கொஞ்சம் ஊருக்குத் தள்ளியிருக்கிறது. மேலும், மகப்பேறு உதவியாளர் ஊரிலேயே குடியிருக்கிறார். ஆகவே, நடக்காததுபோல் தோற்றம்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அளிக்கக்கூடும். அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெருந்துறை காசநோய் பிரிவுக்கு மானியம்

*வினா எண் 103--திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தில் பெருந்துறை காச நோய் பிரிவுக்காக ஒரு படுக்கைக்கு ஆயிரம் ரூபாய் வீதம் செலுத்தி வருவது உண்மையா ?

(ஆ) பத்து படுக்கைகளுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் செலுத்த வந்துள்ள பரிந்துரைக்கு அரசு அனுமதி அளித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இந்த ஊராட்சி ஒன்றியம் பெருந்துறை காச நோய் பிரிவிற்கு வருடாவருடம் ரூபாய் 1,000 நன்கொடையாக வழங்கி வருகிறது.

(ஆ) இல்லை.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே பெருந்துறை காச நோய் மருத்துவமனை, தமிழகத்திலே ஒரு முக்கியமான பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. அதற்குப் போதிய அளவிற்கு நிதியில்லாத நெருக்கடி பெருகி வந்து கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு முனிசிபாலிட்டியும் அந்த மருத்துவமனைக்கு நன்கொடை கொடுப்பது என்ற ஒரு ஏற்பாடு இருக்கிறதா ? அப்படிப்பட்ட ஏற்பாடு இருந்தால் ஒவ்வொரு நகரசபையாலும் எவ்வளவு நன்கொடைகள் அந்த மருத்துவமனைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? கொடுக்காத முனிசிபாலிட்டிகளைக் கொடுக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, மூலக் கேள்வி ஊராட்சி ஒன்றியம் நன்கொடை அளித்து வருகிறதா என்பது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வி நகரசபைகளைப் பற்றியது. ஆனாலும், ஊராட்சி ஒன்றியங்கள், சேலம், கோவை, தர்மபுரி போன்ற



மாவட்டங்களில் ஒவ்வொரு வருஷமும் அவர்கள் ஆயிரம் ரூபாயை ஒவ்வொரு ஒன்றியத்தின் சார்பாகவும் காசநோய்ப் பிரிவுக்காகக் கொடுத்து வருகிறார்கள். கடந்த 1977-78-ல் 37 ஒன்றியங்களின் சார்பாக 37,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் 46 ஒன்றியங்களின் சார்பாக 46,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 41 ஒன்றியங்களின் சார்பாக 41,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல இங்கே காசநோய் பிரிவுக்காக இந்த மருத்துவமனை இயங்கி வருவதால், காசநோயைக் குணமாக்க வேண்டுமென்றால் ஏறக்குறைய 15 மாதங்கள் பிடிக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காச நோய்ப் பிரிவைக் கொண்ட மருத்துவமனையில், இரண்டாயிரம் ரூபாயாக அதை அதிகரிக்க வேண்டுமென்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், காசநோய்க்கு வேண்டிய சிகிச்சை அளிக்கவும், சத்துணவு கொடுக்கவும் ஒரு மாதத்திற்கு 300 ரூபாய் ஒரு நோயாளிக்குச் செலவாகிறது என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்கனவே அரசு பதில் கொடுத்து, ஆயிரம் ரூபாயே போதும் என்று ஆணையிட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து படுக்கைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற பணத்திற்காக, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வருகிற நோயாளிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அது சரியாக அனுசரிக்கப்படவில்லையென்ற புகார்கள் வந்திருக்கின்றனவா ? அப்படி வந்திருக்கின்றன என்றால், அவைபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் வரவில்லை. ஆனாலும், ஊராட்சி ஒன்றியங்கள், எவை, எவை நன்கொடை அளித்து அதன் மூலமாக இத்திட்டம் செயல்பட்டு வருகிறதோ, அந்த ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வருகிற நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, சிகிச்சை செய்யப்படுகிறது. புகார்கள் எதுவும் வரவில்லை.

**மறைமலை நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்.**

*வினா எண் 104—**திரு. கெ. சொக்கலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங் கொளத்தூர் ஒன்றியம் மறைமலை நகரில் உள்ள விவசாய நிலங்கள் எந்த அடிப்படையில் ( MMDA )யால் எடுத்துக்கொள்ளப்படுகிறது ?

(ஆ) விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் நிலத்தின் விலையை உயர்த்தி கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மறைமலை நகர் பகுதியி லுள்ள விவசாய நிலங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் ஒப்புதல் தரப்பட்டுள்ள 'மறைமலை நகருக்கான வளர்ச்சித் திட்டம் 1991'ன் படியே நில எடுப்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) நிலத்தின் விலையை நில எடுப்புச் சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட அதிகாரியால் சட்டத்திலுள்ள விதிகள்படி நிர்ணயிக்கப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திற்கு உட்பட்டு நிலத்தைக் கையகப்படுத்துகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நிலத்தினுடைய உரிமையாளர் களுக்கு தற்சமயம் இருக்கிற மார்க்கெட் மதிப்பு கொடுக்கப்படவில்லையென்ற புகார் இருக்கிறதா ? புகார் இருந்தாலும், இல்லையென்றாலும், இன்றைய தினம் உள்ள மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில், அந்நிலங்களுக்குண்டான மதிப்புத் தொகையை அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு என்ன விலை நிர்ணயிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறதோ, அதன்படி நிர்ணயிக்கிறார்கள். அதோடு 15 சதவிகிதம் 'சொலேஷியம்'. வேறு தருகிறார்கள்.





**தாமிரவருணி நதியிலிருந்து பாசன வசதி அளிக்கும் திட்டம்.**

*வினா எண் 105—**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'திருநெல்வேலி மாவட்டம் தாமிரவருணி நதியின் தொடர்பு கோடகன் வாய்க்கால் மூலம் கங்கைகொண்டான் மற்றும் குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வந்து பாசனவசதி அளிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இத் திட்டம் தலைமைப் பொறி யாளரின் ஆய்வில் உள்ளது.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது பல ஆண்டு காலமாகக் கூறப்படுகிற திட்டமாகும். இத் திட்டத்தின்மூலம், ஆலங்குளம், ஓட்டப்பிடாரம், திருநெல்வேலி ஆகிய 3 தொகுதிகள் பயன்பெறும் என்பதாலே நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தினை அரசு செயல்படுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது. விரைவிலே நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொாணம் :** தலைவர் அவர்களே, திருநெல் வேலியிலுள்ள தாமிரபரணி தொடர்புள்ள பல கால்வாய்களுக்கு முறை யாக தண்ணீர் விடாத காரணத்தாலே, தண்ணீர் போதாத அடிப்படையிலே, இந்த ஆண்டு, இந்தப் பருவத்தில், கிட்டதட்ட 50,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களிலுள்ள பயிர்கள் தீய்ந்து கருகியுள்ளது பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தப் பிரச்னைபற்றி அரசுக்கு முழுமையாகத் தகவல் வரவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்னை அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்று தாங்கள் தயவுசெய்து தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** குறிப்பிலே இருக்கட்டும். வேண்டுமென்றால், அமைச்சர் நோட்டீஸ் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** 50,000 ஏக்கரிலே பயிர் நிச்சயமாகத் தீய்ந்து விடவில்லை. அதீதமாக ஒரு கருத்தைப் பரவவிடுவது நல்லதல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** குறிப்பேட்டிலே இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** அப்படி எல்லோருமே வேறு விதமான கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படுமேயானால், கருத்துக்கள் சரியாக இருக்காது. தாமிரபரணி நெல்லை மாவட்டத்திலேயே தொடங்கி, நெல்லை மாவட்டத்திலேயே முடிகிறது. ஆனால், இவர் எந்தக் குறிப்பிட்ட . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 50,000 ஏக்கர்கள் தீய்ந்து கொண்டிருக்கின்றன என்றால், பொதுமக்கள் அனைவரும் இங்கே வந்திப்பார்கள். இன்னும் வரவில்லை. ஆகவே, பிரச்சினை இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். அவைக் குறிப்பில் இருப்பதால் பாதகம் ஒன்றும் இல்லை.

## சிழ்க்கோம்பைத் திட்டம்.

*வினா எண் 106—**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் சிழ்க்கோம்பைத் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) 'சிழ்க் கொம்பைத்திட்டம்' எனப்படும் திட்டம் பரிசீலனையில் இல்லை. எனினும் திண்டுக்கல் வட்டம் காடல்வாவி என்னும் கிராமத்தில் சின்னக்கோம்பையாற்றில் கண்மாய் அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (சிறு பாசனம்) ஆய்வில் உள்ளது.



**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சின்னக்கோம்பைத் திட்டம் அரசின் ஆய்வில் இருப்பதாகக் கூறினார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப சிழ்க்கோம்பைத் திட்டம், அன்றையதினம் நீர்ப் பாசனத் துறை அமைச்சராக இருந்து மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு இந்தத் திட்டம் நல்ல திட்டம், பயனுள்ள திட்டம், எனவே அரசு இதனை நிறைவேற்றித் தரும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார். எனவே தற்போது நீர்ப்பாசனத் துறை அமைச்சராக பொறுப்பேற்று இருக்கும் மாண்புமிகு அண்ணன் அவர்கள் இதைக் கவனித்து, அதை நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, சின்னக் கோம்பைத் திட்டம்தான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் சிழ்க்கோம்பைத் திட்டத்தைப்பற்றி எந்தவிதமான குறிப்புகளும் காப்பா இல்லை. மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் பார்வையிட்ட பிறகு ஏதாவது உத்தரவு கொடுத்திருப்பாரேயானால், அது திரும்பவும் அரசின் பரிசீலனையில் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான உதவித் தொகை.

*வினா எண் 107—**திரு. என். பழனிவேல்**, **திரு. ஜி. மூர்த்தி** } மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்திலுள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு தற்போது கடைபிடித்துவரும் புத்தகம் வழங்கும் முறையை மாற்றி முன்பு போலவே பணமாகவே கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, இந்த அரிசனங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு முன்பெல்லாம் பணம் கொடுத்து வந்தார்கள், புத்தகம், சிலேட்டு போன்றவைகளை வாங்குவதற்கு. ஆனால் கடந்த

சில ஆண்டுகளாக புத்தகம் கொடுப்பது என்று சொல்லி. அவர்களுடைய
பரிட்சைகள் எல்லாம் முடிந்தபின்னால்தான் கொடுக்கின்ற நிலைமை இருக்
கிறது. ஏழை மாணவர்கள் பள்ளிக்கூடம் திறந்த உடனே, மற்ற பையன்கள்
எல்லாம் புத்தகங்களை வாங்கியதைப் பார்த்து, தங்கள் பெற்றோர்களிடம்
தொந்தரவு செய்து புத்தகத்தை வாங்கிவிடுகிறார்கள். எனவே அரசாங்கம்
கொடுக்கின்ற பணம் வீணாகிவிடுகிறது என்பதையும், இன்னும் சில பள்ளி
களில், பள்ளிகள் திறந்து 2 மாதங்கள் ஆகியும் இன்னும் கொடுக்கவில்லை.
எனவே அரசு பரிசீலனை செய்து உடனடியாக அதைப் பணமாகக் கொடுத்
தால் உதவியாக இருக்கும். அதைப் பற்றி அரசு முடிவெடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறியதைப்போல, இதுபோன்ற புகார்கள் வந்ததன் பேரில் அரசு மாணவர்களுக்கு புத்தகங்களுக்குப் பதிலாக மீண்டும் உபகாரச் சம்பளம் தருவதற்கு பரிசீலனை செய்து வருகிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல அதைப்போன்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளது. மாணவர்களுக்கு புத்தகங்கள் இப்போது அளிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் மாணவர்களுக்கு புத்தகங்களைத் தவிர, உபகாரச் சம்பளம் தருவதற்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதை ஏற்கனவே நான் கூறினேன்.

**திரு. எஸ். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களில் இன்றைய தினமும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அரசுக்கு குறிப்பிட்ட இதுபோன்ற புகார்கள் இதுவரை வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்ன புகார்கள் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கும் பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கும் மூன்றாவது வகுப்பு வரை இலவசமாக புத்தகங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை ஐந்தாவது வகுப்பு வரையில் படிக்கின்ற மாணவர்களுக்கும் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 3-வது வரையில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் கொடுக்கப்படும் என்று கல்வித் துறை ஏற்கனவே அறிவித்து, அது வழங்கப்பட்டு வருகிறது. பொதுப் பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் போன்றவர்களுக்கு 4 முதல் 10 வரையில் பயிலும் மாணவர்களுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. பாபு ஜனார்த்தனம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார் குறிப்பாக எல்லா மாவட்டத்திலும் இருக்கிறது. வடாற்காடு மாவட்டம் செய்யாறு பகுதியில் உள்ள பள்ளிகளில் கூட புத்தகங்கள் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், பணமாகக் கொடுப்பது என்பது பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். அதன் மீதான முடிவு உடனடியாக எடுக்கப்பட்டு, உடனடியாக பணம் கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிரமங்களை அந்தத் துறையின் இயக்குநர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அதைக் கருத்தில் கொண்டு அந்தச் சிரமங்களைக் களைவதற்கான வழிவகைகளை அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

**திருமதி தா. இராசாம்பாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகங்கள் தாமதமாக விநியோகிக்கப்படுகின்றன என்கிற ஒரு குறை இருந்தபோதிலும், ஆத்தூர் போன்ற நகரங்களில் புத்தகங்கள் வந்தும் அவை மாணவர்களுக்கு அளிக்கப்படாத நிலை இருக்கிறது. 90 சதவீதம் வருகை உள்ள மாணவர்களுக்குத் தான் புத்தகங்கள் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அப்படி வராத மாணவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது என்றும், அத்தகைய புத்தகங்கள் திருப்பி அனுப்பப்படும் என்றும் சொல்கிறார்கள். இது மாவட்ட கல்வி அலுவலரிடம் கேட்டபோது அவர் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்குத்தான் இந்த நிபந்தனை இருக்கிறது என்றும், புத்தகங்கள் வழங்குவதற்கு இந்த நிபந்தனை இல்லை என்றும் சொல்கிறார். ஆனால் தலைமை ஆசிரியர்கள் 90 சதவீதம் வருகை தந்த மாணவர்களுக்குத்தான் புத்தகம் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

தற்போது 75 சதவீதம் வருகை இருந்தால் தேர்வுகளுக்குச் செல்லலாம் என்ற நிலை உள்ளதுபோல், இந்த புத்தகம் வாங்கிக்கொள்வதற்கும் வைக்க அரசு முன்வருமா? 90 சதவீதம் வருகை இருந்தால்தான் புத்தகம் வழங்க வேண்டும் என்று அரசாணை இருக்கிறதா என்கிற தகவலையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தகங்கள் வழங்கும் முறையை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக பணம் கொடுக்க அரசு முன் வருமா? புத்தகம் கொடுப்பதில் காலதாமதம் மிக மிக ஏற்படுவதால், கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல், ஆண்டு கடைசியில் கூட கொடுக்கப்படும் நிலை வருகிறது. அதை நிறுத்திவிட்டுப் பணமாகக் கொடுக்க முன் வந்தால், ஜூன் மாதத்தில் பள்ளி திறந்தார்கள் என்று சொன்னால், ஆகஸ்ட் மாதத்திற்குள் புத்தகங்கள் வாங்கி விடமுடியும். ஆகவே, பணமாகக் கொடுக்கும் முறையை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலிக்கிறது என்று ஏற்கனவே அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன, பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் புத்தகங்கள் வாங்கிப் படிக்க முடியாது என்கிற நிலை உள்ளதால் தான், புத்தகம் வழங்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்து இருக்கிறது. என்னுடைய தொகுதியில் திருத்துறைபூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களில் இன்னும் புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்து, அது குறித்து அமைச்சர் அவர்களிடத்தில் கூட நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இதுவரையில் புத்தகம் வரவில்லை என்று நேற்று கூட தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, அந்த மாணவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை அளித்து புத்தகம் வாங்கிக்கொள்வதற்கு வசதி செய்து தரப்படுமா? இதற்கு அமைச்சர் அவர்கள் அவசர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் கொடுத்த புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, அரிசன மற்றும்



பழங்குடி நல இயக்குநர் அவர்களுக்கு உத்தரவிட்டு இருக்கிறேன். அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கும் திட்டம் நல்லதொரு திட்டம். ஆனால் அது சரிவர நடக்கவில்லை என்கிற புகார் நீண்டநெடுநாட்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. இதற்குத் தடையாக இருப்பவர்கள் யார்? அவர்கள்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இரண்டாவதாக, பணமாக வழங்குவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் ஒரு 10 நாட்களுக்குள் அதற்கான ஒரு முடிவை எடுத்து, புத்தகம் வழங்குவதற்கு பதிலாக பணமாகக் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவரவர்களே, மாணவர்கள் பழைய புத்தகங்களைக்கூட வாங்கிக்கொள்ளலாம். அதை பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் கொடுத்தால் புது புத்தகங்களாகத்தான் வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நீங்கள் பணமாகக் கொடுத்து விட்டால் அது 'காலத்தில் செய்த உதவி'யாக இருக்கும். இரண்டாண்டுகளாக இதுபற்றிய சர்ச்சை இருந்துகொண்டிருக்கிறது. அரசின் பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்றால் எத்தனை ஆண்டுகளாக இன்னும் பரிசீலனையில் இருக்கும் என்று தெரியவில்லை. இந்த ஆண்டு மாணவர்கள் புத்தகங்களை விலைக்கு வாங்கிக்கொண்டாலும் அதற்கு ஈடாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டதுபோல் பணம் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணம் வழங்குவது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். பரிசீலனை முடிந்த பிறகுதான் மற்றுமுள்ள நடவடிக்கைகள்.

**திரு. என். பழனிவேல்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கேட்ட கேள்விகள் அத்தனைக்கும் 'பரிசீலனை' என்றுதான் பதில் சொல்லியிருக்கிறார். அதில் மாற்றம் இல்லை. சென்ற ஆண்டுகூட இப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப் [illegible]) அதற்கு ஒரு பரிகாரம் காண்பதற்காகத் தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். வேறு எப்படி மாற்றிச் சொல்ல முடியும்? பரிகாரம் காணத்தான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. என். பழனிவேல் :** காலம் கடந்து பரிசீலனை செய்வதால் எந்த விதமான பயனும் இல்லை. இப்போது ஆகஸ்ட் மாதம் வந்துவிட்டது. காலாண்டு பரீட்சையும் வரப்போகிறது. இன்னும் புத்தகங்கள் கிடைக்க வில்லை. ஆகவே, அரசாங்கம் இதிலே இரக்கத்தோடு கவனம் செலுத்தி, இன்றோ அல்லது நாளையோ முடிவை அறிவித்தால் நல்லது. அந்த மக்களின் பாராட்டைப் பெறும்; முடிவை அறிவிப்பார்களா என்றும் அறிய விரும்பு கிறேன்.

(பதில் இல்லை).

விவசாயிகளுக்கான வாரச் சட்டம்

* கு. கா. வி. எண் 57—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கான 75-25 வாரச்சட்டத்தை உடனடியாக அமுல் படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 75-25 வாரச் சட்டத்தை அமுல் நடத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. 26—4—1980 முதல் அந்த உத்தரவுகள் அமுலுக்கு வந்துவிட்டன.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, 75-25 சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 26—4—1980-லிருந்து அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எந்த நிலச்சுவாந்தார்களும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. அதுபற்றி அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, எந்தச் சட்டம் வந்தாலும் அதனால் சிலருக்கு பாதகம் இருக்கத்தான் செய்யும்; பாதிக்கப்படுவார்கள். ஆனால் அரசுக்கு அதுபற்றி உரிய நேரத்தில் செய்தி வந்தால் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.



**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது என்று நிலச்சுவாந்தார்கள் மறுக்கிறார்கள். அவர்கள் மறுக்கிறார்கள் என்று அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அந்தப் புகார் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை. ஏதாவது புகார் இருந்தால், உறுப்பினர் தெரிவித்தால், அரசு அதை கவனிக்கும்.

**திரு. செ. இராமலிங்கம் :** தலைவரவர்களே, 75-25 வாரச் சட்டம் தமிழ்நாடு முழுவதும் அமுல் செய்யப்படுகிறதா? குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இன்னும் பழைய முறையிலேயே, 60-40 முறைப்படியே வசூல் செய்யப்படுகிறது அமைச்சருக்குத் தெரியுமா? அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு எல்லை எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த எல்லை வரையில் இந்தச் சட்டம் அமுலாகும். எங்காவது அமுல் நடத்தவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எல். இளையபெருமாள் :** சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை அமுல்நடத்த ஏதாவது தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இந்தச் சட்டத்தை மீறிய நிலச்சுவாந்தார்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, குத்தகை வாரச் சட்டத்தை செயல்படுத்த அதிகாரிகள் எப்போதும் இருக்கிறார்கள். ஆனால் எங்காவது தவறு நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறது. எந்தப் பகுதியிலாவது சர்ச்சை அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தால், தேவைப்பட்டால் அங்கே தனியாக கூடுதல் அதிகாரிகளை நியமிக்கவும் அரசு தயாராக இருக்கிறது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** தலைவரவர்களே, இப்போது நியாயவாரச் சட்டத்தை அமுல்நடத்த ஜில்லாவுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. ஆனால் திருச்சி, தஞ்சை போன்ற பெரிய மாவட்டங்களில் நிறைய தகராறுகள் ஏற்படுவதால் அங்கே அதிகமான கோர்ட்டுகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, இருக்கின்ற வழக்குகளை ஆராய்ந்து தேவைப்பட்டால் அதிகமாகப் போடுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் அமலில் இருக்கின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பெருவாரியான விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட சட்டங்களின் விவரம் தெரியாது. அதாவது தங்களுக்கு 75 பங்கு உரிமை என்ற இந்த சட்டத்தினுடைய விளக்கங்கள் அவர்களுக்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை உரிமை கொண்டாடப்போனால் உடனடியாக நிலத்திலிருந்து வெளியேற்றிவிடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. ஆகவே இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் பெரிய போஸ்டர்கள் தயாரித்து அதாவது குத்தகைதாரர்கள் நிலச்சுவான்தார்களுக்கு 25 அளந்தால் போதும் என்றும் 75 அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கின்ற பெரிய போஸ்டர்கள் தயாரித்து அவற்றை விவசாயிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள போலீஸ் ஸ்டேஷனிலே ஒப்படைத்து போலீஸ்காரர்கள் மூலமாக ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும். அதன்மூலம் குத்தகை விவசாயிகள் நன்மை அடைகின்ற வாய்ப்பு ஏற்படும். ஆகவே அமைச்சரவர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அரசினுடைய நல்ல சட்ட முன்வடிவுகள் சட்டமானதற்குப் பிறகு செய்தித்தாள்கள் அவற்றை நல்ல முறையிலே விளம்பரம் செய்கின்றன. ஆனால் சில நேரங்களில் குத்தகை விவசாயிகளுக்கு இந்த மாதிரி விவரங்கள் எல்லாம் தெரிவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட செய்திகளைப்பற்றி அந்த விவசாயிகள் அறிந்துகொள்வதற்காகத்தான் விவசாயச் சங்கங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய விளம்பரங்கள் எல்லாம் இருக்கின்றன. இவை போதவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையின்படி விளக்கங்கள் தருவதற்கு இந்த அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த 75, 25 வாரச் சட்டத்தைப் பொறுத்தவரையில் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற வகையிலே பாகுபடுத்தி செயல்படுத்துகின்ற வகையிலே பரிசீலனை செய்ய அரசு முயற்சி செய்து வருகின்றதா?





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 60, 40 சட்டம் தற்போது இல்லை 75, 25தான் அமலில் இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் பல இடங்களில் குத்தகைச் சீட்டுக்கள் 60, 40 என்ற விகிதத்தில்தான் இருக்கின்றன. ஆகவே அந்த குத்தகைச் சீட்டுக்களை 75, 25 என்ற விகிதத்தில் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அந்த வகையில் இன்ன தேதிக்குள் அந்த குத்தகைச் சீட்டுக்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று ஆணையிடுவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, அந்த குத்தகைச் சீட்டுக்கள் செல்லாது. ஆகவே 75, 25 என்ற விகிதத்தில் குத்தகைச் சீட்டுக்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவரவர்களே, சிதம்பரம் தாலுக்காவில் புத்தூர் என்ற கிராமத்தில் இந்தச் சட்டப்படி கொடுக்கப்படமாட்டாது என்று தகராறு செய்யப்பட்டது. அது குறித்து அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டும், அமைச்சரவர்களுக்கு அனுப்பப்பட்டும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை அமைச்சரவர்கள் அறிவார்களா? இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து உடனடியாக இந்தச் சட்டத்தின்படி கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்தச் சட்டம் பற்றி விவசாயிகள் அறிந்துகொள்கின்ற வகையில் போலீஸ் மூலமாக விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் சரியாகப் பதில் சொல்லவில்லை. அது குறித்து பதில் சொல்ல வேண்டும். அதோடு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே அரசாங்கத்தின் பத்திரிகைகள் மூலமாக முழுப் பக்க விளம்பரம் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, பயிரிடும் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதுதான் இந்த அரசினுடைய அடிப்படைக் கொள்கை. இந்தச் சட்டம் குறித்து செய்தித்தாள்கள் முடிந்த வரையிலும் செய்திகளை எல்லாம் வெளியிடுகின்றன. இதுவும் போதவில்லை என்றால் விவசாயச் சங்கங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இது குறித்த விளம்பர சுவரொட்டிகளை காவல் துறையின் மூலமாக ஒட்டவேண்டும் என்று சொல்லப்படுவதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் எந்த அளவிற்கு இது குறித்து விளம்பரம் செய்ய முடியுமோ, அல்லது சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்ய முடியுமோ அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Amendment to Factories Act*

* *S.N. Q. No.* 58—THIRU J. HEMACHANDRAN : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government are aware that the workers are put to much hardship on account of the provisions in the Factories Act that 240 days actual work had to be turned out for the entitlement of leave with wages in each year; and

(*b*) the steps taken to modify the Act as recommended by the State Labour Advisory Board in 1975.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தின் 79-வது பிரிவிற்கு பொருத்தமான திருத்தங்கள் செய்ய ஒப்புதல் கேட்டு மத்திய அரசுக்கு, இந்த அரசு ஒரு கடிதம் எழுதியது. இந்தச் சமயத்தில் பம்பாயிலுள்ள இந்திய அரசின் தொழிற்சாலை ஆலோசனை பணி மற்றும் தொழிலாளர் நிலையங்களின் டைரக்டர் ஜெனரல் அவர்கள் (Director General, Factory Advice Service and labour Institutes Bombay) ஒரு 'கேலண்டர்' ஆண்டில், ஒரு தொழிலாளி ஊதியத்துடன் கூடிய விடுப்பு எடுப்பதற்கு 240 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்ற அருகதையை 180 நாட்களாக குறைக்கும் வகையில் பொருத்தமான திருத்தங்களைத் தொழிற் சாலை சட்டங்களில் கொண்டுவர மத்திய அரசுக்குத் தாமே பரிந்துரை செய் திருப்பதாக இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளார். டைரக்டர் ஜெனரல் (Director General) அவர்கள் தம்மிய திருத்தங்கள் தொழிலாளர்களுக்கு





இந்த அரசு செய்யக் கோரிய திருத்தங்களை விட அதிக அளவு பயனுள்ளவையாக அமைந்துள்ளன. 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய அரசு, தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 79(1)-ல் திருத்தம் செய்ய வேண்டும் என்ற இந்த அரசின் கருத்துரு ( prcp.sal ) இன்னும் பரிசீலனையில் இருப்பதாகக் கூறியது. இந்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த நேரத்தில், தொழிலாளர்கள் நல ஆலோசனைக் குழு கூட்டத்தில் 20 நாட்கள் வேலை செய்தால் 1 நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதற்கு முன்னாலேயே 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 180 நாட்கள் வேலை செய்தால் லீவு கொடுக்கப் பெற வேண்டும் என்கிற திருத்தத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது தொழிலாளர்களுக்கு அவ்வளவு சாதகமாக இருக்காது. அது மட்டும் அல்லாமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஸ்டேட் லேபர் ஆலோசனை போர்டில் இருக்கக்கூடிய முதலாளிகளின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த அத்தனை பிரதிநிதிகளையும் உட்பட்ட அந்தக் குழு செய்திருக்கிற ரெகமெண்டேஷன் அடிப்படையில் . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்வி நீண்டுகொண்டே போகிறது. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** சமீபத்தில் நடந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் கூட அவர்கள் 57 நாட்கள் வேலை செய்யவில்லை என்று காரணம் காட்டி அவர்களுக்கு லீவு கொடுக்கப் பெறவில்லை. இதேபோன்ற நிலை பரவலாக இருக்கிற காரணத்தினால் 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்ட் 5

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, வேலைக்கு வந்த முதல் ஆண்டில்தான் 240 நாட்கள் வேலை செய்தால் லீவு கொடுக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். அடுத்து வரும் ஆண்டுகளில் இந்த நாட்களின் அடிப்படையில் கொடுக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.

ஆனால் டைரக்டர் ஜெனரல், பேக்டரி அட்வைஸ் சர்வீஸ் அண்டு லேபர் இன்டிடியூட், பாம்பே அவர்கள் 180 நாட்கள் வேலை செய்தால் லீவு கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார். அந்த அடிப்படையில் 16 நாட்களுக்கு ஒரு நாள் லீவு கொடுக்க வேண்டும் என்று வருகிறது. அது மட்டும் அல்லாமல் மத்திய அரசு, அடுத்து வரும் ஆண்டுகளுக்கு இக்கால அளவு தேவையில்லை என்று சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களை மீண்டும் மீண்டும் நாம் கேட்டுக்கொண்டே வருகிறோம். தொடர்ந்து கேட்போம்.

வேலைக்கு சேர்ந்த முதல் ஆண்டில்தான் 240 நாட்கள், அல்லது 180 நாட்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்து வரும் ஆண்டுகளுக்கு லீவு கொடுப்பதற்கு இக்கால அளவு தேவையில்லை, அதன் அடிப்படையில் கொடுக்கக்கூடாது என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். சென்ற ஆண்டில் ஜுன் 1978-ல் வற்புறுத்தினோம். இந்த ஆண்டு மே மாதம் 1980-ல் கூட வற்புறுத்தி எழுதியிருக்கிறோம்.

In May 1980, the Government of IIdia have been again requested to reconsider their earlier decision on the requirement of the minimum period of attendance for eligibility for leave with wages in respect of years other than the first calendar year of service for workers.

ஆக இது மிக முக்கியமானது. ஒவ்வொரு ஆண்டுக்கும் என்று இருப்பதை விட, இந்த கால அளவு நிர்ணயம் முதல் ஆண்டுக்கு மட்டும்தான் இருக்க வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலையில் வேலை செய்யும் சுமார் 50,000 தொழிலாளர்களுக்கு இந்த லீவு ஊதியம் 10, 12 ஆண்டுகளாக கொடுக்கப் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இனிமேலாவது அவர்களுக்கு இந்த லீவு ஊதியம் கொடுக்க அரசு தக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 5]

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதற்கு தனிக் கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொாணம் : 18 நாட்கள் வேலை பார்த்தால் ஒரு நாள் லீவ் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி. ஆனால் சமீபத்தில் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் 55 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஆகவே அந்த 55 நாட்கள் வேலை நிறுத்தத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு அதை அடுத்த ஆண்டு கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று முறையீடு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, தொழிற்சாலைகள் சட்டத் திருத்தத்தைப்பற்றிய கேள்வி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொாணம் : ஆகவே அரசாங்கம் தலையிட்டு கொள்கை அடிப்படையில் அந்த நாட்களுக்கு அவர்களுக்கு லீவ் கொடுக்கவேண்டும் என்று மில் முதலாளிகளுக்கு அறிவுரை கூற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. எம். ஆறுமுகம் : தொழிற்சாலைகள் சட்டத்தில் 240 நாட்கள் வேலை செய்தால்தான் ஓய்வுச் சம்பளம் பெற தகுதி உண்டு என்றிருக்கிறது. அந்தச் சட்டத்தின் காரணமாக, அந்தச் சட்டத்திலுள்ள ஒரு ஷரத்தை மட்டும் பயன்படுத்திக்கொண்டு—அதுமட்டுமல்ல, க்ராஜுவிட்டி சட்டம், ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்ளிஷ்மென்ட்ஸ் ஆக்ட் போன்ற அனைத்துச் சட்டங்கள் பொறுத்தவரையிலும்கூட ஒவ்வொரு ஆண்டும் 240 நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்கு இருந்தால்தான் க்ராஜுவிட்டி பெற தகுதி உண்டு என்ற அந்தச் சட்டத்தை வியாக்கியானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு 240 நாட்கள் என்றிருப்பதை முதல் ஆண்டுக்கு மட்டும்தான் என்றும் பாக்கி உள்ள ஆண்டுகளுக்கு அப்படி கணக்கு எடுத்துக்கொள்ளத் தேவை இல்லை என்று முதலாளிகளுக்கு க்ளாரிபிக்கேஷன் அனுப்ப ஏதாவது ஆலோசனை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: முதலாளிகளுக்கு நாம் ஆலோசனை அனுப்ப முடியாது. சட்டத்தில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். 240 நாட்கள் அந்த ஆண்டு வேலை செய்தால் அடுத்த ஆண்டு லீவ் என்று. ஆகவேதான் சட்டத்தைத் திருத்துகிறோம்.

திரு. இரா. கருப்பையா: இருபது நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் லீவ் என்பது, 240 நாட்கள் ஆண்டு ஒன்றுக்கு வேலை செய்தாலும் பீடி, சுருட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த லீவ் வசதி இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு இந்த லீவ் வசதி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருப்பது, பாக்டரி சட்டத்திலுள்ள பிரிவைத் திருத்துவதுபற்றி.

திரு. மு. அம்பிகாபதி : பாக்டரி சட்டத்தைத் திருத்துவதற்காக அதற்கான குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தை நாமே அமல்படுத்தினால் என்ன? என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது லேபர், கன்கரன்ட் சப்ஜக்ட். ஆகவே அவர்களுக்கு அனுப்பி அவர்கள் அனுமதி பெறவேண்டும்.

திரு. என். வரதராஜன் : ஒரு தொழிலாளிக்கு சம்பளத்தோடு விடுப்பு என்று சொல்வது முதல் ஆண்டு 240 நாட்கள் வேலையில் இருக்கவேண்டும் என்பதை 180, 160 நாட்களாகக் குறைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் இப்போதிருக்கும் நிலை என்னவென்றால், பழனிசாமி அல்லது நாராயணசாமி அல்லது அப்துல் அசிஸ் அல்லது ஆறுமுகம் மூன்று மாதங்கள் வேலை செய்தவுடன் அவனை வேலையில் இருந்து நிறுத்திவிட்டு அடுத்து இரண்டு நாட்கள் சென்றபிறகு மீண்டும் வேலைக்குப் பதிவு செய்து கொள்கிறார்கள். ஆக அப்படி செய்து க்ராஜுவிட்டி வாமல் தடுத்துவிடுகிறார்கள். எனவே இடையில் விடுபட்டு போனதை அவர்கள் மீண்டும் சர்வீசுக்கு வரும்போது அந்த நாட்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தொழிற்சங்கங்கள் இப்படி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இன்டன்ஷனல் ப்ரேக், தடை செய்வதை



நிறுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அப்படி தொழிற்சங்கங்கள் எடுத்துக்கொள்ளும்போது தன்னாலான உதவியைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்களது அறிவிக்கைகள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்திலிருந்து, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையிலிருந்து விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தில் இருந்து ஒரு டன்னுக்கு 50 பைசா வீதம் வரி போட்டு அந்த விவசாயிகளிடமிருந்து வற்புறுத்தி வாங்குகிறார்கள் என்ற விஷயத்தைக் குறித்து—அதை ஆலைக்காரர்களே பிடித்துத் தருகிறார்கள் என்ற முக்கியமான விஷயத்தைக் குறித்து—தங்களிடத்தில் நான் சென்ற மாதம் 20 ஆம் தேதி அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். உடனடியாக அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டிருந்தேன். சென்ற மாதம் 20 ஆம் தேதி கொடுத்தது. இன்றைக்கு 15 நாட்களாகின்றன. விவசாயிகளை வற்புறுத்தி வாங்குகிறார்கள். நான்கு லட்சம் டன் கரும்பு என்றால் இரண்டு லட்சம் ரூபாய் ஒரு சங்கத்திற்கு ஆலைக்காரர்களே பிடித்துக்கொண்டிருப்பதை இந்த மன்றம் அனுமதித்துக் கொண்டிருந்தால் என்னாவது? இருபது ஆலைகள் இருக்கின்றன. ஆகவே அது குறித்து இன்றே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நாளையதினம் வருகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ரொம்ப சந்தோஷம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் திங்கள் பிறந்து ஐந்து நாட்கள் ஆகின்றது. சென்னை நகரில் வாழ்கின்ற மக்களுக்கு சர்க்கரை, மண்ணெண்ணெய் கிடைக்காத மோசமான நிலை இருக்கிறது. அரசாங்க நியாய விலைக் கடைகளில் நீண்ட க்யூவிலே, இன்று காலைகூட பார்த்தேன், அப்படி நிற்கின்றவர்களுக்கு எல்லோருக்கும் சர்க்கரை போடுவதில்லை; வெளிமார்க்கெட்டில் சர்க்கரை 8, 9 ரூபாய்

என்கிற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. போதுமான அளவிற்கு மண்ணெண்ணெய் அரசாங்கத்தின் கையிருப்பிலே இருந்தாலும், அது மக்களுக்கு கிடைக்காத சூழ்நிலை நிலவுகிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இதை ஒரு கவன ஈர்ப்பாகக் கொடுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கவன ஈர்ப்பாகக் கொடுத்தால் மாதக் கணக்கில் ஆகிறது ; ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்தால் வாரக் கணக்கில் ஆகிறது. ஆகவேதான் இதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது. இது முக்கியமான பிரச்னை ; இதனால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப் படுகின்றார்கள். எனவேதான் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவன ஈர்ப்பாகக் கொடுங்கள் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுங்கள். அவைகள் வரிசையாக வந்து கொண்டிருக்கின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஏற்கனவே, 7, 8 கொடுத்திருக்கிறேன்.

**திரு. சா. உமாநாத் :** தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப்படுவதாகச் சொல்லுகிறீர்கள். செஷன் எண்டுக்கு வருகிறது ; 12 ஆம் தேதி முடிய இருக்கிறது. ஆகவே, இந்த ரூலை கொஞ்சம் சஸ்பெண்ட் பண்ணி, இரண்டு மேலுக்கும் அனுமதிக்கலாம் என்று செய்தால் நல்லது.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றைப் பற்றிச் சொன்னார்கள். நேற்றையதினம்கூட * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாராளுமன்ற நடவடிக்கையைப் பற்றி இங்கே விவாதிக்கக் கூடாது. தனியாக கவன ஈர்ப்போ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுங்கள். திரு. மு. அம்பிகாபதி அவர்கள் கூறியவைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



### (ஆ) நடவடிக்கைச் சுருக்க வெளியீடு.

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் நம் சட்டமன்றப் பேரவையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு சம்பந்தமாகவும், அதற்கடுத்து தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு சம்பந்தமாகவும் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்படும் என்று சொல்லி, அதற்கான பெயர்களை அறிவித்தார்கள். இதை சட்டமன்றப் பேரவையின் செய்தித் தாள் நடவடிக்கை சுருக்கத்தில் தவறுதலாக மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தத் தவறுகள் என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்கான திருத்தம் இன்றைக்கு வெளியிடப்படும்.

(முற்பகல் 10-10)

### (இ) சட்டமன்ற உறுப்பினர்மீது ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் நடவடிக்கை.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** நான் எந்தவிதமான பாக்கியும் செலுத்தத் தேவையில்லை என்று ஏற்கனவே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் 515 ரூபாய் நான் கட்ட வேண்டுமென்று அதை வசூலிக்க நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னீர்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் தாலூகா அலுவலகத்திலிருந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலம் 515 ரூபாய் கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் மறுபடியும் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக தாங்கள் என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இதுபற்றி ஏற்கனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னுடைய அறைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10-30 மணிக்கு வந்தால் அதுபற்றிப் பேசலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** ஒரு சட்டசபை உறுப்பினரிடமிருந்து ரெவின்யூ ரெகவரி ஆக்ட்-படி வசூலிக்கலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பதவியில் இல்லாத போது நடவடிக்கை எடுத்திருக்கலாம். அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். உறுப்பினர் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்தால் அதுபற்றிப் பேசி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** இது 19—7—1980 ஆம் தேதி இடப்பட்டது தாசில்தார், மாயூரம், எஸ். ஞானகிராமன் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் இங்கு ஒரு பிரச்சினையை எழுப்பி ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் சில தொகையை வசூலிக்க நோட்டீஸ் வந்திருக்கிறது என்று அந்த நோட்டீசைக் கொடுத்திருக் கிறார்கள். அதன்படி. 23 ஆம் தேதி ஏப்ரல் மாதம் நம்முடைய அலுவலகத் திலிருந்து, சட்டப் பேரவை அலுவலகத்திலிருந்து மாயவரம் தாசில்தாருக்குக் கடிதம் போயிருக்கிறது. ஆகவே, அந்தக் கடிதம் திரும்பப் பெறுகிற வரையில் அவர்கள் இந்த நோட்டீசைக் கொடுத்துக் கொண்டேதான் இருப்பார்கள். தாங்கள் பார்த்து நடவடிக்கை எடுத்துவிட்டால் போதுமானது.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த ராஜமாணிக்கம் விவகாரம் பற்றி மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் வேடிக்கைக்கு மேல் வேடிக்கையாக வளர்ந்துகொண்டு போகிறது. இங்கே புகார் சொன்னது ஆர். ராஜமாணிக்கம், எம்.எல்.ஏ. நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருப்பது ஏ. ராஜமாணிக்கம், எம்.எல்.ஏ.-க்கு. ஆனால் ஏ. ராஜமாணிக்கம், எம்.எல்.ஏ. யார் என்றால் நாகப்பட்டனம் எம்.எல்.ஏ., என்று செயலாளர் சொல்கிறார். ஆனால் ஏ. ராஜமாணிக்கம், எம்.எல்.ஏ., குத்தாலம் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு குளறுபடிகள் இதிலே ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் விசாரிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றி 10-30 மணிக்கு என்னுடைய அறைக்கு வந்து பேசி மேல் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கீழ்ப்பெண்ணாத்தூரில், சிறுநாத்தூர் கிராமத்தில் சாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்குமிடையே மோதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 27—7—1980 அன்று கீழ்ப் பெண்ணாத்தூரில் சிறுநாத்தூர் கிராமத்தில் சாதி இந்துக்களுக்கும் அரிசனங் களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலினால் அப்பகுதி மக்களிடையே எழுந் துள்ள பதட்ட நிலையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. அம்பி காபதி, சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, எம். அப்பாதுரை, எம். ஆறு முகம், பொ. உத்திராபதி ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, கீழ்ப்பெண்ணாத்தூரிலே அரிசன மக்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே நடைபெற்ற கலவரத்தால் பலபேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களிலே தொடர்ச்சியாக நடைபெற்று இருக்கின்றன. ஊஞ்சனையிலே நடைபெற்றிருக்கிறது. மாயவரத்திலே நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு எதிராக அங்கே இருக்கின்ற சாதி இந்துக்கள் தாக்குதல் நடத்தியிருக் கிறார்கள். இப்படிப் பல இடங்களிலே சாதாரண ஏழை அரிசன மக்களுக்கு எதிராக சாதி இந்துக்கள் ஒன்று சேர்ந்துகொண்டு தாக்குவது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாயவரத்திலே அவர்கள்மீது தாக்குதல் நடைபெற்று தீ வைக்கப்பட்டிருக்கிறது. ஊஞ்சனையிலே மிகவும் வெட்ககரமான நிலைமை. ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று கூறிய பாரதி பிறந்த இந்த நாட்டிலே இப்படிப்பட்ட அவமானகரமான சம்பவம் நடைபெற்றிருப்பது வருந்தத் தக்கது. ஆகவே அரசாங்கம் மிகவும் துரிதமாக நடவடிக்கை வேண்டுமென்ற காரணத்தால் இந்தச் சம்பவத்தைக் குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிரேறன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் சிறுநாத்தூர் கிராமத்தில் சில நாட்களுக்கு முன்ட கிட்டிப்புல் விளையாடியபோது சாதி இந்துவான கோவிந்தபெருமாள் என்ற சிறுவனை அன்பழகன் என்ற அரிசனச் சிறுவன் அடித்து இருப்பதாக தெரிகிறது. கோவிந்தபெருமாளின் அண்ணன் துரை என்பவர் அவரது தம்பி

அடிக்கப்பட்டதைப்பற்றி அரிசனக் காலனி மக்களிடம் 27—7—1980 அன்று விசாரித்து இருக்கிறார். அப்போது சாதி இந்துக்கள் சுமார் 50 பேர் அரிசனக் காலனியில் நுழைந்து கற்களையும் கம்புகளையும் கொண்டு அரிசனங்களைத் தாக்கி உள்ளனர். அரிசனங்களும் கற்களையும் சோடாபுட்டிகளையும் கொண்டு எதிர்தாக்குதல் நடத்தியுள்ளனர். இக் கலவரத்திலே அரிசனங்கள் ஐந்து பேர்களும் சாதி இந்துக்கள் எட்டு பேர்களும் காயம் அடைந்துள்ளனர். இச்சம்பவங்களின் தொடர்பாக சாதி இந்துக்கள் 20 பேர் மீது கீழ்ப்பெண்ணாத்தூர் காவல்நிலைய குற்ற எண் 255/80-இல் இ.பி.கோ. 147, 323 ஆகிய பிரிவுகளின்கீழ் ஒரு வழக்கும் அரிசனங்கள் 30 பேர்கள் மீது குற்ற எண் 256/80-இல் இ.பி.கோ. 147, 148, 323, 324 ஆகிய பிரிவுகளின்கீழ் மற்றொரு வழக்கும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. காயம் அடைந்தவர்கள் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 32 பேர்கள் கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே மேற்கூறிய சம்பவம்பற்றி விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

### (அ) உறுப்பினர்களது அறிவிக்கை.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே எழுப்பப்படவேண்டுமென்ற முறையிலே 15 நாட்களுக்கு முன்பு சென்னை மாநகரத்திலே உள்ள நகரசுத்தித் தொழிலாளர்கள் எல்லாம் தங்களுக் பேட்டா ஒன்றரை ரூபாய் தரப்படவேண்டும், மற்ற சில கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவேண்டும் என்ற முறையிலே அவர்கள் போராடினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே உள்ளாட்சித் துறை பற்றிய மானியம் வந்தது, அப்போது பேசியிருக்கலாம், அதற்குப் பிறகு பல மானியக் கோரிக்கைகள் வந்தன, அதிலேயும் பேசியிருக்கலாம்.



(முற்பகல் 10-20)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளின்மீது பேசிக் கொள்ளலாம் என்று சொன்னால் அட்ஜேர்ன்மெண்ட் மோஷன் கொண்டு வரலாம் என்ற பிரிவோ, கால் அட்டென்ஷன் கொண்டு வரலாம் என்ற பிரிவோ நம்முடைய விதிகளில் தேவை இல்லை. அவைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும், அவைகளுக்குப் பரிகாரம் காண வேண்டும் என்பதற்காகத்தான் அட்ஜேர்ன்மெண்ட் மோஷன் கொண்டு வரலாம் என்ற பிரிவை வைத்திருக்கிறோம். 15 நாட்களாகியும் அது எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்து. அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றுவதாகச் சொல்கிறார்கள், அப்படியும் எடுக்கவில்லை. இதற்கு என்ன நோக்கம் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் உள்நோக்கம் எதுவுமே இல்லை, நல்ல நோக்கம்தான். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நிறைய வந்திருக்கின்றன. நிறைய தீர்மானங்களை நிறைய எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். உங்களுடையது தொழிலாளர் பிரச்னை சம்பந்தப்பட்டது. தொழிலாளர்கள் பிரச்னை பற்றி நிறைய வந்திருக்கின்றன. இங்கு மட்டும் அல்ல ; தமிழகத்தில் உள்ள பல்வேறு இடங்களைப்பற்றி வந்திருக்கின்றன ; ஒரு இடத்தில் 3,000 தொழிலாளர்கள், இன்னொரு இடத்தில் 1,000 தொழிலாளர்கள் என்று இப்படித் தொழிலாளர் பிரச்னைகள் வந்து இருக்கின்றன. அவைகளைக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களாக மாற்றி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். உங்களுடைய தீர்மானமும் அப்படி மாற்றப்பட்டு 12 ஆம் தேதிக்குள் வரும் ; என்றைக்கு வரும் என்று எனக்குத் தெரியாது.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, 12 ஆம் தேதிக்குள் வரும் என்று சொன்னதற்காக சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப்போல பலரும் கொடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். சென்னை மாநகராட்சி பற்றி நான் கொடுத்திருப்பது குறித்து தகவல் தயாராக இருக்கிறது. ஆனால் அது ஏன் வரிசையில் பின்னுக்குப் போகிறது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வரிசைக்கிரமமாகத்தான் வருகிறது. வரிசைக்குப் பின்னால் தள்ளும் எண்ணம் இல்லை ; முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்றுதான் பார்க்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றுதான் அனுமதிக்கப்படுவது என்றும், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இரண்டுதான் அனுமதிக்கப்படுவது என்றும் விதி இருந்தாலுங்கூட, நண்பர் திரு. உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, அவையில் அலுவல் முடிந்து கூட்டத்தொடர் முடிவடையும் நிலையில் ஆறு ஏழு நாட்கள் இருக்கும் நேரத்தில், சம்பந்தப்பட்ட பேரவை விதிகளைப்பற்றிப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டு வரலாம் என்பது, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம் என்பது நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை நீங்கள் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆய்வுக் குழுவைக் கூட்டி, தலைவர்களை எல்லாம் கலந்து என்ன செய்ய வேண்டுமோ அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க நான் முன்வருவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன.

1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஆர். இராதா.
3. திரு. நீலநாராயணன்.
4. திரு. க. இராமமூர்த்தி.
5. திரு. செ. முத்துசாமி.



1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. எஸ். முத்து.
2. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்.
3. திரு. டி. சந்தோஷம்.
4. சோ. ஆறுமுகம்.
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்.

1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. ஜேப்பியார்.
3. திரு. ஆர். டி. சீத்தாபதி.
4. திரு. அ. நல்லசிவன்.
5. திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன்

### ஆ. அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு மற்றும் ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கு திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப் பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. ஜே. சி. டி. பிரபாகரன், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate-க்கு) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

இ. மதுரை காமராஜ் பல்கலைக் கழக பேரவைக்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் மதுரை காமராஜ் பல்கலைக் கழக பேரவைக்குத் (Madurai Kamaraj University Senate) தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் 17—5—1980-ல் முடிவடைவதால் ஏற்படும் நான்கு வெற்றிடங்களுக்கு, கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளன :—

1. திரு. அ. ரகுமான்கான்.
2. திரு. கே. குப்புசாமி.
3. திரு. இ. ராமசுப்பிரமணியன்.
4. திரு. எம். ஆண்டி அம்பலம்.

முறைப்படி நியமனம் செய்யப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், மேற்கண்ட நால்வரும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஈ) சட்டசபையில் திரு. ப. ஜீவானந்தம் அவர்களின் படம் திறப்பு.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம். இந்த அவையில் திரு. முத்துராமலிங்கத் தேவர், திரு. காயிதே மில்லத் ஆகியோர்களுடைய படங்களைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தினுடைய தலைவரான மதிப்பிற்குரிய திரு. ப. ஜீவானந்தம் அவர்களுடைய படத்தை இங்கே திறப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் தேவையில்லை. அதைப்பற்றி அரசாங்கம்தான் முடிவு எடுக்கவேண்டும். இப்பொழுது படங்களை உடனடியாகத் திறக்க முடியாது. படங்களை ஆயில் பெயின்டிங்கில்தான் எழுத வேண்டும். அதற்கு இரண்டு மாதங்கள் ஆகும். ஆகவே, உடனடியாக இந்தத் திறப்பு விழாவில் அதைச் சேர்த்து வைத்துக் கொள்ள முடியாது. அரசாங்கத்திடம் முறைப்படி கோரிக்கைகள் வைத்து, அதன்பிறகு வாங்கிக்கொள்ளுங்கள். ஒவ்வொன்றும் அதுமாதிரிதான் வந்திருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே முறையைக் கையாண்டால், திரு. ஜீவானந்தம் படமும் வைக்கக்கூடும். ஆகவே, நான் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை.

* திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்த அவையில் ஆளும் கட்சியாக இருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். எதிர்க்கட்சியாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம். எது எப்படி இருந்தாலும், இருவரும் திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : நீங்கள் இரண்டு பேர் மட்டுமல்ல, தமிழகத்தில் தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபட்ட தோழர் ஜீவானந்தம் அவர்கள்கூட திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான்.

திரு. துரை முருகன் : உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன். எல்லோருமே திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான். ஆகவே. ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர் வரிசையில் உள்ள கட்சிகளாக இருந்தாலும் சரி, எல்லோரும் திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்தான் என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி. திராவிடப் பாரம்பரியம் என்ற ஒன்றை ஆரம்பித்து, அதற்கு முதுகெலும்பாக இருந்து அந்த இயக்கத்தை வளர்த்த வெள்ளுடை வேந்தர் தியாகராயர், அதற்குப் பிறகு திராவிடருக்கு ஆளத் தெரியும் என்று ஆட்சி பீடம் ஏறிக்காட்டிய பனகல் அரசர், திராவிடப் பெருங்குடி மக்களுக்கு பிற்பட்டோர் நலப் பட்டியல் உத்தரவு போட்ட முத்தையா முதலியார், அவருக்குஅடுத்து, கடல் கடந்து அந்தக் கொள்கையை பரப்பச் சென்ற சர் ஏ. பன்னீர்செல்வம், தொழிலாளர் வர்க்கத்தையும், திராவிடர் இயக்கத்தையும் வளர்த்த சிந்தனை சிற்பி சிங்காரவேலர். எனவே இப்படிப் பட்ட நம்முடைய மூதாதையர்கள், நமக்கு முதுகெலும்பாக இருந்து வாழ்ந்து காட்டியவர்கள், அவர்களுடைய படங்களை இந்த அவையில் திறந்து வைப்பதன் மூலம், அந்தப் படங்களை நாம் காணுகிறபோது, நம்முடைய

(திரு. துரைமுருகன்) [1980 ஆகஸ்ட் 5

தமிழகத்தின் வரலாற்றை, திராவிட இயக்கத்தின் பாரம்பரியத்தை நம்முடைய உள்ளத்தில் என்றென்றும் மங்காமல், மறையாமல் கொழுந்து விட்டு எரியும் வண்ணம் இருக்கச் செய்யும். அதைச் செய்ய இந்த அரசு முன்வருமா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் இதற்கும் நான் சொல்லவேண்டியிருக்கிறது. புதிதாக பதில் சொல்வதற்கு இல்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்புவது சரியல்ல. (திரு. ரா. கு. பெருமாள் எழுந்தார்) நீங்கள் எந்தப் படத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்கப்போகிறீர்கள்? (சிரிப்பு).

## கவன ஈர்ப்புகள்.

### (அ) திருப்பூர் நூற்பாலையில் சில தொழிலாளர்கள் வேலைநீக்கம்.

**திரு. ஆர். மணிமாறன்** : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 54-ன் கீழ்,—

"கோவை மாவட்டத்திலுள்ள திருப்பூர் நூற்பாலையில் 37 தொழிலாளர்களை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளதால் அவர்களிடையே நிலவும் அமைதியின்மை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலுள்ள திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட் என்ற நூற்பாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேசிய பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த திருவாளர்கள் சண்முகம் மற்றும் இராபர்ட் என்னும் இரண்டு தொழிலாளர்கள் மின்சார கம்பிகளை அறுத்துவிட்டதினால் ஆலைக்கு மிகுந்த இழப்பு ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டின் மீது விசாரணையை முன் வைத்து அவர்களை நிருவாகம் 6—7—1980 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. இதைத் தொடர்ந்து, அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் நிருவாகத்துடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தினர். எனினும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட இரண்டு தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அனுமதிக்க நிருவாகம்



1980 ஆகஸ்ட் 5] (திரு. எஸ். இராகவானந்தம்)

மறுத்ததையடுத்து தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 65 நிரந்தர தொழிலாளர்கள் உட்பட சுமார் 175 தொழிலாளர்கள் 9—7—1980 ஆம் தேதி முதல் உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

2. உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற் சங்கத்தைச் சார்ந்த 72 தொழிலாளர்களை தங்கள் வேலை நேரத்தில், வேலைசெய்ய மறுத்ததையடுத்து விசாரணையை முன்னிட்டு நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்தது.

3. இவ்வேலைநிறுத்தத்தின் மீது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள 74 தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு அனுமதித்து, மேல் நடவடிக்கைகளை கைவிட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், நிர்வாகம் இக்கோரிக்கைகளை ஏற்க மறுத்ததோடு, திருவாளர்கள் சண்முகம் மற்றும் இராபர்ட் ஆகிய இருவரும் வேலைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும், இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஏனைய தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டுமெனவும் கூறினர். திருவாளர்கள் சண்முகம் மற்றும் இராபர்ட் ஆகிய இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிக வேலை நீக்க உத்திரவு ரத்து செய்யப்பட்டு பணிக்கு அனுமதிக்கப்பட்ட பிறகு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், மற்ற தொழிலாளர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றும் கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் ஆலோசனை கூறினார். இதனை தேசிய பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கம் உட்பட அனைத்து தொழிற் சங்கங்களும் ஒப்புக் கொண்டனர். ஆனால் நிர்வாகம் இதற்கு இணங்கவில்லை.

4. 9—7—1980 முதல் 20—7—1980 வரை வேலைநிறுத்தத்தில் நேர்முகமாக ஈடுபட்ட 74 தொழிலாளர்களின் நடவடிக்கையால், மற்றைய பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் நிருவாகம் வேலை அளிக்க இயலவில்லை. இந்த நிலைமை 20—7—1980 வரை நீடித்தது. 20—7—1980 அன்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகும் அந்தத் தொழிலாளர்களை ஆலையின் உள்ளே நுழைவதைத் தடுக்க காவல் துறையின் உதவியை நிருவாகம் கோரியது. இதன் விளைவாக தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த 45 தொழிலாளர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். இதனால் மற்ற தொழிலாளர்கள் வேலைக்கு வரத் தடை ஏதுமில்லாததால் இதர தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் 20—7—1980 பகல் 12 மணி முதல் வேலை செய்து வருகின்றனர்.

(திரு. எல். இராகவானந்தம்) [1980 ஆகஸ்ட் 5

5. சுமார் 650 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களைத் தவிர மற்ற தொழிலாளர்கள் 20—7—1980 முதல் வேலைக்குத் திரும்பியதால் ஆலை ஓடுகிறது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட டி.என்.டி.யு.சி. தேசிய பஞ்சாலைத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைத் தொடர்கின்றனர். இத்தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் பணிக்குச் செல்ல தொழிற் சங்கங்களுடனும் நிர்வாகத்துடனும் கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் தொடர்பு கொண்டுள்ளார். இரு தரப்பினரும் தங்களுக்கு மேல் உள்ள அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பின் தங்கள் முடிவுகளை தெரிவிப்பதாகக் கூறியுள்ளனர்.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 6-ஆம் தேதியிலிருந்து இந்த நாள் வரை ஏறத்தாழ ஒரு மாத காலம் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்த ஒரே காரணத்திற்காக அங்கேயிருக்கிற தொழிலாளர்கள் 78 பேர் பழி வாங்குகின்ற ஒரு தீவிர நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டவர்களாக இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு தொழிலாளர்களின்மீது காட்டன் மில் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டை எடுத்து வைத்து, திரு. சண்முகம், திரு. ஆல்பர்ட் என்ற இரண்டு தொழிலாளிகளை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். 13 நாட்கள் ஆகியும் அந்தக் காட்டன் மில் நிர்வாகத்திலே யிருக்கிற அனைத்துத் தொழிற்சங்கங்களினுடைய பிரதிநிதிகளும் அனைத்துத் தொழிற்சங்கங்களுடைய தலைவர்களும் ஒன்றாகக் கூடி, நிர்வாகத்திடம் பேசி, சஸ்பெண்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களைப் பழி வாங்குகின்ற முயற்சியிலே ஈடுபடக் கூடாது என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அண்ணா தொழிற் சங்கப் பேரவை முன்னாலே நின்று, அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றாகச் சேர்ந்து தங்களுடைய உரிமையை எழுப்பியபொழுது கூட, அந்த நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் கேளாக்காதினராக இன்றையதினம் வரை இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் அவர்கள் ஆலோசனை கூறி, சஸ்பெண்ட் செய்யப்பட்ட இரண்டு தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டு, அதற்குப் பின்னால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற கருத்தை வெளியிட்டதற்குப் பின்னாலுங்கூட, நிர்வாகம் இதுவரையிலே நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பழிவாங்கப்பட்ட 71 தொழிலாளிகளுடைய உள்ளத்திலே ஆறாத குமுறலை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கிறது . . .



1980 ஆகஸ்ட் 5]

**திரு. அ. ரகுமான்கான் :** பாய்ன்ட் ஆஃப் ஆர்டர், கவன ஈர்ப்புத் தீர்மானமா, ஒத்திவைப்புத் தீர்மானமா ? இதே முறை எங்களுக்கும், எதிர்க் கட்சிகளுக்கும் பின்பற்றப்படுமா ?

**திரு. ஆர். மணிமாறன் :** ஆகவே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்து எழுப்புவதற்கு முன்னால் . . .

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கக் கொறடா திரு. மணிமாறன் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்கள் மாறுபாடானவை அல்ல என்ற காரணத்தாலோ, அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ நான் எதையும் சொல்லவில்லை. ஆனால், கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் கடைப்பிடிக்கப்படாமல் போய்விட்டால் அது நல்லதல்ல. எனவே, அவர் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலுள்ள வாசகங்களை மாத்திரம் படித்துவிட்டு, அமைச்சர் அதற்கான விளக்கம் சொன்னபிறகு, அதற்குரிய கேள்விகளைக் கேட்கலாம். அப்படி கேள்வி கேட்காமல், ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுவதைப்போல் பேசினால், நான் ஏற்கனவே சொன்ன ஒருநாளைக்கு இரண்டு மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக்கூட எடுத்துக் கொள்ள முடியாத ஒரு நிலைமை ஏற்படும். எனவே, தாங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்கள் அறிவுரைக்கு மிகவும் நன்றி. என்ன செய்வது? சிலபேருக்கு அந்தமாதிரி பழகிப் போயிற்று. திரு. ரகுமான்கான் அதற்குத் தலைவர், அதைப் பொறுத்த வரைக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** சபாநாயகர் நொண்டி சமாதானம் சொல்ல வேண்டாம்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நானாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசுகிறேன். கொண்டு வராமல் பேசுகிறவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களைப் பார்த்து நான் வினவுவது எல்லாம் 78 தொழிலாளிகள் பழி வாங்கப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களது குடும்பம், அவர்களுக்கு எப்பொழுது வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதேபோன்ற அச்சம் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் இருந்து கொண்டு வருகின்றது. வேலைநிறுத்தத்தில்

ஈடுபட்டால், அவர்களைப் பழி வாங்குகின்ற முயற்சியை நிர்வாகம் மேற்கொள்ளுமா என்ற வினா எழுந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** போவைத் தலைவர் அவர்களே, சமரச அதிகாரியினுடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-30)

**(ஆ) கலசபாக்கம் தொகுதியில், ஒரு கிராமத்தில் விவசாயிகளின் நிலங்களை பொதுப் பணித்துறை எடுத்துக்கொண்டு நட்டயீடு கொடுக்காமல் இருத்தல்.**

*** திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே,

"வடார்க்காடு மாவட்டம். திருவண்ணாமலை வட்டம், கலசபாக்கம் தொகுதியில் உள்ள வடபுழுதியூர் மதுரா முனியப்பன்தாங்கல் கிராமத்தில் பொதுப்பணித் துறையினர் பல விவசாயிகளுடைய நிலங்களை கால்வாய் வெட்ட எடுத்துக் கொண்டு நட்ட ஈடு கொடுக்காதது"

குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், வடபுழுதியூர் கிராமத்தில், சி. ஆண்டப்பட்டு குளத்திலிருந்து வடபுழுதியூருக்கும், வடபுழுதியூரிலிருந்து அகரம் சிப்பந்திக்குளத்திற்கும் கால்வாய் வெட்டுவதற்காக வடபுழுதியூர் கிராமத்தில் 10.03 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான விண்ணப்பம் ஜனவரி 1979-ல் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் (திருவண்ணாமலை) அவர்களால் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டது. கால்வாய் அமைக்கும் வேலைகளைத் தொடங்குவதற்காக, பொதுப்பணித்துறை இந் நிலங்களை 10—6—1976 அன்று எடுத்துக்கொண்டது. இதில், 6.55 ஏக்கர் நிலங்களுக்கான நில ஆர்ஜித உறுதி அறிக்கை அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு, நட்ட ஈட்டுத் தொகைக்கான காசோலை 16—6—1980 அன்று அளிக்கப்பட்டு விட்டது. மீத நிலங்களைப் பொறுத்தவரை, நிலம் கையகப்படுத்தும் சட்டம்



பிரிவு 4(1)-ன் கீழ் அறிக்கை 15—5—1979-ல் வெளியிடப்பட்டது. பிரிவு 5-ன் கீழ் நடத்த வேண்டிய விசாரணை முடிந்துவிட்டது என்றும், பிரிவுகள் 6 மற்றும் 7-ன் கீழ் உறுதி அறிவிக்கைகள் வெளியிடுவதற்கான செயற் குறிப்பை தனியே அனுப்பியிருப்பதாகவும் மாவட்ட வருவாய் அதிகாரி அரசுக்குத் தெரிவித்துள்ளார். இக்குறிப்புரை கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு கொடுப்பதில் பொதுப் பணித்துறையிலும் வருவாய் துறையிலும் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணங்கள்பற்றி பாசன தலைமைப் பொறியாளர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி ஆகிய இருவரிடமும் விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் இருந்து எறக்குறைய இந்தக் கால் வாய் வெட்டுவதற்காக 1976 ஆம் ஆண்டிலேயே கால்வாய் வெட்டத் தொடங்கி விட்டார்கள். அப்போதே நிலங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. நான்கு ஆண்டு காலமாக அவர்களுக்குத் தொகை வழங்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரும், வருவாய்த் துறையினரும் வேண்டும் என்றே காலதாமதம் செய்கிறார்கள். இதிலே 5 ஏக்கருக்கான பணம் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்கிறார். எத்தனை பேர்களுடைய நிலங்கள் எடுக்கப்பட்டன? எத்தனை பேர்களுடைய நிலங்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுவிட் டன? இன்னும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் என்பது பற்றி குறிப்பிலே இல்லை. மொத்தமாக எடுக்கப்பட்ட நிலங்கள் 10.03 ஏக்கர். அதில் 6.55 ஏக்கருக்குப் பணம் கொடுக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 39,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுவிட்டது. மீதி தரப்பட வேண்டியது 17,000 ரூபாய். சட்டப் பிரிவு 4(1)-ன் கீழ் நடவடிக்கை முடிந்து விட்டது. இப்போது பிரிவு 6, 7-ன் கீழ் நடவடிக்கைமேற் கொள்ளப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. அது முடிந்த உடனே இந்தப் பணமும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 5

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கி யிருக்கின்ற விவசாயிகளுக்கும் உடனடியாக பணம் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? நான்கு ஆண்டுகாலமாக பொதுப்பணித்துறையினரும், வருவாய்த் துறையினரும் வேண்டுமென்றே காலதாமதம் செய்து வருகிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சம்பந்தப் பட்ட பாசன தலைமைப் பொறியாளர், மற்றும் வருவாய்த் துறை அதிகாரி களிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டு இருக்கிறது. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய் யப்பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

* 1980 ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 5]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிற இந்தச் சட்டம் அனுபவ ரீதியாகப் பார்த்தால் அரசியல் நோக்கத் தோடு கொண்டுவரப்பட்டு இருக்கிறதோ என்று நான் அஞ்சுகிறேன். அர சியல் ரீதியாகவும் மட்டுமல்லாமல், இந்த மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடிய விவசாயிகள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கக்கூடிய நேரத்தில், விவசாயிகளை அச்சுறுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதோ என்றும் நான் ஐயப்படுகிறேன். மின்சாரத்தைத் திருடு வது என்பதும் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய கட்டணத்தைக் கட்டாமல் மின்சாரத்தை உபயோகிக்கவேண்டும் என்பதும் சட்டவிரோதமானது. திருடு வதைக் கண்டிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். திருடுவது மிகமிக குற்றமாகும். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் எங்களுக்கு இல்லை.

(முற்பகல் 10-40)

ஆனால் இதுவரையிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தத் திருத்தத்தை நம்முடைய மாநிலத்திலே, அதுவும் 9 இலட்சம் விவசாய பம்புசெட்டுகள் இருக்கக்கூடிய தமிழகத்தில், ஏறத்தாழ 1½ இலட்சம் பம்பு செட் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள்—ஏற்று அதிகமாக இருக்கும் என்று கருதுகிறேன்—கடந்த 2, 3 ஆண்டுகளாக ஒன்பது அம்சத் திட்டத்தை வைத்து போராட்டம் நடத்திக்கொண்டிருப்பதை கருத்தில்கொண்டு கொண்டு வந்திருக்கிறீர்கள். அவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டாமல் இருக் கிறார்கள். இதுவிஷயத்தில் இந்த அரசு இதுவரையில் தூங்கிக் கொண் டிருந்தது என்றுதான் நான் நினைக்கிறேன். என்ன காரணத்தால் இப்படி கட்டாமல் இருக்கிறார்கள் ? விவசாயிகளை, விவசாயச் சங்கத் தலைவர் களை அழைத்துப் பேசி, அதிலே ஒரு நிலை கண்டிருந்தால் அதன்பிறகு இந்த மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள் பணம் கட்டாமல் இருப்பதற் கான நிலை ஏற்பட்டிருக்காது. ஆனால் அரசாங்கத்தின் அணுகுமுறை சரி யாக இல்லாத காரணத்தால்தான் இரண்டாண்டு காலமாக இன்னும் குறிப் பாகச் சொல்லப்போனால் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக மின்சாரம் உப யோகிக்கக்கூடிய விவசாயிகள் பணம் கட்டாமலேயே இன்றைக்கு வளர்ந்து வருகிறார்கள். நான் குறிப்பிடக்கூடியதெல்லாம் இந்தச் சட்டம் அவர்களை அச்சுறுத்துவதற்காக, பயப்படுத்துவதற்காக கொண்டுவரப்படுகிறதோ என்று ஐயப்படுகிறேன். ஏனென்றால் இந்தச் சட்டத்திலே சில திருத்தங்களைக்

கொடுத்திருக்கிறீர்கள். மின்சாரத் திருட்டுக்கு தண்டனையை அதிகப் படுத்துவது அல்லது அவர்கள் கட்டக்கூடிய அபராதத்தை அதிகப்படுத்துவது என்பது அது வேறு விஷயம்.

ஆனால் மின்சாரத்தைத் துண்டித்தற்குப் பிறகு மீண்டும் மின்சாரத்தை இணைத்து, விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பம்புசெட்டை இயங்க வைக்கிறார்கள். பல இடங்களில் இயங்கி வருகிறது. அது எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக சில மாவட்டங்களில் டிஸ்கனக்ட் செய்யப்பட்ட சர்வீசை மீண்டும் இணைத்து ஓட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். உரிய நேரத்தில் இதைக் கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் இவ்வளவு நாள் அனுமதித்தீர்கள் ? ஏன் அவர்களை அழைத்து பேசி இருக்கக்கூடாது? இந்தப் பிரச்சினைபற்றி மின்சார அமைச்சரவர்கள் ரேடியோவில் உரையாற்றினார்கள். ஏறத்தாழ 25 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு வரவேண்டியது வராமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் கணக்கு குறைவானது. 25 கோடி ரூபாய் அல்ல ; இன்னும் 32 அல்லது 33 கோடி ரூபாய் அளவுக்கு மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கக்கூடிய நிலை எங்களுக்குத் தெரியும், அரசாங்கத்திற்கும் தெரியும். இந்த அளவுக்கு ஏன் விட்டு வைத்தீர்கள் ? விவசாயச் சங்கத்தின் கோரிக்கை என்ன ? அவர்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டவைவா ? ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம், 2 இலட்சம் பம்புசெட் விவசாயிகள் கட்டணம் கட்டாமல் இருப்பதற்கான காரணம் என்ன ? அதைப்பற்றி சிந்தனை செய்யாமல் அவர்களை பயமுறுத்துகின்ற வகையிலே, சர்வீசை துண்டிப்பு செய்வோம் ; மீண்டும் ஓட்ட முயற்சி செய்தால் உங்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும் அல்லது 500 ரூபாய் அபராதம் போடுவோம் என்று சொல்லி திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று நான் ஐயப்படுகிறேன்.

கன்னியாகுமரி பகுதியில் ஒன்று சொல்வார்கள். பெட்டி திருட்டுப்போவது வரையிலும் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, திருட்டுப் போனபிறகு முதலாளியிடம் அந்த வேலையாள் வந்து, கஜானா காலியாகி விட்டது என்று சொல்வானாம். எப்படி என்று முதலாளி கேட்க, பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்வானாம். பெட்டியைத் தூக்கிக்கொண்டு போனால் என்ன ? தாக்கோல் என்னிடம் தானே இருக்கிறது ! பெட்டியைத் திறந்துதான் பணம் எடுக்க வேண்டும் ; பெட்டியைத் திறக்க தாக்கோலுக்கு என்னிடம்தான் வரவேண்டும் ; ஆகவே கொண்டுவருவார்கள் என்று முதலாளி சொல்வானாம்.





**திரு. மி. வின்சென்ட் :** தலைவரவர்களே, கன்னியாகுமரியில் அப்படிப்பட்ட பழமொழியோ வழக்கோ இல்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** உங்கள் பக்கம் இல்லை ; வேறு பகுதியில். பெட்டி போய்விட்டது என்று சொல்லக்கூடிய வேலைக்காரனுக்கு முதலாளி சொல்லக்கூடிய பதிலைப்போலத்தான் அரசாங்கத்தின் நிலை இருக்கிறது. இதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்திருந்தால் இந்தப் பிரச்சனை வந்திருக்காது. ஆரம்பத்திலேயே விவசாயிகளுடைய கோரிக்கைகளைக் கேட்டு, பரிகாரம் கண்டிருந்தால் இந்த 25 கோடி அல்லது 30 கோடி ரூபாய் அளவுக்கு மின்சாரக் கட்டணம் கட்டாமல் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது. அந்த அளவுக்கு இந்த அரசு அவர்களை விட்டு வைத்திருக்கிறது என்று கூட சொல்லமாட்டேன் ; அவர்களை அனுமதித்திருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அப்படித் தீர்க்கப்படாமல் விடப்பட்டதன் காரணமாகத் தான் இந்தப் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்திருக்கக்கூடிய இன்றைய நிலையில் மின்சாரத்தைத் துண்டிக்கப் போகிறோம் என்று சொல்லப் படுகிறது. அவ்வாறு துண்டித்ததற்குப் பிறகு ஓட்டுவதற்கு முயற்சித்தால் மூன்று ஆண்டுக்காலம் சிறைத்தண்டனை கொடுக்கப்படும் என்று விவசாயிகளை மிரட்டுவது போன்றுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கின்றது.

மின்சாரத் திருட்டு என்று சொல்லுகிறோமே இது எப்படி நடக்கின்றது. நான் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தபோது இந்தச் சட்டமன்றத்திலே இந்த மின்சாரத் திருட்டு குறித்து ஏற்கெனவே சொல்லி இருக்கின்றேன். அதாவது மின்சாரத்தை அளப்பதற்கென்று மீட்டர் இருக்கின்றது. அந்த மீட்டர் மூலமாக மின்சாரத்தைத் திருடுகிறார்கள். ஆகவே அந்த மீட்டரைச் சரி செய்யுங்கள் என்று சொன்னோம். ஆனால் கடந்த நான்காண்டு காலமாக அது சரிசெய்யப்படவில்லை. மீட்டருக்குப் போடக்கூடிய கவர்களைப் பொறுத்தவரையிலே அவற்றை மெல்லிய தகடுகளின் மூலம் போடுகிறார்கள். அந்தக் கவர்களை அலுமினியத் தகடுகள் மூலம் போடுகிறார்கள். அதாவது 22 கே.ஜி., 16 கே.ஜி. கொண்ட மெட்டல் ஷீட்டிலே அந்தக் கிளோட் என்று சொல்லக்கூடிய கவர் போடுகிறார்கள். அப்படிப் போடப்படுவதால் மிக எளிதாக ஒரு குண்டூசி மூலம் ஒரு துளை போடுகிறார்கள். அதன் உள்ளே ஒரு சக்கரம் சுற்றிக்கொண்டிருக்கின்றது. போடப்பட்ட துளையின் மூலம் ஒரு குச்சியைச் சொருகி வைத்துவிட்டால் அந்தச் சக்கரம் நின்றுவிடுகிறது. அவ்வாறு சக்கரம் நின்றுவிடுவதால் மின்சாரம் போய்க்கொண்டே இருக்கின்றது. மீட்டர் ஓடுவதில்லை. இதை நான் சொல்லிக்கொடுக்கவில்லை, இந்தமாதிரி நடைபெற்று வருகின்றது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாற்றுத் தலைவரவர்களே, இது குறித்துத்தான் நான் சொல்ல நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். ஆகவே இந்தமாதிரி விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சொல்லிக்கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரியாமல் இந்தத் திருட்டு நடக்கின்றது என்று சொன்னால் நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன். இந்த மாதிரித் திருட்டு நடைபெறுவது அவர்களுக்கும் தெரிந்துதான் இருக்கும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, எனக்குத் தெரிந்த காரணத்தால்தான் இப்படிப்பட்ட சட்டமே கொண்டுவரப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மிக எளிதாக மீட்டர் சுற்றுவதை நிறுத்திவிட்டு மின்சாரத்தைத் திருடக்கூடிய நிலை இருக்கின்றது. அதாவது அந்த மீட்டரிலே இருக்கின்ற சக்கரம் சுற்றினால்தான் மீட்டர் ஓடும். அந்தச் சக்கரத்தை ஒரு குச்சி வைத்து நிறுத்திவிட்டால் மின்சாரம் ஓடிக்கொண்டிருக்கும், மீட்டர் ஓடாது. இப்படியே 22 நாட்களுக்கு இருக்கின்றது. மின்சாரத் துறையிலே இருந்து மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு வருகின்றபோது இந்தக் குச்சியை எடுத்து விடுகிறார்கள். அப்போது மீட்டர் ஓடுவதைப்போல இருக்கும். பிறகு அவர்கள் சென்றுவிட்ட பிறகு மீண்டும் அந்த குச்சியைச் செருகி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் மிக அதிகமான அளவிலே மின்சாரம் திருடப்படுகின்றது. இதனால் மின்சார வாரியத்திற்கு அதிகமான அளவிலே நஷ்டங்கள் வருகின்றன. ஆகவே இந்தத் திருட்டுக்களை எல்லாம் தடுக்க **வேண்டும்** என்று சொல்வதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை யாது. ஆனால் இதை எப்படித் தடுக்கவேண்டும்? இதற்கெல்லாம் சரியான மீட்டர் போடவேண்டும். மீட்டர் வாங்குகின்றபோது குறைவான விலையிலே கிடைக்கின்றதா என்பதைத்தான் பார்க்கிறார்களே தவிர திருட்டு நடைபெற முடியாத அளவுக்கு அந்த மீட்டர்கள் இருக்கின்றனவா என்று பார்ப்பதில்லை. நல்ல கெட்டியான தகடுகள் மூலம் செய்யப்பட்ட மீட்டர்களை இந்த மின்சார வாரியம் வாங்கி இருந்தால் இப்படிப்பட்ட திருட்டுக்களே நடைபெறாது.

மேலும் இப்படிப்பட்ட திருட்டுக்களுக்கு இந்த இலாகாவின் அடிமட்டத்திலே இருக்கக்கூடியவர்கள் சிலரும் உதவி செய்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு கீழே இருப்பவர்களே பலர் இதற்கு





உடந்தையாக இருக்கிறார்கள். இந்தத் திருட்டைப் பொறுத்தவரையில் சாதாரண விவசாய பம்ப் செட் பற்றி மட்டும் சொல்லவில்லை. இன்டஸ்ட்ரியல் சர்வீஸ் என்று சொல்லக்கூடிய இடங்களில் கூட இவை நடைபெறுகின்றன. சாதாரணமாக ஒரு மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மின்சாரபில் ஆகின்றது என்றால் ஐந்து ஆயிரம் ரூபாய்க்கு நான் செய்து தருகிறேன். மீதியுள்ள ஐந்து ஆயிரம் ரூபாயில் மாதத்திற்கு எனக்கு இரண்டு ஆயிரம் ரூபாய் கொடு என்று பேசிக்கொண்டு செய்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தடுக்கப்பட்டு இந்தமாதிரி திருட்டைச் செய்பவர்கள் தண்டிக்கப் படவேண்டும் என்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போது வரக்கூடிய இந்தச் சட்டம், அதாவது மூன்று ஆண்டு, ஐந்து ஆண்டு என்று தண்டனை கொடுக்கின்ற அளவிலே சட்டம் கொண்டுவந்தால் மட்டும் இவற்றைத் தடுத்துவிட முடியும் என்று கருதுகிறீர்களா? அது நிச்சயமாக முடியாது. You have to tone up your administration. அப்படி யாராவது இந்தத் திருட்டுக்கு உடந்தையாக இருந்தார்களானால் அவர்களை உடனடியாக டிஸ்மிஸ் செய்யவேண்டும். அப்படிப்பட்ட பனிஷ்மென்ட் டிட்டரன்ட்டாக இருந்தால்தான் இது தடுக்கப்படும். மேலும் மீட்டர் போடுகின்ற முறையிலேயும் தவறு இருக்கின்றது. மேலும் அடிமட்டத்திலே இருக்கக்கூடியவர்கள் மட்டுமல்லாமல் கொஞ்சம் உயர்ந்த மட்டத்திலே இருப்பவர்களும் கூட இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

(முற்பகல் 10.50)

இப்பொழுது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள். டிவிஷனில் ஒரு இடத்தில் மின்சாரத்தைத் துண்டித்து விட்டால், அதற்குப் பிறகு கனெக்ஷன் கொடுக்கலாமா வேண்டாமா என்று டிவிஷனல் என்ஜினியர் போய் பார்க்க வேண்டும். பார்த்து விட்டு அவர் ஒரு ஆண்டு காலத்திற்கு கனெக்ஷன் கொடுக்க முடியாது என்று உத்தரவு போடுவதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது என்றெல்லாம் இதிலே சொல்லியிருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன் எத்தனை மின்சார வாரியத்தின் என்ஜினியர்கள் அடிப்பட்டிருக்கிறார்கள்? மின்சாரம் டிஸ்கனெக்ஷன் செய்யப்பெற்று, வேண்டுமென்றே மீட்டர்களிலிருந்து மின்சாரத்தைத் தவறுதலாக உபயோகப் படுத்தும் இடங்களுக்குச் சென்று, அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று முயற்சி செய்த எத்தனை டிவிஷனல் என்ஜினியர்கள் அடிபட்டிருக்கிறார்கள், தீ வைத்து எரித்து விடுவோம் என்று பயமுறுத்தப் பட்டிருக்கிறார்கள், கட்டி வைத்து அடிக்கப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்ன

பாதுகாப்பு செய்திருக்கிறீர்கள்? இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தடுப்பதற்கென்று டிவிஷனல் என்ஜினியர்களை மட்டும் போட்டு விட்டால் மாத்திரம் இந்தப் பிரச்னை முடிந்து விடாது. ஆகவே இத்தகைய எதிர்ப்புகளைத் தடுப்பதற்கான முறையிலும் சட்டம் திருத்தப்பட வேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மீட்டர்கள் பொருத்தப்படுகின்றன. இத்தகைய மீட்டர்கள், மின்சார மோட்டார் உபயோகப்படுத்துபவனின் பிரிமைஸின் உள்ளேயே, கட்டடத்தின் உள்ளேயே வைக்கப் பெற வேண்டும். அப்போதுதான் ஏதாவது தவறு நடைபெற்றிருந்தால், Presumption is that the owner is responsible கட்டடத்தின் சொந்தக்காரன்தான் அந்தத் தவற்றுக்குக் காரணம் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் அத்தகைய ஏற்பாடுகள் உண்டா? இல்லை. அந்த மீட்டர்கள் மோட்டார்-பம்புசெட்டின் சொந்தக்காரனின் கட்டடத்திற்குள் வைக்கப்பெறாமல், வெளியிலே கம்பத்திலே பொருத்தப் பட்டிருக்கின்றன. இதனால் யார் வேண்டுமானாலும் மின்சாரத்தை டேம்பர் செய்யலாம். அவன் மோட்டாரைப் போட்டு விட்டு பிறகு பூட்டிக்கொண்டு போய்விட்டால், வெளியிலே இருக்கும் யார் வேண்டுமானாலும் டேம்பர் செய்யலாம், பியூசை எடுத்து விடலாம். இல்லை அதிலிருந்து ஒயர் இழுத்து நேரிடையாக மின்சாரத்தைத் தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்வதற்கு நிறைய வழிகள் இருக்கின்றன.

ஆகவே அப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுகின்றபோது அதற்கான அபராதத்தை மின்சாரத்தை உபயோகப்படுத்தக்கூடிய கன்ஸ்யூமரோ, அல்லது அந்த விவசாயியோதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருப்பதை மாற்ற வேண்டும். அப்படிப்பட்ட முறையிலே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய ஒரு வழி இந்தச் சட்டத்திலே இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையினால்தான் இந்தச் சட்டத்திலே பல குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறேன். இந்தக் குறைபாடு களை நீங்கள் சட்டம் போட்டு தீர்த்துவிட முடியாது. விவசாயிகளின் சங்கத் தலைவரை திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை அழைத்துப் பேசுங்கள். நிச்சயமாக அவர்கள் உரிமைகள் காக்கப்படும் என்று சொல்லுங்கள். அவர்கள் கட்டவேண்டிய பாக்கிகளைக் கட்டச் சொல்லி கேளுங்கள். 16 பைசாவாக இருந்ததை 14 பைசாவாகக் குறைத்திருக்கிறோம். 12 பைசாவாகக் குறைக்கச் சொல்கிறார்களா? முடிந்தால் சாத்தியம் இருந்தால் அதையும் செய்கிறோம்



என்9 சொல்லுங்கள். அப்படி 12 பைசாவாகக் குறைப்பதினால் எத்தனை கோடி நஷ்டம் ஏற்பட்டு விடும் என்று கணக்கிட்டு பாருங்கள் தெரியும். அதை விட 33 கோடியைக் கட்டாமல் இருக்கிறார்களே, அதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இது வேண்டுமா, அது வேண்டுமா என்று முடிவு செய்யுங்கள். இப்படி செய்வதை விட்டு எதையும் சட்டம் போட்டு தீர்த்துவிட முடியும் என்று நினைக்காதீர்கள்.

முன்பு ஒரு முறை முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க எல்லோரையும் அழைத்து ஒரு ஹைலெவல் கான்பிரன்ஸ் நடத்தினார்கள். நானும், புலவர் கோவிந்தன் அவர்களும் கலந்து கொண்டோம். அதிலே மின்சார வாரியத்தில் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் காட்ட, மின்சார கட்டண பாக்கிகளை வசூல் செய்ய என்ன நடவடிக்கை களை எடுக்கலாம் என்பது பற்றி ஆராய அத்தகைய குழுவினைக் கூட்டி னார்கள். நான் அப்போதே சொன்னேன். விவசாயிகளுக்குத் தண்ணீர் விடாமல் இருந்தால், விவசாயம் அதிகமாக பாதித்து விடும். மின்சாரம் இல்லை என்றால் அவர்கள் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாது. ஒரு ஆண்டுக்கு நீங்கள் மின்சாரத்தை தடை செய்தால், அந்த விவசாயி கரும்பு நட்டிருந்தால், நெல் பயிரிட்டிருந்தால், தண்ணீர் இல்லாமல் விளைச் சலே இருக்காது. ஆகவே, இந்த முறை விவசாயத்தைப் பொறுத்தவரை யில் ஏற்றது இல்லை. இண்டஸ்ட்ரீஸ் என்றால் அதன் தன்மை வேறு என்று சொன்னேன். அப்போதே கூட கேட்டேன், விவசாயச் சங்கத் தலைவரை ஏன் இந்தக் கூட்டத்திற்கு அழைத்திருக்கக் கூடாது என்று கூட கேட்டேன்.

ஆகவே, முதலமைச்சர் அவர்கள், விவசாயச் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை அழைத்துப் பேசி இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அதற்கான அடிப்படை காரணம் என்னவென்று ஆராய வேண்டும். அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் சொல்கிறார்கள். 'நாங்கள் மின்சார கட்டணத்தைக் கட்டமாட்டோம்' என்று. ஆகவே அவர்களை அழைத்துப் பேசி இதற்கு முடிவு கட்டவேண்டுமே தவிர, சட்டம் போட்டு அடக்குமுறைகளினால், சிறைச்சாலைகளைக் காட்டி பயமுறுத்து வதினால் எந்த வேலையும் நடைபெற்று விடாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி அறுத்த முறை இல்லையென்றால், அவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டு, போராட்டத்தில்தான் இறங்குவார்கள் என்று மட்டும் சுட்டிக்காட்டி, இந்தக் குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினால், நான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவை தாற்காலிகத் தலைவர் அவர்களே, 1910-ம் ஆண்டு மின்சாரச் சட்டத்தைத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் திருத்துவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்தைக் குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவிலே மின்சாரத் திருட்டை எப்படியாவது தடுப்பதற்காக, ஏற்கனவே 24 மணிநேரம் முன் அறிவிப்பு கொடுத்து சோதனை செய்யப்படவேண்டும் என்பதை ஒரு பொருத்தமான அவகாசம் கொடுத்து காலையிலிருந்து மாலைக்குள் அது செய்யப்படவேண்டும் என்றும் வீட்டில் இருக்கக்கூடிய பெண்டிர் தனி இடத்தில் ஒதுங்கிக்கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படவேண்டும் என்றும் இதிலே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவில் மின்சாரத்தைத் திருடுவதை தடை செய்வதற்குப் பொருத்தமான அதிகாரங்கள் மின்சாரத் துறையினருக்கு இருக்க வேண்டியது அவசியம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதிலே திருத்தமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற முக்கியமான ஷரத்து ஒரு டிவிஷனல் என்ஜினியருடைய அந்தஸ்துக்குக் குறையாத ஒரு நிர்வாக அதிகாரி நேரில் கண்டுபிடித்து ஒரு திருடு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால் அதற்காக வேறு பல தண்டனைகள் இருந்தாலும் ஒரு ஆண்டுக்கு குறிப்பிட்ட பயன்படுத்துபவருக்கு மின்சார இணைப்பைத் துண்டித்து வைப்பது என்று திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால், துண்டிக்கப்படுவதற்கு முன்னால் யார் பாதிக்கப்படுகிறார்களோ அவருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்று, அந்த உத்தரவு எழுத்துமூலமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று அதிலே கொடுக்கப் பட்டிருக்கிறது. அவ்வாறு ஒரு டிவிஷனல் என்ஜினியர் உத்தரவு பிறப்பித்தாலும்கூட அதை ஆட்சேபித்து பாதிக்கப்பட்டவர் நேரில் மனு செய்துகொள்வதற்கும் அந்த மனுவைப் பரிசீலித்து அதிலே உண்மை இருந்தால் டி.இ. உத்தரவை திருத்துவதற்கும் அல்லது ரத்து செய்வதற்குமான அதிகாரத்திற்கு இந்த மசோதாவில் இடம் இருப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு முறையீடு செய்வதற்கான வாய்ப்பு இருக்கவேண்டும்.

இந்த மின்சாரத் திருட்டு சம்பந்தமாக, ஒரு பொதுத்துறை நிறுவனமாக பயன்படக்கூடிய மின்சார நிறுவனத்தில் மக்களின் பணம் கோடிக் கணக்கான ரூபாய் பயன்படுத்தப்படும் நிறுவனத்தில் இருந்து திருடுவது என்பதை யாரும் அனுமதிக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அவ்வாறு திருடிக் கொண்டிருப்பதை ஒரு உரிமை என்று யாரும் வாதாட மாட்டார்கள் என்று கருதுகிறேன். திருடு என்பது இன்று பலவகைகளில் இருக்கின்றன. சில பெரிய தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளில் அவர்கள் பயன்படுத்தக்கூடிய மின்சார அளவைக் குறைத்துக் காட்டுவதற்காகப் பல சாதனங்களைப் பொருத்தி அதனால் ஏராளமான திருட்டு செய்தார்கள் என்பதுபற்றிய பல குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சில காலத்திற்குமுன்பு, சென்ற ஆட்சியில் தொழில் அதிபர்கள் மாநாடு ஒன்று கூடிய நேரத்தில் கூட இம்மாதிரி பல தொழிற்சாலைகளில் கூட எவ்வாறு மின்சாரம் திருடுகிறார்கள், எவ்வளவு பேர்கள் பற்றி அம்மாதிரி புகார்கள் வந்திருக்கின்றன. அந்தப் புகார் அடங்கியுள்ள பட்டியல் என்னிடம் இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான்கூட அதைப்பற்றி இங்கே சட்டமன்றத்தில் பேசுகிறபோது குறிப்பிட்டேன். ஒரு சாதாரண திருட்டு செய்தவர்களை விசாரித்து, தண்டித்து, இன்னார் மகன் இன்னார் தண்டிக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டு. ஜெயிலுக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள் என்று சொன்னால் பெரிய மனிதர்கள் அதுவும் பெரிய தொழில் அதிபர்கள் இன்றைக்கு ஒரு பொதுத் துறை நிறுவனத்திலிருந்து மின்சாரத்தை திருடுவது என்றால் அப்படிப்பட்டவர்கள்மீது புகார் வந்தால் அந்தப் புகாருக்கு உட்பட்டவர்கள் பெயர்களை அறிவித்தால்தான் நாட்டுமக்கள் அறிந்துகொள்ளமுடியும்.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பட்டியல் இருக்கிறது என்று சொன்னாலேயே தகவல் வந்திருக்கிறது என்பதையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறேன். அது ஆதாரபூர்வமாகத் தெரிகிறவரை நடவடிக்கைகள் எடுப்பது சாத்தியமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். அப்படி யாராவது தவறு செய்திருக்கிறார் என்று தெரியும்போது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வந்திருக்கிறோம். அதைப்பற்றி மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிட்டு அவர்களிடம் பட்டியல் இருக்கிறது என்று சொன்னால் எடுத்த எடுப்பிலே அம்மாதிரி புகார்கள் வந்திருக்கக்கூடிய சமாசாரம் பற்றி அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது என்றளவில் நிச்சயமாக அப்படி வந்தால் அதை விசாரித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அவ்வாறு புகார்கள் பற்றி விசாரணை செய்யப்பட்டதா, அதன் முடிவுகள் என்ன என்பதைத் தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

ஏனென்றால், அப்படி எச்சரிக்கையாக இருந்தால்தான், பெரும்பான்மையான மின்சாரத்தைத் திருடக்கூடியவர்கள், ஏராளமான மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடியவர்கள் ஆகியவர்களின் மீது நாம் அதிக ஜாக்கிரதையாக இருந்தால்தான், இந்தத் துறையைப் பாதுகாக்கக்கூடிய முறையில், பாதிப்பு ஏற்படாமல், தொழில் துறைகளிலே உள்ளவர்கள் சட்டவிரோதமாக மின்சாரத்தை அவர்கள் எடுக்காமல், அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய கடைசி யூனிட் வரைக்கும் பணம் செலுத்தக்கூடிய உத்திரவாத ஏற்பாடுகள் செய்ய முடியும். அதைச் செய்யவேண்டுமென்று இங்கே நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ளதில், இரு பிரிவினராக வைத்திருக்கிறார்கள். இதிலே சாதாரண ஆட்களும் இருக்கிறார்கள். இந்தச் சாதாரண ஆட்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்தைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் வேண்டுமென்றோ அல்லது ஏதாவது ஒரு சாதனத்தைப் பொருத்தித் திருடுகின்ற நிலை ஏற்பட்டால், அதற்குத் தண்டனை உண்டு. ஆனால், அதற்கு அடுத்தபடியாக அவ்வாறு செய்பவர்கள் கெட்ட நோக்கத்தோடு செய்தால், அப்படி ஒரு பிரசம்ஷன் அதாவது யூகம் ஏற்பட்டால், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு என்று கூறப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில், அக்கியூஸ்ட், அதாவது குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது இதைக் கொண்டு வருவதை நாங்கள் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்கனவே, சட்டங்களிலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, இங்கே மின்சாரம் திருடப்படுகின்றது என்று சொன்னால், அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இலாகாவுடையது. ஆகவே, இம்மாதிரியான நிலை வருகின்றபோது, அவர்கள் வேண்டுமென்றே திருடினார்களா அல்லது தெரியாமல் அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதா என்பதை இலாகாதான் நிரூபிக்க வேண்டும். அதுதான் நியாயமானதாக இருக்கும், கோட்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மின்சார திருட்டைப் பெரும் புள்ளிகள் செய்தால், கடுமையான தண்டனை கொடுக்க வேண்டியதுதான். ஆனால், சாதாரணமாக பயன்படுத்துபவர்கள் திருடினால் அவர்களையும், இவர்களையும் ஒரேமாதிரியாக பார்க்கக் கூடாது என்று நான் கூற விரும்புகிறேன். இங்கே 3 ஆண்டுகள் வரைக்கும் தண்டனை வருகிறது. சாதாரண நபர்களைப் பொறுத்தவரைக்கும், இது மிகவும் அதிகம். ஆகவே, அவசியம் இந்தத் தண்டனையைக்





குறைக்கவேண்டும். வால்தவத்திலே சொல்லப் போனால். அரசாங்கமே கொடுக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டத்திலே, 4-வது கிளாசிலே 39-வது பிரிவு, மற்றும் உப பிரிவுகளில் கூறப்பட்டுள்ளதைப் பார்த்தால், 2-வது தடவையாக அல்லது 3-வது தடவையாகத் திருடினால், அதற்குக் கட்டாயமாக 6 மாத தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவே, அரசாங்கத்தின் நோக்கமே 2-வது 3-வது தடவை என்று வரும்போது தண்டனையைக் குறைக்கவேண்டும் என்றிருக்கிறது. எனவே, நம்முடைய நோக்கமே அப்படி இருக்கும்போது, முதலிலேயே எடுத்த எடுப்பிலேயே 3 ஆண்டுகள் என்பது பெரிய எண்ணிக்கையாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சட்ட ரீதியாகவும், நியாய ரீதியாகவும், நடைமுறைக் காரியத்திலும் இன்றைக்குத் தண்டனை என்று வரும்போது, அதைக் குறைக்கவேண்டும்.

அடுத்ததாக, யாராவது ஒருவர் அவருடைய மின்சாரம் துண்டிக்கப்படுமானால் தெரியாமல் வேண்டுமென்றே அவர்கள் அனுமதியின்றி அவரே மின்சாரத்தை மீண்டும் பொருத்திக் கொண்டால், அதற்கும் இங்கே தண்டனை உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு 3 ஆண்டுகள் தண்டனை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு 5 ஆண்டுகள் என்றிருந்தது. இந்தத் திருத்தச் சட்டத்திலே கிளால் 5-லே, 1-வது உட்பிரிவிலே, 2-வது அம்சத்திலே 3 ஆண்டுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 2-வது தடவையாக, 3-வது தடவையாக என்று வந்தால், குறைந்தபட்ச தண்டனை 3 மாத தண்டனை என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, இதிலேயும் அரசாங்கத்தின் நோக்கம் இதுவாக இருந்தால் முதலிலேயே 3 ஆண்டுகள் என்பது அதிகம் என்று கருதுகிறேன். இதையும் குறைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். ஏனெனில் இதிலேயும் ஒரு வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும்; தன்மையையும் பார்க்கவேண்டும்.

அடுத்ததாக, இங்கே நான் சொல்ல விரும்புவது இந்த செக்ஷன் 50 ஏ-வைப் பற்றி, இந்தக் குற்றங்களைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு காக்னிசபிள் குற்றத்தை. போலீஸ் இலாகாவின் நிர்வாகப் பொறுப்பிலே இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரை கூறுகிறேன், இன்று இம்மாதிரியான பிரச்சினைகளில் மின்சார இலாகா புகார் செய்து அதன் மூலம் இந்தக் குற்றங்களுக்காக பிராசிக்யூசன் நடத்தப்பட்டால்தான் பொருத்தமாக இருக்குமே தவிர, போலீஸ் இலாகாவே கொலை நடப்பதை, கொள்ளை நடப்பதை அவர்களா

கவே நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுப்பது போல் இதிலும் அவர்கள் நடவடிக்கை எடுக்க சட்ட ரீதியான பொறுப்பு இருப்பது போல் ஆக்குவது பொருத்தமல்ல என்று நினைக்கிறேன்.

சில நிதானங்களை நாம் கடைப்பிடித்தாகவேண்டும். அப்படி வருகிறபோது எந்தெந்த நேர்வுகளில் பிராசிக்யூஷன் செய்ய வேண்டுமென்று நிர்மானிக்கும் பொறுப்பு அரசாங்கத்திலும் மின்சார இலாகா அதிகாரிகளிடத்திலும் இருந்தால்தான் சரியாக இருக்கும். போலீஸ் இலாக்கா நேரடியாகவே இப்படிப்பட்ட நேர்வுகளில் நடவடிக்கை எடுப்பது, அவர்களே இது குற்றம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு தேவையில்லை என்று கருதுகிறேன்.

நான் ஏற்கனவே சொல்லியதுபோல் பெரிய அளவுக்குத் திருடக்கூடியவர்களுக்குக் கடுமையான தண்டனை, மற்றவர்களைப் பொறுத்து வேண்டுமென்று செய்கிறார்களா, தெரியாமல் செய்கிறார்களா என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் கிளர்ச்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எல்லாம் அரசாங்கத்தோடு தனியாகப் பேச வேண்டிய விஷயம். அது வேறு பிரச்சினை. ஆனால் மின்சாரத்தைத் திருடுவது என்பது எந்த ஆட்சியாக இருந்தாலும் அதைத் தடுத்தாக வேண்டும், ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

இதைச் செயல்படுத்தும்போது சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டங்களில் இருக்கக்கூடிய பொது ஸ்தாபனங்கள், தொழில் சங்கங்கள் குறிப்பாக மின்சார இலாகாவில் பணியாற்றுகின்ற பல்வேறு தொழிற்சங்கங்கள், ஊழியர்கள் ஆகியோரோடு கலந்து பேசி இந்த மாதிரி திருட்டுக்கள் நடைபெறாமல் தடுக்கவும் அதே நேரத்தில் தொழிற்சங்க ஒத்துழைப்பைப் பெற்று சிறப்பாக நடத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. நான் சொன்னது டிஸ் கனெக்ஷன் பண்ணிய பிறகு மறுபடியும் அன் ஆதரைஸ்டு கனெக்ஷன் வாங்கிக் கொண்டு ஓட்டினால் அதற்குத் தண்டனை பொருத்துமா என்றுதான் கேட்கிறேன். ஒரு லட்சம் சர்வீஸ்





களுக்கு மேல் விவசாயிகள் பணம் கட்டாமல் இருக்கிறார்கள். அதற்கு இதை அப்ளை செய்யும்போது இருக்கக்கூடிய பிரச்சினை பற்றி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் கருத்து சொன்னால் நல்லதாக இருக்கும்.

திரு. என். சங்கரய்யா: நான் ஏற்கனவே சொன்னேன். மக்களின் பல்வேறு பிரிவுகளுக்கும் இடையே உள்ள பிரச்சினைகள் குறித்து நிர்மானித்துக் கொள்ளும் வழிமுறைகள், வாய்ப்புகள் வேறு. பொதுவான குறைகளை அவ்வாறு தீர்த்துக் கொள்ளவேண்டும்.

இங்கே குறிப்பிட்டது எந்த ஆட்சியாக இருந்தாலும் பொதுத் துறையில் நடத்தப்படுவதில் இருந்து பயனைப் பெற்றுக்கொண்டு திருட்டுத்தனமாக சுயநலத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும். அதிலும் கூட எவ்வாறு நிதானமான முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது பற்றிப் பல யோசனைகள் கூறியிருக்கிறேன். உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறினார்கள். இதை எதிர்ப்பது சரியல்ல. இதை ஆதரித்து இது எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கருத்துக் கூறுவதன் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இன்றைக்கு மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், ஒன்றரை லட்சம் விவசாயிகள் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு அதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற சிக்கலில் இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தக் கூடாது என்ற கருத்தை வெளியிட்டார்கள். ஒன்றரை லட்சம் விவசாயிகள் பல்வேறு காரணங்களால் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அரசு அழைத்துப் பேசி சுமுகமாகத் தீர்வு காணலாம். அவருடைய இந்தக் கருத்தை வரவேற்கிறேன். ஆனாலும் மின்சாரத் திருட்டு என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய சமூக விரோதக் குற்றமாக இருந்து வருகிறது. மிகப் பெரிய அளவிலே இந்தத் திருட்டு தமிழகத்தின் பல பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக ஈரோடு, மதுரை போன்ற பகுதிகளிலே பவர் லூம்ஸ் வைத்திருப்பவர்கள் அங்கே ஆயிரக்கணக்கான பவர் லூம்களை வைத்துக்கொண்டு அரசாங்க அனுமதி இல்லாமல் மின்சாரத்தைத் திருடிக் கொண்டிருக்கிறார்கள், அதற்கு மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று இந்தச் சபையில் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஈரோடு போன்ற

(முற்பகல் 11-10)

பகுதிகளிலே இன்றைக்கு என்ன நடக்கிறது என்பதை இந்தச் சபையிலே

சொன்னால் இந்தச் சபையிலே உள்ள உறுப்பினர்கள் அதிர்ச்சி அடைவார்கள். இந்த அளவுக்கு அரசாங்க மின்சாரத்தை திருடுவதற்கு அவர்களுக்குத் தங்கு தடையில்லாமல் அங்கே அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே வேலைபார்க்கிற அதிகாரிகளுக்கு கொடுக்கக்கூடிய சம்பளம் என்பதே அவர்களுக்கு அவசியம் இல்லாத வகையில் அங்கே இருக்கின்ற பவர்லூம்ஸ் முதலாளிகள் மாதத்திற்கு 5 ஆயிரம், 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று அந்த அதிகாரிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக் கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. . .

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் திரு. நெடுமாறன் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும், அரசாங்க அனுமதியில்லாமல் மின்சாரத்தைத் திருடினால் முறை யாகாது என்று சொன்னார்கள். அப்படியென்றால் அரசாங்கம் அனுமதி கொடுத்துத் திருடினால் முறையாகும் என்று ஆகிவிடும். அதைத் தான் கவனத்திற்குக் கொண்டுவந்தேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சுட்டிக்காட்டிய திருத்தத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். நான் அந்த அர்த்தத்திலே சொல்லவில்லை. அரசாங்கத்திற்குத் தெரியாமலேயேதான் நடைபெறுகிறது என்ற அர்த்தத்திலேதான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகப் பெரிய அளவிலே திட்டமிட்டு கட்டுப்பாடாக இது நடந்துகொண்டிருக்கிறது. என்னுடைய ஊரான மதுரையிலே அதிகமாக நடக்கிறது. ஈரோட்டிலே நடக்கிறது, மற்றும் பல ஊர்களிலே நடந்துகொண்டு இருக்கிறது. இந்த மின்சாரத் திருடர்களைக் கொஞ்சமும் ஈவிரக்கமில்லாமல் தண்டிக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு உடந்தையாக இருந்த மின்வாரிய அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களையும் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவந்து தண்டிப்பதற்குரிய வழிவகைகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அவர்களுக்கு சிறைத் தண்டனை அளிப்பது மட்டும் போதாது. சிறைத் தண்டனையோடு அபராதமும் விதிக்கப்படவேண்டும். அதோடுகூட மின்சார வாரியத்திற்கு அவர்களால் ஏற்பட்டிருக்கின்ற நட்டத்தை அவர்களிட மிருந்தே பெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டு மென்று சொல்லி இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின் இரண்டாவது பக்கத்திலே 'அனுபோகதாரருக்கு எழுத்து மூலமாக இருப்பது நான்கு மணி நேரத்திற்குக் குறையாத கால





அவகாசம் குறித்த அறிவிப்பு கொடுத்த பின்னர்' என்று போடப்பட்டிருக் கிறது. அதற்குப் பின்னாலே காலை முதல் மாலை வரையில் 12 மணி நேர நோட்டீஸ் போடப்பட்டிருக்கவேண்டும். இது வரவேற்கக்கூடிய அம்சம்தான். அதே நேரத்திலே மின்சாரத்தைத் தவறுதலாகப் பயன்படுத்து வோருக்கு ஒரு ஆண்டுக்காலத்திற்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மின்சாரம் திருடப்படுவதை யாரும் வரவேற்க மாட்டார்கள். அதைத் தடுக்கவேண்டுமென்ற முறையிலேதான் இந்தச் சபை யிலே கண்டித்தும் தடுக்கவேண்டுமென்றும் பேசியிருக்கிறோம். ஆகவே, அந்த முறையிலே அதைத் தடுப்பதை வரவேற்கிறோம். அதே நேரத்திலே நிரபராதிகள், அதிலே சம்பந்தப்படாதவர்கள், ஏழை எளியவர்கள் பாதிக்கப் படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். முதலாளிகள் உள்ளேயே டிரான்ஸ் பார்மரை வைத்துக் கொள்கிற காரணத்தினால் கோடிக்கணக்கான யூனிட்டு களைத் திருடுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அவர்களைத் தண்டிக்க வேண்டும். ஆனால் அதனால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மூன்று ஆண்டு சிறைத் தண்டனை அல்லது 5 ரூபாய் அபராதம் என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டங் களைத்தவிர, மீண்டும் கடுமையான சட்டங்களைப் போட்டு தடுத்து நிறுத்தி விடவேண்டுமென்றால் அதற்கு நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. அதே நேரத் திலே ஏழை விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது. கடந்த காலத்திலே மின்சா ரத்திற்கு யூனிட்டுக்கு 1 காசு குறைக்கப்பட வேண்டுமென்று வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேட்டபோது, 18 பேர்களைச் சுட்டுக் கொன்ற அனுபவம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடாத அளவுக்கு நியாயமான நிலையில் இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும். இவைகளெல் லாம் மிகவும் கடுமையாக இருக்கின்ற நிலைமைகளாகத் தெரிகின்றன. ஆகவே, இந்தத் தண்டனை முறைகளை விவசாயிகள்மீது உபயோகிக்காத அளவிற்குச் செய்து, முதலாளிகள் மட்டத்தில் இப்படிப்பட்ட திருட்டுக்கள் நடந்தால் அவர்கள் மீது பயன்படுத்தக்கூடிய அளவிற்கும் இந்தத் தண்டனைகளை உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, சாதாரண மக்கள் பாதுகாக்கப்படும் முறையில் இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இப்பொழுது எந்தவிதமான குற்றமும் செய்யாதவர்கள்கூட இந்தத் தண்டனைக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் உண்டு. ஏழை தொழிலாளியை முன்னுக்கு காட்டிக் கொடுத்துவிட்டு முதலாளிகள் பின்னுக்குப் போய்த் தப்பித்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. ஆயிரக்கணக்கான யூனிட்டுகளை முதலாளிகள் எடுத்துவிட்டு, வேலை செய்யும் தொழிலாளி அதைத் திருடி விட்டான், ஆகவே அவன் மீது கேஸ் போடுங்கள் என்று சொல்லி தொழிலாளிகளைக் காட்டிக் கொடுத்துவிட்டு,

(திரு. செ. சிவசாமி) [1980 ஆகஸ்ட் 5

முதலாளிகள் தப்பித்துக் கொள்ளுகின்ற சந்தர்ப்பம் இந்தச் சட்டத்திலே உண்டு. அப்படிப்பட்ட ஆபத்துக்களைக் களைந்து இந்த சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே விவசாயிகள் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வைத்து, அரசாங்கம் எப்படியெல்லாம் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் உபயோகப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருமக்கள் மின்சாரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று தமிழ்நாடு விவசாய சங்கத் தலைவர்களுடன் கலந்து பேசி அதற்குப்பிறகு இந்தச் சட்டங்களைக் கொண்டுவந்தால்கூட ஓரளவு நல்லமுறையில் இருக்கும் என்ற ஆலோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருட்டுக்களைக் கண்டிப்பாகத் தடுக்க வேண்டும்; ஆனால் அப்பொழுது நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதை வலியுறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தைத் திருடுபவர்களுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை கொடுக்கலாம் என்று இருக்கிறது. இந்தச் சமூக விரோதச் செயலை எங்களுடைய தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறியதைப்போல, இந்தச் செயலை நான் உண்மையிலேயே மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். அங்கேயிருக்கின்ற சிறுசிறு அதிகாரிகளைக் கையில் போட்டுக்கொண்டு, ஏழை விவசாயிகளுக்கு இல்லாமல் தடுத்து, பல இலட்சக்கணக்கான யூனிட்டுகளைத் திருடிக் கொண்டிருப்பவர்களுக்கு மூன்றாண்டுக் காலச் சிறைத் தண்டனையும் கொடுக்கலாம்; அத்துடன் ஓரளவு தொகையை அபராதமாகவும் போடலாம் என்ற கருத்தையும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், ஓட்டை போட்டு அதிலிருந்து மின்சாரத்தை எடுக்கிறார்கள் என்று. எங்கள் ஊரில் இருக்கின்றவர்கள் படிக்காத விவசாயிகள், ஆகவே எங்களுக்குத் தெரிவது இல்லை, அதை எப்படிச் செய்வது என்று தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், மழைக்காலங்களில் மோட்டார்களை நாங்கள் ஓட்டாமல் இருக்கின்ற நேரத்திலேயே கூட 100 ரூபாய், 150 ரூபாய் என்று கட்டணம் கட்ட வேண்டுமென்று வருகிறது. அங்குள்ள ஹெல்ப்பர், லைன்மேன் போன்றவர்களைக் கேட்டால், ஓடவே இல்லை, இவ்வளவு ரூபாய்க்கு வந்திருக்கிறதே



1980 ஆகஸ்ட் 5] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

என்று கேட்டால், போன மாதம் அல்லது அதற்கு முந்தைய மாதத்திற்கு இருக்கும் என்று சொல்லும் நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட நாங்கள் அதைப்பற்றி சிந்திப்பது இல்லை. சரி, போனால் போகிறது, கட்டி விடலாம் என்று கட்டிவிடுகிறோம்.

மீட்டர் ஓடாமல், மோட்டாரைப் போய்ப் பார்த்தால் அது ஓடாமல் இருக்கும்போழுது, கரண்ட் இல்லாமல் இருக்கும்பொழுது உள்ளே ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல காரியங்களால் பல ஏழை விவசாயிகள் மிகவும் அவஸ்தைப்படும் நிலை இருக்கிறது. அந்தக் குறைபாட்டை எப்படி நீக்க வேண்டுமோ அப்படி தயவு செய்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் மின்சாரக் கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக பீசை எடுத்து விட்டால் மறுபடியும் கனெக்ஷன் கொடுப்பதற்கு ஒரு ஆண்டுக்கு மேல் நீடிக்கச் செய்தால் அந்த விவசாயிகள் அழிந்து போய்விடுவார்கள். ஆகவே விவசாய சங்கத்திலே சேர்ந்து இருந்தாலும் சரி, அப்படிச் சேராமல் சாதாரண விவசாயியாக இருந்தாலும் சரி, அவர்கள் மோட்டார் தடை செய்து, ஓட்டாமல் இருந்து, மீண்டும் ஓட்டுவதற்கு முன்வரும்பொழுது அவர்களுக்குப் பத்து நாட்களுக்குள்ளே தொகையை வசூல் செய்து கொண்டு இணைப்பு கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணம் கட்டாமல் இருக்கின்ற விவசாயிகளிடமிருந்து பத்தாண்டு, பதினைந்தாண்டு என்று தவணை முறையில் பாக்கிகளை வசூல் செய்து, அவர்களது மின்இணைப்பைத் துண்டிக்காமல், பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.20)

இன்னும் சில திருடுகள் வேறுவிதமாகப் போகின்றன. சில திருடுகள் எப்படிப் போகின்றன என்றால், அந்த இலாகாவிலே லைன்மென்கள் வேலை பார்க்கிறார்கள். எங்கள் ஜில்லாவிலே, எங்கள் ஏரியாவிலே இல்லை. கோயம்புத்தூரில் ஒருவர் வேலை பார்க்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி வேலை பார்க்கிறவர், அங்கேயிருந்து, அந்தச் செம்புக் கம்பிகள், அந்தக்குழாய்கள், அந்த ஸ்டார்ட்டர்கள் போன்ற இப்படிப்பட்ட சாமான்களையெல்லாம் திருடிக்கொண்டு வந்து, வேறோரிடத்தில் சொந்தக்காரரிடம் கொடுத்து, கடை வைக்கச் சொல்கிறார். அப்படி கடை வைக்கும்போது, என் கண்ணிலே நன்று பட்டது, 4 ஆண்டுகளுக்கு முன்பு அதை போலீஸ் ஸ்டேஷனிலே சொல்லி, அதை எப்படியாவது பிடியுங்கள், அநியாயமாக

(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) [1980 ஆகஸ்ட் 5

இருக்கிறது என்று சொன்னேன். பிறகு, போலீசிலே, அவற்றைக் கைப்பற்றினார்கள். போலீசிலே கைப்பற்றியுங்கூட, ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே, எதுவும் செய்யாமல், விட்டு விட்டார்கள். இதை எதற்காக வலியுறுத்திக் கூறுகிறேன் என்றால், டிபார்ட்மெண்டில், சிறிய, சிறிய உத்தியோகத்திலே இருக்கக்கூடியவர்கள், இலாகாவுக்குச் சொந்தமான சாமான்களைத் திருடிக்கொண்டு வந்து கடை வைக்கக்கூடிய நிலை வந்தால், அது நல்லதா, நாட்டுக்கு நல்லதா, அரசுக்கு நல்லதா, அல்லது அந்தத் துறைக்குத்தான் நல்லதா, என்பதை கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

விவசாயிகள் பல போராட்டங்கள் நடத்தினார்கள். அந்த 14 பைசாவை, 12 பைசாவாக ஆக்கிக் கொடுங்கள். அதே போன்று, அந்தப் போராட்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால், 'பீனல் இன்ட்டரஸ்ட்' அபராத வட்டியில்லாமல், அந்தப் பணத்தை, நீண்டகால தவணை முறையிலே வசூல் செய்து கொள்ளுங்கள்.

அது மாத்திரமல்ல, மீட்டர் 10 ஆண்டுகளுக்கு ஓட்டி விட்டால், அதற்கு சார்ஜ் இல்லை என்ற நிலையை உருவாக்கி சார்ஜ் வசூல் செய்யாமல் விட்டு விடுங்கள்.

அதேபோன்று, அதற்கு சர்சார்ஜ் போடுகிறோம், லெவி போடுகிறோம், 5 ஹார்ஸ் பவர் வைத்தால், ரூ. 5 போடுகிறோம். மூன்று ஹார்ஸ் பவர் வைத்தால், ரூ. 3 போடுகிறோம். இதையெல்லாம் தவிர்த்து, விவசாயிகளுக்கு நல்ல காரியங்களைச் செய்து கொடுத்தால், இது அருமையான சட்டம்.

யாராவது விவசாயிகள், வட ஆற்காடு, தென்னாற்காடு ஜில்லாவிலே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி சொன்னதைப் போல், அந்தப் பக்கம் விவசாயி திருடியிருந்தால், அந்த விவசாயி தானாக செய்திருக்க மாட்டான். அந்த விவசாயிக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டும். விவசாயி செய்திருந்தால், அதை 6 மாதம் அல்லது 3 மாதம் என்று ஆக்கி, பெரிய, பெரிய தொழில் அதிபர்கள் செய்யக்கூடிய திருடுக்குத் தண்டனையை 3 ஆண்டு போதாது, 6 ஆண்டுகள் ஆக்கினால் கூட என்னைப் போன்றவர் முழுமூச்சாக உங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அதை அதிகமாக்கி, உயர்வாக்கி, விவசாயிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU T. VENKATA REDDI : Sir, while welcoming the laudable object of this amending Bill, I should like to bring to the notice of the Hon. Minister for Electricity certain things.



1980 ஆகஸ்ட் 5] [Thiru T. Venkata Reddi]

The stringent law which has now been enunciated under Section 4 is likely to be misused by the officials if proper care is not taken by the Government. In this connection I would like to state that it is common that in the matter of meter reading many of the officials do not property do it. Some of the meters, n fact, most of the meters, which are defective are not replaced by correct meters in spite of the request of the consumers. These things have to be rectified before the punishment Sections are introduceed or given effect to. Another aspect which I would like to bring to the attention of the Hon. Minister is this. In sub-section (2) a new amendment is now being introduced :—

(i) in the opening paragraph *for* the words "and after giving not less than twenty-four hours notice in writing to the occupier", the words "at any reasonable time between sun rise and sun set and on informing the occupier of his intention" shall be *substituted*.

What I say is, this would give rise to so many anomalies. the previous section the words "in writing" are there. The notice must be given in writing to the occupier. But now that has gone. Now it is enough if 'he is informed'. Without informing him, one may say the occupier has been informed, since the stipulation 'in writing' is not there now. What I submit is the officers who are authorised to implement the Section should not make this law a mockery. They should give notice in writing. Similarly merely saying under Clause 2 (ii), sufficient notice, is not enough. Sufficient notice should be replaced as "sufficient notice in writing".

I should like to say one more thing with regard to Clause 4 of the Bill, which brings a new amendment to Section 39. It is now said :

"39. *Theft of energy*.—Whoever dishonestly abstracts, consumes or uses any energy shall be punishable with imprisonment for a term which may extend to three years or with fine which shall not be less than five hundred rupees but which may extend to five thousand upees or with both; . . . .

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

For a man who commits the offence a second or third time, the same punishment should not be there. The punishment should be *doubled* to what is prescribed for first offence. It should be clearly put that for repetition of the offence a third time, the

(Thiru T. Venkata Reddi) [1980 ஆகஸ்ட் 5

punishment should be "imprisonment which may extend from six months to five years *and* with fine or both". If this amendment is introduced by Government, I welcome it.

So far as meters are concerned, I should like to say that the Hon. Minister has to bring in a law that meters have to be replaced once in two years so that defective meter reading could be avoided. I should like to thank the Hon. Temporary Chairman for having given me this opportunity to speak. Thank you.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் வரவேற்று இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் முதல் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, நான் வரவேற்கவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சட்டத்தின் நோக்கத்தை; திருட்டைத் தடுப்பது; திருடியவர்களுக்குத் தண்டனை வழங்குவது. இதை மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இதுதானா அவருடைய கட்சியின் நிலையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, திருட்டைத் தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமை ஆகும். ஆனால் கொண்டு வந்திருக்கும் சட்டத்தில் தண்டனை உயர்த்தப்பட்டிருப்பது அரசியல் ரீதியாகத்தான் என்று சொன்னேன். ஜெனரலாக நான் எதிர்க்கிறேன் என்று சொல்வது, எல்லாவற்றையும் எதிர்க்கிறேன் என்று அர்த்தம் இல்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அதற்காகத் தான் நான் ரொம்ப ஜாக்கிரதையாக சட்டத்தின் நோக்கத்தை பற்றி சொன்னேன். இதிலே மின் திருட்டு என்று சொல்லுகிறபோது, மின் பற்றாக்குறை உள்ள தமிழ்நாடு போன்று இருக்கிற மாநிலத்தில், மின் திருட்டை சிறிதளவு கூட அனுமதிக்க முடியாது என்பதையும், எவ்வளவுக்கெவ்வளவு மின்சாரத்தை நாம் சேமிக்கிறோமோ, சிக்கனப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஒரு புதிய மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்குகிறோம் என்கிற அளவிலே நாம் காண்கின்றபோது, இந்தச் சட்டத் திருத்தம் மிக மிக தேவையானது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.



1980 ஆகஸ்ட் 5]

(முற்பகல் 11-30)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிற போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். திருடுவதற்குத் தண்டனை தருவது என்பது ஒரு விஷயம். ஆனால் திருடுவதைத் தடுப்பதற்காக மின் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

தடுப்பதற்கான பல நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன; மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; நடவடிக்கைகள் புதிதாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மின்சாரத்தைக் கணக்கிடுகின்ற மீட்டர்களைப் பொறுத்தவரையில், அவைகள் மெல்லிய தகடுகளினாலே அந்த மீட்டர்களின் முன் பக்கம் மூடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை ஒடிப்பதற்கோ அல்லது ஓட்டைப் போடுவதற்கோ ஏதுவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மின்சார மீட்டர்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அதனுடைய சுருள் கம்பிகளிலே இருக்கும் லாக் வெளியே இருந்தது. அதை வைத்தும் சில திருடுகள் இருந்திருக்கின்றன. ஆகவே, அதைப் பொறுத்தவரையில் இரண்டு யோசனைகளை நாம் தெரிவித்து இருக்கிறோம். மீட்டர்களைப் பொறுத்த வரையில் அவை நடைமுறையில் இருக்கின்றன.

ஒன்று, அந்த மின்சார சுழலுக்கு இடையே உள்ள மின்சாரக் கம்பி வெளியே இருப்பதற்குப் பதிலாக உள்ளே பொருத்தப்பட்டு இருக்கிறது. இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், அந்த மின்சாரம் கணக்கிடுகின்ற அந்த மீட்டரின் மேல் பகுதியிலே உள்ள தகடு இப்போது வெல்ட் செய்யப்படுகிறது. அது மெல்லிய தகடு என்று சொன்னார்கள். அந்தக் கொஞ்சம் கனமான தகடாகப் போடவும், அல்லது அதை மோல்ட் செய்து கொண்டு வர முடியுமா என்பதையும் ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த மின்சாரத் துறையில் பணிபுரிகின்றவர்கள்கூட இத்தகைய திருடுகளுக்கு உடந்தையாக இருந்து விடுகிறார்கள் என்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுகிறபோது, கீழ் மட்டத்திலே உள்ளவர்கள்தான் உடந்தையாக இருப்பதாகச் சொன்னார்கள். மற்றவர்கள் பேசுகிறபோது, அதிகாரிகள் மட்டத்திலும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இத்தகைய காரியத்திற்கு எல்லோரும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று

கருத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஒரு சில இடங்களில் அப்படி இருக்கலாம். எப்படி ஆங்காங்கு சமுதாயத்தில் இருப்பவர்களில் ஒரு சிலர் தவறு செய்பவர்களாக இருக்கிறார்களோ, அதைப்போல் மின் வாரியத்திலும் தவறு செய்பவர்கள் இருக்கலாம். அத்தகையவர்களைப்பற்றிய தகவல்கள் தந்தால் நிச்சயம் மின் வாரியம் தகுந்த நடவடிக்கை தயவு தாட்சண்யம் இன்றி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அத்தகைய ஊழியர்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கிற அவரே அப்படிச் சொல்கிறபோது, டிஸ்மிஸ் செய்வதற்கு எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தச் சட்டத்தை வரவேற்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் தண்டனையை இப்படி உயர்த்தி இருப்பது சரிதானா என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். குற்றத்தின் அளவைப் பார்க்கிறபோது, தண்டனையின் அளவும் கூடுதலாக இருக்க வேண்டிய அவசியம் என்று அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

நாளுக்கு நாள் மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. இப்போது சுமார் 30 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இனி வருங்காலத்தில் அது வளருமே தவிர குறையாது. அப்படிப் பார்க்கிறபோது, மின்சாரத்தைத் திருடினால் கடுமையான தண்டனை விதிக்கப்படும், அது கடுமையான குற்றம் என்று இருந்தால்தான், அந்தப் பழக்கம் சிறிது சிறிதாகக் குறையும். அதோடு மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த சட்டங்களில் உள்ள சந்துபொந்துகளில் நுழைந்து கொண்டு, அதன் மூலம் மின்சாரம் திருடுபவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இடம் இருந்தது. போதுமான அளவிற்கு அச்சுறுத்துமளவிற்கு தண்டனை இல்லை. அதனால் தான் மின்சாரத்தைத் திருடுபவர்களுக்கு மிகப் பெரிய தண்டனை என்றால் தான், அந்த அச்சத்தின் காரணமாக திருடுவது படிப்படியாகத் தடுக்கப்படும் என்கிற அடிப்படையில் போடப்பட்டு இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். பெரிய தொழில் அதிபர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள்—அவர்களுடைய மின் இணைப்பிலே ஏதேனும் திருட்டு நடக்குமானால், அது அவர்களுடைய கவனத்திற்கு வராமல் நடந்தது, அங்கே வேலை செய்யும், அல்லது பணி செய்யும் தொழிலாளர்களால் நடந்தது என்று சொல்லி தப்பித்துக் கொண்டு போய்விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.



அதனால்தான் இந்தச் சட்டத்திலே நாங்கள் போட்டிருக்கிறோம். அது, எங்கே திருட்டு நடந்தாலும் அல்லது அவர்கள் பராமரிப்பில் எந்த இடத்தில் திருட்டு நடந்தாலும் அதற்குப் பொறுப்பு அந்த இணைப்பை வாங்கியவர்களே தவிர வேறு யாரும் அல்ல என்ற முறையிலே இந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள்கூட அந்தக் கருத்தைச் சொல்லும் போது 'பர்டன் ஆஃப் ப்ரூஃப்' அக்யூஸ்ட் மேலே கொண்டு வருவது சரியா என்று கேட்டார்கள். இதிலே அப்படிச் செய்யக்கூடிய அளவில்தான் நாங்கள் இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் போக்குவரத்துத் துறையிலே, லாரியை ஓட்டிச் செல்லும் டிரைவர் பாசஞ்சரை ஏற்றிக்கொண்டு போனால் அந்த லாரி டிரைவர்மீது மட்டுமல்லாமல் அந்த லாரி உரிமையாளர் மீதும் வழக்கு உண்டு. அதைப்போலதான் இங்கேயும் செய்ய வேண்டியிருக்கிறது. பல இடங்களில் எங்களுக்குத் தெரியாமல் எங்களுடைய ஆட்கள் செய்துவிட்டார்கள் என்று சொல்லி தப்பித்துக்கொள்கிறார்கள். எந்த எந்த சாதனத்தை வைத்து மின்சாரத்தைத் திருடுகிறார்களோ அந்த சாதனத்தை மின்சார வாரிய அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் அந்த இடத்திற்குப் போய்ச் சேருவதற்குள்ளாக அப்புறப்படுத்தி விடுகின்ற அளவுக்கு மின்சாரத் திருட்டைச் செய்கிறவர்கள் திறமை படைத்திருக்கிறார்கள்; அப்புறப்படுத்த தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் இந்த 'பர்டன் ஆஃப் ப்ரூஃப்' உரிமையாளர்கள் மீது அல்லது இணைப்பை வாங்கியவர்கள் மீது போடவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மின் இணைப்பைத் துண்டிப்பதற்கு டிவிஷனல் எஞ்சினீயருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம்; ஆனால் அவர் துண்டிப்பு செய்யும் போது அவருக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்டார்கள். அவர்கள் இந்த விவசாயப் போராட்டத்தில் சில இடங்களில் சிலபேர் செய்த நடவடிக்கைகளை மனதிலே வைத்து, இதை எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒருசில இடங்களில் ஏற்பட்ட சூழ்நிலைகளை வைத்துக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் அப்படி கணக்கிட வேண்டாம்; கணக்கிட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு பொறுப்பான அதிகாரிக்கு அந்த அதிகா

ரத்தைத் தர வேண்டுமென்று பார்க்கும்போது டிவிஷனல் எஞ்சினீயர் அளவிலே தருவது பொருத்தமாக இருக்கும் என்று அதைக் கொடுத்திருக்கிறோம். அவர் போகிற இடத்தில் ஆபத்து ஏற்படும்; போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டால் அவருக்கு நிச்சயமாக போலீஸ் பாதுகாப்பு தரப்படும்.

மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது டிவிஷனல் எஞ்சினீயருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறீர்கள்; ஆனால் அந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கு இன்னொரு 'ப்ரொவிஷன்' போட்டிருக்கலாமே என்று சொன்னார்கள். அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சட்டப் பிரிவைப் போட்டிருப்பதற்குக் காரணம், 'டிவிஷனல் எஞ்சினீயர் ஆன் பர்சனல் இன்ஸ்பெக்ஷன்' என்று இருக்கிறது. அவர் யாரோ சொல்வதை வைத்து செய்ய முடியாது; அவராகவே பார்த்துச் செய்ய வேண்டும்; பார்த்துச் செய்கிறார். அவராகவே பார்த்துச் செய்கிற போது மேல்முறையீடு அவசியம் இல்லை. அது மட்டுமல்ல. மேல்முறையீடு என்று ஒரு பிரிவை வைத்தால், அதை வைத்து காலம் தள்ளிவிடும் வாய்ப்பு ஏற்படும். இப்போது டிவிஷனல் எஞ்சினீயர் அளவில் நோட்டீஸ் கொடுக்கும் போது நீதிமன்றத்திற்குப் போகும் வாய்ப்பு இருக்கிறது. மேல்முறையீடு இருந்தால் காலதாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மேல்முறையீடு தேவையில்லை என்று கருதுகிறோம்.

அவர்கள் மேலும் பேசும்போது, தொழிலாளர்கள், மற்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நிச்சயமாக அந்த ஒத்துழைப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஏனென்றால், மூலை முடுக்குகளில் எல்லாம் இன்று மின்சார விநியோகம் நடக்கிறது. மின்சார வாரியமே அப்படிப்பட்ட இடங்களை எல்லாம் எப்போதும் கண்காணிப்பது என்பது சுலபமானது அல்ல. எங்கெங்கே மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்று தகவல் கிடைக்கிறதோ அந்தத் தகவல்களை எல்லாம் எங்களுக்குத் தாராளமாக அனுப்பிவைக்க பொதுமக்கள் பிரதிநிதிகள் துணையாக இருக்க வேண்டும். இந்த வாரியத்திலே பணியாற்றுகின்ற சுமார் ஒரு இலட்சம் ஊழியர்களும் மாநிலம் முழுவதிலிருந்தும் ஒத்துழைப்புத் தருவார்களானால் மிகப்பெரும் அளவில் இந்த மின்சார திருட்டை தீர்க்க முடியும் என்று நம்புகிறோம்.

(முற்பகல் 11-40)

இங்கே அவர்கள் மேலும் பேசும்போது மின்சாரத்தைத் திருடுகின்ற வகையினர் என்று சொல்லும்போது, ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படக் கூடாது; பணியாளர்கள் பலர் திருடுகிறார்கள், அவர்களை விட்டுவிடக் கூடாது; சட்டத்தை அமுல்படுத்துவதிலே ஒரு நல்ல மனப்பான்மை வேண்டும்





என்ற அடிப்படையிலே கருத்துக்களைச் சொன்னார்கள். அதை நிச்சயமாக அரசாங்கம் கவனத்தில் கொள்ளும். திருட்டு என்று சொல்லும்போது அது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்கு மட்டும் சொந்தமல்ல; எல்லோருக்கும் சொந்தம் தான். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்கூட இதுபற்றி தொழில் அதிபர்கள் மாநாட்டிலே பேசியதைபற்றி திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த விவரங்கள் எல்லாம் இருக்கின்றதா என்று கேட்டார்கள். எல்லா விவரங்களையும் தர முடியவில்லை. இருந்தாலும் சிலவற்றைத் தருகிறேன். பெரும் தொழில் நடத்துகின்றவர்களும்கூட இதிலே சிறந்த கைவரிசையைக் காட்டுகிறார்கள் என்பதை நான் இங்கு சொல்லித்தான் ஆக வேண்டி இருக்கின்றது. அண்மையில்கூட இராணிப்பேட்டையில் ஒரு தோல் பதனிடுகின்ற தொழிற்சாலையில் அதாவது SOUTH INDIA EAST TANNERY என்ற நிறுவனத்தில் மின்சாரம் திருடப்படுகின்றது என்ற தகவல் வந்து அது நம்முடைய மின்சார வாரியத்தின் விஜிலன்ஸ் செல் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மீது காவல்துறையின் வழக்கு பதிவு செய்யப்பட்டு அது விசாரணையில் உள்ளது. இன்னும் அந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. அந்த நிறுவனத்திற்கு 3.3 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. நிறுவனத்தின் உரிமையாளர் 1½ இலட்சம் ரூபாயைக் கட்டி இருக்கின்றார். ஆக இந்த மின்சாரத் திருட்டு என்பது எல்லாத் தரப்பிலேயும் இருக்கின்றது. ஆகவேதான் அபராதமும் போட்டு தண்டனையும் கொடுக்கின்ற வகையிலே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆனால் அதேநேரத்தில் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்த மின்சாரத் திருட்டுக்களைக் கண்டு பிடிப்பதற்கு என்று 3 வகையான அமைப்புகளை உருவாக்கி இருக்கின்றோம். ஒன்று ரொட்டீன் இன்ஸ்பெக்ஷன். அதாவது ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் சோதனை செய்கிறார்கள். அடுத்தது சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன். அதாவது திடீர் சோதனை செய்வது என்ற முறையும் இருக்கின்றது. அதற்கடுத்தாற்போல மாஸ் ரெய்ட் என்ற முறை இருக்கின்றது. அதாவது கூட்டமாகச் சென்று ஒரு குறிப்பிட்ட ஏரியா முழுவதும் பார்த்து மின்சாரத் திருட்டுக்களைத் தடுப்பதற்குரிய வகையிலே ரெய்டுகள் அனுப்பப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டு மட்டும் ரொட்டீன் இன்ஸ்பெக்ஷன் என்ற வகையிலே 21,42,641 சர்வீஸ்களும், சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் என்ற வகையிலே 2,12,256 சர்வீஸ்களும் மாஸ் ரெய்ட் என்ற வகையிலே 17,89,980 சர்வீஸ்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் எல்லாம் இருந்தும் ஆங்காங்கே சில திருட்டுக்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆகவே இத்தகைய இன்ஸ்பெக்ஷன்கள் எல்லாம் தீவிரப்படுத்தப்படும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள், ஆகவே அவர்களை அச்சுறுத்துவதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றதோ என்று ஐயப்படுகிறேன் என்று சொன்னார்கள். அதோடு மட்டும் அல்லாமல் அவர்களிலே பலபேருக்கு மின்சாரம் டிஸ்கனெக்ட் செய்யப்பட்ட பிறகு மீண்டும் கனெக்ட் செய்து திரும்பவும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் 1½ இலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. டிஸ்கனெக்ட் செய்யப்பட்டவர்கள் மீண்டும் அவர்களாகவே ரீகனெக்ஷன் பண்ணி ஓட்டுவார்கள் என்று எதிர்பார்த்து இந்தத் தண்டனையை கொடுக்கலாம் என்று சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள் என்று சொன்னேனே தவிர அவர்கள் ரிகனெக்ட் பண்ணி ஓட்டுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மிக்க நன்றி. மின்சார வாரியம் ஒரு சர்விஸைத் துண்டிக்கின்றது என்று வைத்துக் கொண்டால் அப்படித் துண்டித்ததற்குப் பிறகு ரீகனெக்ட் பண்ணிக் கொள்வார்களேயானால் அதுவும் திருட்டுக்குச் சமம் என்றுதான் இந்தச் சட்டத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே சாதாரணமாகத் திருடுவது என்பது மட்டுமல்ல, மின்சார வாரியத்திற்குத் தெரியாமல் ரீகனெக்ஷன் பண்ணிக்கொண்டு மின்சாரம் எடுத்தாலும் அதுவும் திருட்டாகத்தான் கருதப்படும்.

அடுத்து விவசாய சங்கங்கள் பற்றிய பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். என்னிடத்திலே கூட தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடன் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனிப்பது என்பது வேறு. அவர்களிடம் மட்டுமல்லாமல் மற்ற விவசாயச் சங்கத்தினரையும் அழைத்துப் பேசி பொதுவான பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு காணலாம் என்பதைப் பற்றி பேசி முடிவு எடுக்கலாம் என்பதாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அணுகுமுறை வேண்டுமென்று மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் கூட சொன்னார்கள். ஆகவே அந்தப் பிரச்சினைக்கும் இந்தப் பிரச்சினைக்கும் பொருத்தம் இல்லை.





**டாக்டர் கே. சௌரிராஜன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே மீட்டரின் மீது ஒரு மேகனட்டை வைத்து விட்டால் அந்த மீட்டர் ஓடாமல் குறைந்த அளவு மின்சாரத்தைக் காட்டுகின்றது என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. அதுவும் திருட்டிலே சம்பந்தப்பட்டதா என்பதை அமைச்சரவர்கள் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எந்த அளவிற்கு விஞ்ஞானம் வளருகின்றதோ அந்த அளவிற்கு திருட்டும் விஞ்ஞான ரீதியாகவே வளர்ந்து வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பல இரகசியங்களை சொல்லி, அதன் மூலம் திருட்டு அதிகமாகவிடக் கூடாது என்பதை நான் உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அதை எல்லாம் தகுந்த முறையிலே தடுப்பதற்கான முறைகளை கொண்டு வருவதற்காகத்தான் அரசு முடிவு எடுத்திருக்கிறது. விரைவில் அந்த நடவடிக்கைகள் வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் மாண்புமிகு பொன்னம்மாள் அவர்களும், இவ்வாறு திருடு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பெற வேண்டும் என்று வரவேற்றுப் பேசினார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து பில்கள் வருவதைப் பற்றியும் சொன்னார்கள். அதைப்பற்றி மின்சார வாரியம் சம்பந்தமான மானியம் வருகிறபோது அவர்கள் பேசினால், இன்னும் அதிகமான விவரங்களை என்னால் தரமுடியும்.

இந்தச் சட்டத்தைப் பொருத்தவரை குற்றங்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டும் என்ற அளவில்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே மற்றவைகளுக்கான பதிலை மின்சார வாரியத்தின் நிதி நிலை விளக்கத்திலே என்னால் இன்னும் விவரமாகத் தரமுடியும். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொருத்தவரை நல்ல நோக்கத்தோடு, நம்மிடத்திலே இருக்கிற மின்சாரம் வீணாகாமல், திருடு போகாமல் சரியாக வினியோகிக்கப் பட வேண்டும் என்ற முறையிலேயே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர யாரையும், அரசியல் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பழி வாங்க வேண்டும் என்றோ, அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காகவோ கொண்டு வரப்படவில்லை. ஆகவே இதனை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அனைவரையும், குறிப்பாக நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 5

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு விளக்கம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுடைய பம்பு செட்டுகளுக்கு, வெளியிலே கம்பத்திலே மீட்டர் பாக்ஸ் வைத்திருக்கிறார்கள். அந்தக் கம்பத்தின் கீழே அந்த பாக்ஸ்களை வைத்திருக்கிறார்கள். அதிலே ஏதாவது டேம்பரிங் நடந்தால், விவசாயிக்கு விரோதியான வேறு யாராவது அதை டேம்பர் செய்தால், அந்த விவசாயிதான் அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டுமா? அது நியாயமாகுமா? அதற்கு என்ன பாதுகாப்பு செய்திருக்கிறீர்கள் இந்தச் சட்டத்திலே என்று கேட்க விரும்புகிறேன். மின்சார மீட்டர் அந்த விவசாயினுடைய பிரிமிசைஸ் குள்ளே இருந்தால், அதற்கான கன்ஸ்டிரக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி அந்த விவசாயியின் மேல் இருக்கலாம். வைக்கேரியஸ் ரெஸ்பான்சிபிலிட்டி என்று கூட சொல்லலாம். ஆனால் வெளியிலே இருக்கிற கம்பத்திலிருந்து அவருக்கு விரோதி யாராவது அதை டேம்பர் செய்தால் அதற்குக் கூட அந்த விவசாயிக்கு கன்ஸ்யூமர் என்ற முறையில் தண்டனை அளிக்கப்பட வேண்டுமா?

It is open to anybody to tamper with that.

என்ற முறையிலே அந்த மீட்டர் பாக்ஸ் வெளியிலே வைக்கப்பட்டிருக்கிறது. உள்ளே வைக்கப்படவில்லை. அதனால் அந்த விவசாயினுடைய விரோதி அதை தவறாக உபயோகப்படுத்திக் கொண்டால் கூட, அல்லது வேறு யாராவது அதை டேம்பர் செய்தால்கூட இந்தச் சட்டத்தின்படி அந்த விவசாயி 3 வருஷம் சிறையில் இருக்க வேண்டுமா? இது நியாயமாகுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு தான் அதைக் கேட்டிருக்கிறார்கள். நோக்கம் நல்ல நோக்கம் தான். ஆனால், நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு என்று கொடுக்கப்பெறுகிற மின் இணைப்புப் பெட்டி வெளியிலே கம்பத்திலே வைத்திருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் கம்பத்திற்கு மேலே இருக்கக் கூடிய கம்பிகளிலிருந்து கூட, இந்த மீட்டர் தொந்திரவு எதுவும் இல்லாமல் நேரிடையாக மின்சாரம் எடுக்கக் கூடிய வேலைகளை எல்லாம் கூட செய்திருக்கிறார்கள். அப்படி ஏற்கெனவே கிட்டத்தட்ட 137 கேஸ்கள் பிடித்திருக்கிறோம். ஆகவே இதை எல்லாம் வேறு எப்படி நாம் தடுக்க முடியும். மீட்டர் மூலமாக வருகிற மின்சாரத்தில் . . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, இரண்டிற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. அமைச்சர் சொல்வது எல்லாம் கடுமையான குற்றங்கள் அதற்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்



1980 ஆகஸ்ட் 5]

இந்த அரசு செய்யக் கோரிய திருத்தங்களை விட அதிக அளவு பயனுள்ளவையாக அமைந்துள்ளன. 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்திய அரசு, தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 79(1)-ல் திருத்தம் செய்ய வேண்டும் என்ற இந்த அரசின் கருத்துரு ( proposal ) இன்னும் பரிசீலனையில் இருப்பதாகக் கூறியது. இந்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இப்பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த நேரத்தில், தொழிலாளர்கள் நல ஆலோசனைக் குழு கூட்டத்தில் 20 நாட்கள் வேலை செய்தால் 1 நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதற்கு முன்னாலேயே 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 180 நாட்கள் வேலை செய்தால் லீவு கொடுக்கப் பெற வேண்டும் என்கிற திருத்தத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது தொழிலாளர்களுக்கு அவ்வளவு சாதகமாக இருக்காது. அது மட்டும் அல்லாமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஸ்டேட் லேபர் ஆலோசனை போர்டில் இருக்கக்கூடிய முதலாளிகளின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த அத்தனை பிரதிநிதிகளையும் உட்பட்ட அந்தக் குழு செய்திருக்கிற ரெகமெண்டேஷன் அடிப்படையில் . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வி நீண்டுகொண்டே போகிறது. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சமீபத்தில் நடந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் கூட அவர்கள் 57 நாட்கள் வேலை செய்யவில்லை என்று காரணம் காட்டி அவர்களுக்கு லீவு கொடுக்கப் பெறவில்லை. இதேபோன்ற நிலை பரவலாக இருக்கிற காரணத்தினால் 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஊதியத்தோடு விடுப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். வேறு எப்படி மாற்றிச் சொல்ல முடியும்? பரிகாரம் காணத்தான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. என். பழனிவேல் :** காலம் கடந்து பரிசீலனை செய்வதால் எந்த விதமான பயனும் இல்லை. இப்போது ஆகஸ்ட் மாதம் வந்துவிட்டது. காலாண்டு பரீட்சையும் வரப்போகிறது. இன்னும் புத்தகங்கள் கிடைக்கவில்லை. ஆகவே, அரசாங்கம் இதிலே இரக்கத்தோடு கவனம் செலுத்தி, இன்றோ அல்லது நாளையோ முடிவை அறிவித்தால் நல்லது. அந்த மக்களின் பாராட்டைப் பெறும்; முடிவை அறிவிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

### விவசாயிகளுக்கான வாரச் சட்டம்

* கு. கா. வி. எண் 57—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கான 75-25 வாரச்சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 75-25 வாரச் சட்டத்தை அமுல் நடத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. 26—4—1980 முதல் அந்த உத்தரவுகள் அமுலுக்கு வந்துவிட்டன.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவரவர்களே, 75-25 சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 26—4—1980-லிருந்து அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எந்த நிலச்சுவாந்தார்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபற்றி அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, எந்தச் சட்டம் வந்தாலும் அதனால் சிலருக்கு பாதகம் இருக்கத்தான் செய்யும்; பாதிக்கப்படுவார்கள். ஆனால் அரசுக்கு அதுபற்றி உரிய நேரத்தில் செய்தி வந்தால் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.



கொள்கிறேன். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் வெளியிலே கம்பத்திலே மீட்டர் பாக்ஸை வைப்பதினால் வேறு யாராவது சப்ளை கட் பண்ணுகிறார்கள், பியூஸ் பிடுங்கிவிடுகிறார்கள் அல்லது வேறு ஏதாவது முறையிலே மின்சாரத்தை திருடுகிறார்கள் என்றால், அதற்கான தண்டனையை அந்த மீட்டரை வைத்திருப்பவன் என்கிற முறையிலே அந்த விவசாயிதான் அனுபவிக்க வேண்டுமா? அவர்களுக்கான பாதுகாப்பு வழி ஏதாவது சட்டத்தில் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். அது தவிர கம்பிகளை வைத்து இழுத்து மின்சாரம் திருடுபவர்களை நீங்கள் கம்பிபோட்டு இழுத்து கொண்டு செல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இவை எல்லாம் உணர்ந்துதான் சட்டத்திலே தெளிவாகப் போட்டிருக்கிறோம். என்ன போட்டிருக்கிறோம் என்று சொன்னால்,

" or means not authorised by the licensee exist for the abstraction, consumption or use of the energy by the consumer.

அதாவது நாம் கொடுத்திருக்கிற லைன் இல்லாமல் வேறு எந்த வகைகளின் மூலமாக மின்சாரத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கு அவர்கள் தான் பொறுப்பு. ஏனென்றால் பயன் அடைபவர்கள் அவர்கள்தானே. ஆகவே அவர்கள்தான் மீட்டர்களையும் ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படி பயிரை பாதுகாக்கிறார்களோ அப்படி மீட்டரையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் கேட்ட பிரச்னை மீட்டர் பாதுகாப்பது பற்றி இல்லை. அவர்களுடைய பம்பு செட்டுகளை பாதுகாக்கிற அளவிற்கு மீட்டரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு விவசாயிகளுக்கு உண்டு.

(முற்பகல் 11-50)

ஷெட்டிலிருந்து இருபது அடியில் போஸ்ட் இருக்கிறது. அந்த போஸ்டில் மீட்டர் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல இடங்களில் இப்படி இருக்கிறது. அந்த மீட்டர்களை டிப்பார்ட்மென்ட் வைத்திருக்கிறது. மெயின் ஸ்விச்சிலிருந்து மீட்டர்களுக்கு டயாக்டாக கரெண்ட் வருகிறது. ஆனால் அந்த மீட்டர்களை போலீஸ்காரர்கள் போட்டு பாதுகாக்க முடியுமா? எங்கள் ஷெட்டில் இருந்தால், அது டாம்பர் செய்யப்பட்டிருந்தால் நாங்கள் பதில் சொல்லமுடியும். உங்கள் போஸ்டில் வைத்திருக்கக்கூடிய மீட்டர்கள் டாம்பர் செய்யப்பட்டிருந்தால் எப்படி விவசாயிகளை தண்டிக்க முடியும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் போஸ்ட்ஸ் என்பது மட்டுமல்ல. மின்சார வாரியத்தின் லைனிலிருந்து கூட திருடலாம். மீட்டர் எங்கே இருக்கிறது என்பதல்ல. மின்சாரத்தை பயன்படுத்துவதற்கு என்று மின்சார வாரியம் லைன் போடுகிறது, கம்பம் நடுகிறது, கம்பி இழுக்கிறது, மீட்டர் வைக்கிறது, மின்சாரம் கொடுக்கிறது. அதல்லாமல் வேறு எந்த முறையில் அவர்கள் மின்சாரத்தை எடுத்துக் கொண்டாலும் அது தண்டனைக்குரியது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல என்றால் கோர்ட்டில் போய் வழக்காடிக்கொள்ளலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்பது, பம்ப் செட் இணைப்பிற்காக இருக்கிற மீட்டரை அந்த விவசாயி பயன்படுத்திக் கொள்கிற இடத்திலே கொட்டகைக்கு உள்ளே இல்லாமல் வேறு இடத்தில் இருக்கும்போது வேண்டுமென்றே அந்த விவசாயியை குற்றவாளியாக்கி இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்றாண்டுகள் தண்டனைக்குரியவராக ஆக்கவேண்டுமென்று ஒரு விஷமி வெளியே இருக்கிற மீட்டரில் இந்தக் காரியத்தைச் செய்தால் அவன் செய்கிற அந்தக் காரியம் அந்தப் பழி இந்த விவசாயிமீது விழுந்து விடாதா ? அந்த விவசாயிக்கு என்ன பாதுகாப்பு ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த விஷமி செய்துவிட்டான் என்பதை நிரூபித்துக்கொள்வதுதான் பாதுகாப்பு. ஏனென்றால் அதேபோல் மின்சாரத்தை தவறாக எடுத்துக் கொள்கிறவர்களை தண்டிப்பதற்கு நாம் என்ன செய்வது, அதையும் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இவற்றை அவர்கள் நீதிமன்றத்தில்தான் நிரூபித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** ஒருவரை மூன்று ஆண்டுக்காலம் சிறையில் வைக்கவேண்டும் என்று டிப்பார்ட்மெண்ட் கருதுகிறது என்றால்—இவன் குற்ற உணர்வோடு மின்சாரத்தை கொண்டுசெல்ல டாம்பர் செய்திருக்கிறான், அல்லது திருடியிருக்கிறான், அல்லது பைபாஸ் செய்திருக்கிறான் என்று சொன்னால் அதை ப்ரூவ் செய்வதற்குள்ள கடமை உங்களுக்குத்தான் இருக்கிறது. விவசாயி சென்று எப்படி விஷமியை தேடிக் கண்டுபிடிக்க முடியும் ? ஆகவே இன்னஸென்டாக உள்ள விவசாயி தண்டிக்கப்படுவது எப்படி நியாயமாகயிருக்கும் ?

**THE HON. THIRU S. RAMACHANDRAN .** The Bill is very clear. The burden of proof rests only on the consumers. அதுதான் சட்டத்தில் உள்ளது.





**THIRU V. KRISHNAMOORTHY :** It is against natural justice.

**THIRU DURAI MURUGAN :** The burden of proof always lies on the prosecution side.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இதில் செக்ஷன் 39-ல் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இது fundamentals of Criminal law -க்கு விரோதமானது.

The onus of proof lies on the prosecution ஒருவன் கொலை செய்தான் அல்லது திருடினான் அல்லது கொள்ளையடித்தான் என்றால் குற்றம் சாட்டுபவர்கள்தான் அதை நிரூபிக்கவேண்டும் என்பதுதான் க்ரிமினல் சட்டத்தின் அடிப்படை. ஆனால் இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தில், எலெக்ட்ரிசிட்டி ஆக்டையும் இந்தியன் பீனல் கோடையும் திருத்துவதற்காகக் கொண்டுவருகிறீர்கள். ஆனால் க்ரிமினல் லாவின் அடிப்படையை தகர்த்தெறிந்துவிட்டு, நாச்சுரல் ஜஸ்டிஸை தகர்த்தெறிந்துவிட்டு onus of proof lies on the prosecution என்ற அடிப்படையை விட்டுவிட்டு குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கவேண்டும் என்று சொல்வது க்ரிமினல் சட்டத்தின் அடிப்படைக்கே விரோதமானது. இதை கோர்ட்டில் சாலெஞ்ச் செய்யலாம். இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பர்டன் ஆப் ப்ரூப் எங்களுக்கு இல்லை, உங்களுக்குத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மீட்டர் எங்கள் கஸ்டடியில் இருந்து, எங்கள் ப்ரிமிஸஸ்-ல் இருந்து, லாக் அன்ட் கீ எங்களிடமிருக்கும்போது அந்த பர்டன் எங்களுக்கு ஷிப்டாகிறது. வெளியில் மீட்டர் இருக்கும்போது பர்டன் எங்களிடம் வைத்தால் அது அநியாயம். அதற்கு ஸேப்கார்ட்ஸ் இல்லாமல் சட்டம் கொண்டுவருவது சரியல்ல.

*** திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எழுப்பிய பிரச்சினையிலே எனக்கு ஒரு சந்தேகம். ஒருவரின் நிலத்தில் தண்ணீர் பாய்ச்சுகின்ற கிணறு இருக்கிறது. அதற்கு ஒட்டியிருக்கின்ற போஸ்டில் அரசாங்கத்தின் மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. அந்த மீட்டரிலே டேம்பர் செய்து மின்சாரத்தை எடுத்து உபயோகப்படுத்தினால், இந்தக் கிணற்று நீரை இந்த வயலுக்குப் பாய்ச்ச முடியுமே தவிர, அடுத்த வயலைச் சேர்ந்தவருக்கு இந்தக் கிணற்று நீரை எடுத்துப் பாய்ச்சினால் அது குற்றமாகி விடும். ஆகவே, இந்த மீட்டரிலே டேம்பர் செய்து, அதன் விளைவாகக்

கிடைக்கக்கூடிய ஆதாயம் அந்த வயலின், நிலத்தின் சொந்தக்காரருக்குத்தான் கிடைக்கிறது. அதற்கு பொறுப்பாக அவர்தான் இருக்க முடியுமே தவிர, மற்றவர்கள் இருக்க முடியாது. இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இதைப் பற்றி விரிவான விவாதம் தேவையில்லை. இதிலே இருக்கின்ற இந்தப் பிரிவு கவனிக்காமல் போடப்படவில்லை. திருட்டைத் தடுக்க வேண்டுமென்பது நமது நோக்கம். திருடுவதற்கு அவர்கள் பயன்படுத்துகின்ற சர்வீஸ், போர்டு, பயன்படுத்துகின்ற கம்பம், லயன், போன்றவைகளிலிருந்து திருடு வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதைத் தடுக்கவேண்டும் என்று நாம் எண்ணுகின்றபோது, நாம் ஒரு அறிவிப்பை செய்துவிட்டுப் போவதற்குள் அவர்கள் அதை எடுத்துவிட முடிகிறது. ஆகவே, போய்ப் பார்க்கின்றபோது சர்வீஸ் முன்பு இருந்ததுபோலவே இருக்கும்; ஆனால் கொக்கி இருக்காது. இதையெல்லாம் வைத்துத்தான், burden of proof தான் என்று நிரூபிக்கும் அந்தப் பொறுப்பு அவர்கள் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, ரகுமான்கான் ஆகியோர் வழக்கறிஞர்கள். இந்த burden of proof -ஐ ஷிப்ட் செய்வது சரியல்ல என்று சொல்லுகிறார்கள். ஆனால், இது வழக் கறிஞர்களைக் கலந்து, சட்டத் துறையைக் கலந்துதான் போடப்பட்டிருக் கிறது. ஆகவே, இதிலே தவறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 4-லே கடைசியில், "மீட்டர், இண்டிகேட்டர் அல்லது சாதனம் பயன்படுத்திக் கொள்ளுவோரின் சாதனமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவரது பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கிறது" என்னும் சொற்கள் விடப்பட வேண்டும் என்றிருக்கிறது. அதற்கு விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற சட்டப் பிரிவுக்குப், பதிலாக நாம் திருத்தம் கொண்டு வருகிறோம். இப்போது நாம் என்ன சொல்லுகிறோம் என்றால், அதற்காகப் பயன்படுத் தும் சாதனங்கள் என்று மொத்தமாகச் சொல்கிறோம். ஆகவே, அதை எடுத்துவிட்டு, சாதனங்கள் என்று போடுகிறோம்.

நான் இன்னொரு தகவலையும் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே உள்ள மத்திய அரசின், இந்தியன் எலக்ட்ரிசிடி ஆக்டில், செக்ஷன் 44-ல் Burden of proof rests with the consumer



**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இங்கே பெரிய விவாதத்திற்கு அமைச்சர் அவர்கள், எந்த நோக்கத்தோடு அதை விவாதித்தார்களோ, அதற்கு பதில் சொல்லவில்லை என்று நான் கருதுகிறேன். மீட்டர் என்பது கம்பத்திலே இருக்கக்கூடியது. அங்கே தகர டப்பாவிலே இருக்கிறது. அந்த தகர டப்பா மூடாத நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அந்த மீட்டரின் சீல் உடைக்கப் பட்டால், அந்த பம்பு செட்டு ஓனருக்கு பாதிப்பு என்று சட்டத்திலே இருப்பதை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்கான அறிகுறி வழங்கு வதற்கு அரசு முன்வருமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இதிலே நீண்ட விவாதம் தேவையில்லை. நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம், ஏற்கனவே இருக்கிற ஒரு சட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்திலேயே இதைப் போட்டிருக்கிறார்கள். நான் வேண்டுமானால் படிக்கிறேன் : whether it ts his property or not அவரது சொத்தோ அல்லது அல்லவோ.

It shall be presumed, until the contrary is proved, that such connection, communication, alteration, prevention or improper use, as the case may be, has been knowingly and wilfully caused by such consumer.

ஆக, இந்த திருத்தப்பட்ட சட்டத்தில் வேண்டுமென்றே செய்ததாகத் தான் கருதவேண்டும். 1910-ம் ஆண்டு இந்தியன் எலக்ரிசிடி ஆக்டின் விளக்கத்தைத் தான் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

(நண்பகல் 12-00)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்திலே நாங்கள் குறைபாடுகளை எடுத்துச் சொன்னோம். இண்டஸ்ரியல் கன்ஸ்யூ மர்சைப் பற்றிச் சொல்லவில்லை. இன்னொசென்ட் விவசாயிகள், பணத்தைக் கட்டக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். மாண்புமிகு மந்திரியின் தொகுதி யில் இம்மாதிரி நிறைய நிகழ்ச்சிகள் வருகின்றன. கம்பத்தில் மீட்டர் இருக்கிறது. ஒரு ஊரில் இரண்டு கட்சிக்காரன் இருக்கிறான். ஒருவன் போய் மீட்டரை உடைத்துவிட்டு டிப்பார்ட்மெண்டில் போய் மீட்டரை டேம்பர் செய்து கொண்டிருக்கிறான் என்று இன்னொருவனைப் பற்றி புகார் செய்துவிட முடியும். பல கோர்ட்டுகளில் சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகளில் எல்லாம் பிரிமிசசில் இருக்கிற மீட்டர்களை டேம்பர் செய்திருந்தால்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர அப்படி கம்பத்தில் மீட்டர் இல்லாதவர் கள் பலபேரை விடுதலை செய்திருக்கிறார்கள். இப்போது வருகிற சட்டத்தில்

இந்த கேசையும் இன்வால்வ் பண்ணி பர்டன் ஆப் ப்ரூஃப் இவர்களுக்கு என்று சொல்லுவது தவறு. அதற்குப் பாதுகாப்பு இல்லை என்றால் இன்னொசென்ட் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடு எந்தச் சமயத்திலும் அவர்கள் ஜெயிலுக்குப் போவதற்கான வழியை வகுத்து விடும்.

* திரு. துரை முருகன் : நான் கேட்பது 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' அடிப் படையில். சென்ட்ரல் ஆக்டில் அப்படி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டங்கள் விவசாயிகளுக்கு நாம் சவுகரியத்தைச் செய்து கொடுக்கிற வகையில் இருக்க வேண்டுமே தவிர மேலும் கஷ்டத்தை உண்டு பண்ணக்கூடிய வகையில் இருக்கக்கூடாது. 'சிரமமுத்தல் வேந்த னுக்குப் பொழுது போக்கு' வேண்டாத ஒருவன் மீட்டரை உடைத்துவிட்டு புகார் கொடுத்து விட்டால் அந்த விவசாயி அந்த அதிகாரி பின்னால் சுற்றிக் கொண்டிருக்க முடியாது. விவசாயிகளைப் பழிவாங்க வேண்டுமென்ற உள்நோக்கம் இருக்கிறதோ என்ற சந்தேகம் இருக்கிறது. தண்டனையை ஏற்கனவே இருந்ததைவிட அதிகமாக்குகிறோம் என்றால் குற்றம் புரிபவர்கள் அதிகமாக இருந்திருக்கவேண்டும். அப்படியானால் ஏற்கனவே எவ்வளவு பேர் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பேர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்? மக்கள் திரும்பத் திரும்பி அந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள் என்ற காரணத்தால் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களா? அப்படி எதுவும் இல்லாமல் இப்படி திடீரென்று மூன்று ஆண்டுகள் தண்டனை என்று கொண்டு வந்திருப்பது விவசாயிகளைப் பயமுறுத்துவதாகும். இது தமிழக விவசாயிகளை எங்கோ குறி வைத்துத் தாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதா. நியாயத்தின் அடிப் படையில் அமைச்சர் அவர்கள் இதை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும். திருட்டைத் தடுப்பதற்கு வேறு ஒரு சட்டத்தை வேண்டுமானால் கொண்டு வரலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துரை முருகன் அவர்களும் இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசியிருக்கிறார்கள். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எழுந்த பிரச்சினை—அவர்கள் வழக்கறிஞர்கள் என்ற முறையில் நண்பர் கிருஷ்ண மூர்த்தி அவர்களும், இரகுமான்கான் அவர்களும், 'பர்டன் ஆப் ப்ரூஃப் கன்ஸ்யூமர் மேல் இருக்கலாமா? என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். இருக்கலாம் என்பதற்கு ஏற்கனவே உள்ள சட்ட ஆதாரத்தைக் காட்டி யிருக்கிறேன். ஆகையால் அந்தப் பிரச்சினையை இப்போது வழக்கறிஞர்கள்





ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அது இருக்க வேண்டுமா வேண்டாமா என்றால், அப்படி வைத்திருந்தாலும் பல வழக்குகளில் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற நிலையில் இதைத் திருத்தினால் அதற்கு அரசாங்கமே உதவி புரிவதாக ஆகி நம்முடைய நோக்கம் நிறைவேறாமல் போகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 35/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1980 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள், மற்றவர்கள் எல்லாம் பேசினார்கள். கிராமங்களிலே என்னைப் போன்ற விவசாயிகளுக்கு இந்த நுட்பங்களை யெல்லாம் தெரிந்துகொண்டு மின்மோட்டார்களை இயக்குவது என்பது இயலாத காரியம். இந்தச் சட்டத்தினால் சிறிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இதை இந்த மாமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

"1980-ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

இ. பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/1980).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 10/1980 * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் பயிரிடும் குத்தகைதாரர்கள் இயற்கை இடர்பாட்டினால், வெள்ளத்தால், புயலால், வறட்சியால் பாதிக்கப்படுகிறபொழுது. அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்பதற்காக பல முறைகள் இந்த மாமன்றம், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவர்கள் கொடுக்கவேண்டிய குத்தகைப் பாக்கி முதலியவற்றைக் கட்டுவதற்கு 30—6—1980 வரையிலும் தவணை கொடுக்கப்படவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்படி சட்டம் நிறைவேற்றப்பட்டது 11—2—1980 அன்று ஆகும். ஆனால் அதற்குப் பிறகு அந்தச் சட்டம் நிறைவேறிய பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கப்பட்டது, கலைக்கப்பட்டது என்பது இந்த மாமன்றத்திற்குத் தெரியும். ஆனால் அந்தச் சட்டம் 26—4—1980 இல் தான் அமலுக்கு வந்தது. 30—6—1980 வரையிலும் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட சட்டம் 26—4—1980 அன்று தான் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்காலத்திலே அமலுக்கு வந்தது. அந்தக் குறுகிய காலம் போதாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்திலே இன்னும் காலக்கெடு கொடுக்கப்படவேண்டுமென்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்றியபோது 1383, 1384, 1385, 1386, 1387 ஆகிய 5 பசலிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே கொண்டுவந்தபோது மாமன்றத்திலே இருக்

* 1980-ம் ஆண்டு ஜூலை 24-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.





(பிற்பகல் 12-10)

பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டார்கள். ஆனாலும் மாமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே அவையிலே இல்லை. அவையிலே இல்லாவிட்டாலும் அறையிலே இருந்து கேட்டுக் கொண்டிருந்து, பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஒரு குறிப்பை எழுதி அனுப்பினார்கள்.

அதற்கு முன், 1382, 1383 ஆம் பசலிக்கு முன்னாலும்கூட பயிரிடும் குத்தகைதாரர்கள் கஷ்டப்பட்டால் அதையும் இந்த அரசு கவனிக்கும் என்று சொல்லுங்கள் என்று குறிப்பை எழுதி அனுப்பினார்கள். அந்தக் குறிப்பின் அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு—1381 ஆம் பசலியில்—அந்தப் பசலிக்குக் குத்தகை கட்டிவிட்டால் அதற்கு முன்னால் இருக்கின்ற பாக்கியெல்லாம் தள்ளுபடியாகும் என்று அப்பொழுது இருந்த அரசு சட்டம் கொண்டு வந்தது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 1972-இல் 1381 ஆம் பசலிக்கு பூராவும் கட்டி விட்டால் அதற்கு முன்னாலே இருக்கின்ற குத்தகை பாக்கிகள் பூராவும் தள்ளுபடியாகும் என்று அப்பொழுது சட்டம் கொண்டு வரப்பட்டது. 1382 ஆம் பசலிக்கும், 1381 ஆம் பசலிக்கும், அதைப்பற்றி இந்த அரசு கவனிக்கலாம் என்று என்னைச் சொல்ல வேண்டுமென்ற குறிப்பை எழுதி அனுப்பியதன்பேரில்—புரட்சித் தலைவர் அவர்கள் எழுதி அனுப்பிய குறிப்பின் பேரில் இந்த அவையில் அதற்கும் சேர்த்து சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்வேன்.

1381 ஆம் பசலிக்குக் கட்டி விட்டால் அதற்கு முன்னால் இருக்கின்ற பாக்கி தள்ளுபடியாகும் என்ற சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளாத, பயிர் செய்கிற விவசாயிக்கு, குத்தகைதாரர்களுக்கு இதிலே பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் அன்றைக்கே காலாவதியானாலும், அதை 1381 ஆம் பசலிக்கு மட்டும் கட்டாதவர்களுக்கு இன்று கட்ட முன் வந்தால் இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பை இப்பொழுதும் தருவதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

அந்தப் பாக்கியை ஒரேதடவையில் கட்ட முடியாது. அதை மூன்று சம பாகங்களாகப் பிரித்து, முதல் தவணையை 31—12—1980-இல் கட்ட வேண்டும்; மீதி இருக்கிற பாக்கியைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில், 30—6—1981-இலும், 30—6—1982-இலும் கட்டினால் போதும் என்று சட்ட முன்வடிவு கூறுகிறது.

அதேபோலத்தான் 1382 ஆம் பசலிக்கு இதற்கு முன் கொண்டு வந்த சட்டத்திலே இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 1382 ஆம் பசலியும்—அதையும் மூன்று சம பாகங்களாகப் பிரித்து அதிலே முதல் பாகத்தை 31—12—1980-இலும் மீதி இருப்பதை 31—6—1981 இலும், 30—6—1982-இலும் கட்டினால் போதும் என்கின்ற சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன்.

ஆனால் முதலிலே நிறைவேற்றிய, 11—2—1980-இல் நிறைவேற்றிய சட்டம் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் காலங்கடந்து அமைந்த காரணத்தினால், அதற்கும் தவணை கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில், அன்று கட்ட வேண்டியதை 30—6—1980-இல் கட்ட வேண்டுமென்று சட்டத்தில் இருந்தாலும், காலம் போதாது. அதை 31—12—1980 அன்று அது வரையிலும் கட்டலாம் என்று இந்தச் சட்ட முன்வடிவு சொல்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீதி இருப்பதை நான் முதலிலே சொன்னபடி, இந்தப் பாக்கியை—ஐந்து வருடப் பாக்கி, அல்லது மூன்று வருடப் பாக்கி 1383, 1384, 1385, 1386, 1387-க்கான பசலிகளுக்கு, இப்பொழுது வருகிற இந்த ஆண்டில் 12-வது மாதம்—டிசம்பர் மாதம்—31 ஆம் தேதி வரையிலும் காலக்கெடு கொடுக்கப்படுகிறது. மீதி இருப்பதை அடுத்து வருகிற பசலி ஆண்டுகளில், 30—6—1981, 30—6—1982 வரை நீடிக்கும் காலக் கெடு கொடுக்கிறோம் என்ற செய்தியைச் சொல்லி, இந்தக் கருத்துக்களை மாமன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதைப் பற்றி கருத்துக்களைச் சொல்லி, நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டு அமைகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு விளக்கம், நான் பேசவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்த பில்லிலேயே பேசலாம், திரு. இராசமாணிக்கம் பேசிய பிறகு, நீங்கள் பேசலாம்.





திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர், இரண்டு பில்லையும் சேர்த்து டிஸ்கஷன் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டுமே குத்தகைதாரர்கள் பில் தான். பேசுபவர்கள் இரண்டையும் சேர்த்துப் பேசுவதிலே ஆட்சேபணை இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : இல்லை, தனித்தனியாகத் தான் பேசவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த இரண்டு பில்களையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் பேசும்பொழுது, 2-வது பில்லில், 3-வது பில்லில், தனித்தனியாகப் பேசுவதற்கு, நீங்கள் இஷ்டப்பட்டால், அனுமதிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி தனித்தனியாக பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்பதற்குக் காரணம், அவருடைய கட்சியில் இரண்டு பேர்கள் பேசவிருக்கிறார்கள். ஆகவே, தனித்தனியாக எடுக்க வேண்டுமென்று கேட்கிறார் என்று கருதுகிறேன். ஒன்றாக எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு பில்லைப் பற்றியும் பேசட்டும், இரண்டையும் சேர்த்துப் பேச வேண்டுமென்று விரும்புவர்கள் அதே போல் பேசட்டும். அதைப் பேரவைத் தலைவருடைய விருப்பத்திற்கு விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில்களைப் பொறுத்த வரைக்கும் கட்சி கிடையாது. ஆகவே, அவரவர்கள் கருத்துக்களை, 2-வது பில்லில், 3-வது பில்லில் என்று சொல்லலாம். சேர்த்துச் சொல்லும்போது சில குழப்பங்கள் வரும் என்பது சில உறுப்பினர்களுடைய எண்ணம்—மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதியினுடைய எண்ணம் இப்பொழுது, சபையைப் பொறுத்த வரைக்கும் இரண்டாவது பில்லை எடுத்துக் கொள்கிறோம். 2-வது பில்லை முடித்து, 3-வது பில் வரும்போது, ஒருவர், இருவர் பேசவேண்டுமென்றால், பேசலாம். அதிலே ஒன்றும் தவறில்லை.

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்திருக்கிற தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980) மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பாக என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்

இன்றையதினம் அமைச்சரவர்கள் சொல்கிறபொழுது, இந்தச் சட்டத்தை எதற்காகக் கொண்டு வருகிறார்கள் என்பதை விளக்கமாக எடுத்துச் சொல்லி, அதனால் தமிழ் நாட்டில் இருக்கிற பல விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் எதிர்பார்க்கிற அளவு இந்தச் சட்டம் பலன் அளிக்காது. இந்தச் சட்டத்தின் மூலமாக, தமிழகத்தினுடைய விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஆரம்பத்திலேயே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்று ஒரு பகுதியாகவும், பாதிக்கப்படாதவர்கள் என்று ஒரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு, இரண்டு சட்ட முன்வடிவுகள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இந்தச் சட்ட முன்வடிவை 11—2—1980 அன்று இந்த மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டபொழுது, அந்தச் சட்ட முன்வடிவின் மீதும் நான் பேசியிருக்கிறேன். அன்றைய தினம் நான் பேசுகிறபொழுது, இந்தச் சட்டத்தின் மூலமாக, விவசாயிகளுக்குப் பயன் கிடைக்காது என்று சுட்டிக்காட்டினேன். அப்பொழுது நான் பேசியபோது, தாளடி அறுவடை இந்தப் பசலிக்கு நடந்து கொண்டிருக்கிறது. அறுவடை முடிந்ததற்குப் பின்னால் விவசாயிகளால், இதற்கு முன்னால், கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகளைக் கண்டிப்பாகக் கொடுக்க முடியாது. இந்த பசலிக்குக்கூட குத்தகைப்பாக்கி கொடுக்க முடியாத நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அப்படிச் சுட்டிக்காட்டுகிற பொழுது ஒரு கருத்தைச் சொன்னேன்; பாதிக்கப்பட்ட விவசாயிகள் என்று சொல்லக்கூடியவர்கள் 1976 ஜூன் 30 தேதிக்குப் பிறகு 4 பசலிகள் இருக்கின்றன இந்த 4 பசலிகளுக்கும் கொடுக்க வேண்டிய குத்தகைப் பாக்கிகளைக் கொடுத்தாக வேண்டும். அவர்கள்மீது வழக்கு தொடருவதற்கு நிலச்சுவாந்தார்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக உரிமை இருக்கிறது. இப்படி 4 பசலிகளுக்கு நிலச்சுவாந்தார்கள் வழக்கு தொடர்ந்து, விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதை இந்தச் சட்டம் கட்டுப் படுத்தாது. ஆகையினாலே, 4 பசலிகளுக்குச் சட்டத்திலே நிவாரணம் இல்லாமல், அதற்கு முன்னாலே, இருக்கிற பசலிகளுக்கு நிவாரணம் கொடுப்பது பொருத்தமாக இருக்காது. ஆகையினாலேதான் இந்த 4 பசலிகளுக்கும் சேர்த்து சட்டத்திலே நிவாரணம் தர வேண்டுமென்று நான் அன்றையதினம் சட்டமன்றத்திலே பேசினேன்.



(பிற்பகல் 12-20)

அப்படி நான் பேசுகிறபோது, இப்போது பாதிக்கப்பட்டதில் 1978-79, 1979-1980 ஆகிய இந்த இரண்டு பசலிகளுக்கும் சேர்த்து மறுபடியும் இந்தச் சட்டத்திலே நிவாரணம் அளிக்கவேண்டும் என்று அன்றையதினம் பேசி இருக்கிறேன்.]

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

ஆனால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது நான் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டினேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 1381 ஆம் பசலிக்கு கொடுக்கவேண்டிய பாக்கியை கொடுத்துவிட்டவர்களுக்கு, அதற்கு முன்னால் கொடுக்கவேண்டிய அத்தனை பாக்கியும் தள்ளுபடி என்று, டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது போட்ட அந்த சட்டத்தின் மூலமாக பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைந்தார்கள். அந்த அடிப்படையிலேயே இந்த சட்டம் கொண்டு வரவேண்டும் என்று அன்றையதினம் சட்டப்பேரவையில் பேசி இருக்கிறேன். தமிழகத்தின் முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது, தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். அந்தப் பகுதியில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய சார்பாக முதலமைச்சரைச் சந்தித்து மகஜர் கொடுத்தார்கள். தமிழகத்திலே அன்றையதினம் 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கு, கோர்ட்டில் நிலச்சுவான்தார்கள் வழக்கு தொடர்ந்திருந்தார்கள் அப்படி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்ததனாலே 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி அவர்களை வாழ்விக்கின்ற வகையில் நீங்கள் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படி விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றையதினம், 3—4—1972 அன்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த சட்டத்தின் காரணமாக 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் அடைந்தார்கள். அந்த சட்டத்தை ஆதரித்து 8 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த 8 பேர்களும் வரவேற்றுப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசியிருக்கிறார்கள். அன்றையதினம் சுதந்திரா கட்சியிலே இருந்த, இன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்றைய தினம் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இப்படி எல்லா

கட்சிக்காரர்களும் பாராட்டக் கூடிய வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. எல்லோரும் வாழ்த்துகிற அளவுக்குச் சட்டம் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் சட்டமுன்வடிவு கொண்டு வந்து பேசியபோது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ராஜமாணிக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்தது என்று சொன்னார். நானும் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் இருந்தேன். எனவே நாம் எல்லாம் சேர்ந்துதான் அந்த சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று அன்றையதினம் அவர்கள் சொன்னார்கள். நான் கூட அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். அப்படி எல்லாரும் சேர்ந்து விவசாயிகளுக்கு நன்மை செய்யக் கூடிய சட்டத்தைக் கொண்டு வந்தால் அதில் ஆட்சேபனை இல்லை. இப் போதும் ஒரு பசலி நெல்லைக் கொடுத்துவிட்டவர்களுக்கு, முன்னால் இருந்த பாக்கிகள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று ஆத்தகைய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று விவசாயிகள் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். காரணம் விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். சென்ற ஆண்டு கூட தாளடி அறுவடை செய்கிறபோது கூலி கூட கொடுக்க முடியாமல் இருந்தார்கள். எனவே விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு எண்ணுமானால் எல்லா பாக்கிகளை யும் தள்ளுபடி செய்து ஒரு பசலிக்கு உண்டான நெல்லைக் கொடுக்க வர வேண்டும் என்று திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தள்ளுபடி செய்யவேண்டும் என்று பேசுகிற அதே நேரத்தில் சிறு நிலச்சுவான்தார்களுடைய நிலைமையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கிற சிறு நிலச்சுவான் தார்கள் பாதிக்காத வகையிலே நாம் ஏதாவது அவர்களுக்குச் சலுகைகளை செய்ய வேண்டும். அவர்கள் வருமானம் இல்லாமல் நிலவரியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குத்தகை நெல்லைக் கூட வாங்க முடியாத நிலையில் இருக்கின்ற அவர்கள் நில வரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் நிலவரி பாக்கி அத்தனையையும் தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றையதினம் குத்தகை பாக்கிக்காக ஒரு நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அதே நேரத்தில் கூட்டுறவுக் கடனைக் கட்டவில்லை என்று ஜப்தி



செய்கிறார்கள். ஒரு பக்கத்தில் நிலவரி பாக்கிக்காக விவசாயிகள் அதிகாரி களால் மிரட்டப்படுகிறார்கள். இப்படி 3 கட்டங்களிலேயும் விவசாயிகள் கடுமையாக அவதிப்படுகிறார்கள்.

ஒன்று, நிலவரி கட்ட முடியாமை, இரண்டாவது. கூட்டுறவுக் கடன் வசூலிப்பது, மூன்றாவதாக, வரி பாக்கிக்காக அதிகாரிகளால் மிரட்டப்படு கின்ற நிலைமை. இதிலே அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, கூட்டுறவு பாக்கி அத்தனையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச்சுவான்தார்களுக்கு நில வரியும் தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இப்படிச் சொல்கிறபோது, சிறு விவசாயி களைப் பற்றி, குத்தகை விவசாயிகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டு இருக் கிறேன்; 5 ஏக்கர் உள்பட்ட விவசாயிகள் கொடுக்கப்படவேண்டிய பாக்கி களைத்தான் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே அறநிலையம், மடம். கோவில்கள் என்று பார்க்கக்கூடாது.

1972 ஆம் ஆண்டில் 1381-பசலி வரை கட்டவேண்டிய குத்தகை பாக்கி களை ரத்து செய்வதற்காகச் சட்டம் கொண்டு வந்தபோது, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். இந்தப் பிரச்னை தொடர்ந்து நீடிக்காமல் தடுத்து நிறுத்தப்படவேண்டுமானால் உழுபவனுக்கு நிலம் சொந்தமாகக்கப்பட வேண்டும். அதற்கு பதில் அளித்த மாண்புமிகு அன்றைய வருவாய்துறை அமைச்சர் அவர்கள் அது தான் இந்த அரசாங்கத்தின் லட்சியம், படிப்படி யாக அது நிறைவேற்றப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்களும் முதலமைச்சராக இருந்தபோது அதை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது எல்லாம் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டும். அப்படி செய்தால்தான் இந்தப் பிரச்னை ஒவ்வொரு ஆண்டும் எழாமல் இருக்கும் என்பதைப் பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்வேன், கோவில்கள், அறநிலையங்கள் அனைத்தும் அரசுடைமை யாக்கப்படவேண்டும். அவற்றையெல்லாம், அரசுக்குச் சொந்தமாக்கிவிட்டு, அதிலே பணியாற்றுகிறவர்களை அரசு அலுவலர்கள்போல் கருதி, அவர் களுக்கு மாதா மாதம் ஊதியம் அளித்து விடலாம். அந்த கோவில், அறநிலையம் ஆகியவற்றில் இருந்து எடுத்த நிலத்தை குத்தகைதாரனுக்கு

உரிமையாக்கி விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
கருத்துக்களை அரசு ஏற்று, அந்த வகையில் சட்டத்தில் நான் கூறிய திருத்தங்களைக்
கொண்டு வரவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே,
1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கி
(நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 30/1980) மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வருவாய் துறை அமைச்சர் அவர்கள் 1972 ஆம் ஆண்டு
சொன்னார்கள். 1972 ஆம் ஆண்டு சட்டத்தின்படி சட்டம் பற்றிச்
னால் அதற்கு முந்தைய பாக்கி அனைத்தும் தள்ளுபடி ஓராண்டு குத்தகை கட்டி.
கள். அறிவித்ததை காலாகாலத்தில் அறிவித்து என்று அறிவித்தார்
இருக்கும் குத்தகை விவசாயிகள் பூரணமாக இருந்தால், இன்றைக்கு
யும் அவர்கள் அடைந்து இருப்பார்கள். குத்தகை கட்டி, முழு நன்மை
விப்பு வந்தால் பல விவசாயிகள் கொஞ்சம் காலம் பின்தங்கி அறி
குத்தகையையே பாக்கி கட்டமுடியாமல் போய், 1972 ஆம் ஆண்டு
1973 ஆம் ஆண்டு வைத்துள்ள நிலைமை இருக்கிறது. அதேபோல்
அமைச்சர் குத்தகை பாக்கி இருக்கிறது. இன்றைக்கு தம்முடைய
யும், 1981 சொல்கிறபோது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி ஒருபகுதி
ஜூன் 30-ம் ஆம் ஆண்டு ஜூன் 30-ம் நாள் ஒரு பகுதியும், 1982 ஆம் ஆண்டு
தேதி ஒரு பகுதியும் கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள்.
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு என்று சொல்
கிறபோது இன்றைக்கு 8 ஆண்டுகள் ஆகிறது. 8 ஆண்டுகளுக்கு முன்னால்
கட்ட முடியாமல் இருந்த விவசாயிகளிடத்தில் இப்போது புயல் அடித்த காலத்
திலே ஒரு பகுதி கட்டவேண்டும் என்று சொல்கிறோம். கடைசியில் 1978 ஆம்
ஆண்டு பாக்கி, 1979 ஆம் ஆண்டு பாக்கி என்று வருகிறது. இப்படி தொடர்ச்சி
யாக 8 ஆண்டு காலம் குத்தகை கட்ட முடியாதவர்கள் 3 ஆண்டு காலத்தில்
கட்டவேண்டும் என்று நாம் சேமித்துக்கொண்டு போகிறபோது, அவர்கள்
கட்ட முடியாமல் போகும் சுமை மேலும் மேலும் பாரமாகச் சுமந்து கொண்டு
போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அப்படி சுமந்துகொண்டு வருகிறபோது நில உடைமையாளர்களும்
கோவில் மடத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களும் இடைக்காலத்தில் வழக்கு
தொடர்ந்துகொண்டே வருகிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டும்
என்றால் அரசு ஒரு உறுதியான முடிவுக்கு வரவேண்டும். 9 ஆண்டு காலம்



கட்ட முடியாத விவசாயி ஒவ்வொரு ஆண்டும் கட்ட வேண்டுமென்று சொல்லும்போது கட்டமுடியாத விவசாயிகளைப் பற்றி அரசு ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்.

விவசாயி கட்ட முடியவில்லை என்றால் உண்மையிலேயே ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் விவசாயிகளுக்கு வரமுடியாது. கட்ட முடியாததற்குக் காரணம் விவசாயிகள் உற்பத்திப் பண்ணக்கூடிய நெல்லுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை. விவசாயக் காலத்தில் வெள்ளம் வருகிறது, புயல் வருகிறது. வறட்சி வருகிறது. இப்படிப்பட்ட கொடுமைகளால் அவன் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

அதுமட்டும் அல்ல. விவசாயி உற்பத்திப் பண்ணக்கூடிய நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் அவன் வாங்கக்கூடிய பொருட்கள் விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. உரம் மற்றுள்ள பொருட்கள் விலை பலமடங்கு ஏறியிருக்கிறது. அவன் ஒரு மண்வெட்டி வாங்கப்போனால் 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயி உழுகின்ற கலப்பை 34 ரூபாய் விலை ஆகிறது. இப்படி விவசாயி வாங்கக் கூடிய உரம், மண்வெட்டி,கலப்பை இன்னும் பல்வேறு பொருட்களின் விலை பலமடங்கு ஏறிவிட்டது. ஆனால் அவன் உற்பத்திப் பண்ணக்கூடிய நெல்லுக்கு கட்டுப்படியான விலை கொடுக்க மத்திய சர்க்கார் தயாராக இல்லல. இதையெல்லாம் கவனத்தில் எடுத்து, தமிழக சர்க்கார் இந்த 8 ஆண்டு கால பாக்கியை ஒன்றாகக் கணக்கெடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு முன்னாலேகூட நாங்கள் சொல்லியிருக்கிறோம். மீண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்கள் விவசாயிகளுடைய கஷ்டங்களை நன்றாகத் தெரிந்தவர்கள். மூன்றாண்டு காலம் என்று சொல்லும்போது வரும் ஜூன் மாதத்தில் மற்ற மாதங்களில் தண்ணீர் வந்து பாதகம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. அப்படியானால் மறுபடியும் குத்தகை பாக்கி வரும். பாக்கியை தள்ளுபடி செய்யவேண்டி வரும் என்ற நிலை இருப்பதால் இப்படி 3 ஆண்டு, 3 ஆண்டு என்று சொல்லாமல் இந்த 9 ஆண்டு என்று காலத்தையும் ஒட்டுமொத்தமாக கணக்கிட்டு, இரண்டாண்டுகளாக கணக்கிட்டு கட்ட இருக்கின்ற பாக்கியை தள்ளுபடி செய்து, மீதி இருக்கிற பாக்கியை 8 ஆண்டு காலத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்

*திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசால் இப்போது கொண்டு வந்திருக்கிற இரண்டு சட்டங்களும் குத்தகை விவசாயி களுக்கு சலுகை அளிக்கக்கூடியதாக இருப்பதால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். வரவேற்கின்ற அதேநேரத்தில் சில கோரிக்கைகளையும் அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இப்போது இந்தச் சட்டத்திலே 1981-லிருந்து அதற்கு முன்னால் இருக்கக் கூடிய குத்தகை பாக்கியை 3 தவணைகளில் கட்ட வேண்டும்; 1981, 1982 முடிய குத்தகைப் பாக்கி முழுவதையும் 3 தவணைகளில் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; அதற்குப் பின்னால் புயல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிற குத்தகை விவசாயிகளுக்கு 5 தவணை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு 3 சம தவணை என்று இருக்கிறது. இப்படியெல்லாம் தவணை கள் என்று சொன்னாலும் விவசாயிகளால் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படும்.

காரணம் அமைச்சரவர்களுக்குத் தெரியும். கடந்த 9 ஆண்டு காலமாக குத்தகை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்ததன் காரணமாக இந்த சட்டம் கூட இன்று பேரவைக்கு வருகின்றது. குத்தகை விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பயிரிடுகின்ற காலத்திலே அவர்களுக்கு பலவித மான இடர்பாடுகள் ஏற்படுகின்றன. உரம் மற்றும் பல பொருட்களினுடைய விலையேற்றத்தால் அவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மேலும் தண்ணீர் காலாகாலத்தில் கிடைக்காத காரணத்தாலும் கஷ்டப்படுகின்றார்கள். மேலும், பூச்சித் தொல்லைகள் போன்ற காரணங்களாலும் விவசாயிகள் பாதிப்புக்கு ஆளான காரணத்தால் குத்தகையைக் கட்ட முடியாத நிலைமையிலே அவர் கள் இருக்கின்றார்கள். இந்தக் குத்தகை பாக்கிகள் பூராவையும் ஒன்றாக இணைத்துப் புயல் என்றும் வெள்ளம் என்றும் பார்க்காமல் அதாவது புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் என்றும் பாதிக்கப்படாத விவசாயிகள் என்று பார்க்காமல் எல்லோரையும் ஒரே நிலையிலே கொண்டு வந்து 1978 ஆம் ஆண்டுக்கு முன்னால் உள்ள குத்தகை பாக்கியில் ஏதாவது ஒரு வருஷக் குத்தகை பாக்கியை மூன்று சம தவணையில் செலுத்திவிட்டால் அத்தனை குத்தகை பாக்கியும் சரியாகிவிடும் என்ற முறையில் சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டும். 1978-வது வருஷத்திற்குப் பின்னாலே இருக்கக் கூடிய குத்தகை பாக்கிகளுக்காக மிராசுதாரர்களாலும், மடத்துச் சொந்தக்காரர்களாலும் விவசாயிகள் கோர்ட்டுகளுக்கு இழுக்கப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறார்கள். அந்த நிலை இல்லாமல் குத்தகையை களத்துமேட்டிலே வாங்கிக்கொள்வதற்கு



நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே அந்த வகையிலே சட்டத் திருத்தம் இருக்கவேண்டும் என்று சொல்லி இந்தச் சட்டங்கள் கொண்டு வரப் படுகின்ற நேரத்திலே குத்தகை விவசாயிகள் மேலும் பாதிக்கப்படாமல் அவர் களுக்கு மேலும் சலுகை அளிக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர் களே, தமிழக அரசின் சார்பிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர் கள், 1980-ம் ஆண்டின் பயிரிடும் குத்தகைதாரர்களுடைய குத்தகை பாக்கி களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கொண்டு வந்த இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து நான் ஒருசில கருத் துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

இந்தக் குத்தகைதாரர்கள் சட்ட முன்வடிவு வரவேற்கத்தக்கது தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது 1381-வது பசலிக்குரிய, அதாவது 1972 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட குத்தகை யைச் செலுத்திவிட்டால் முன்பாக்கிகளை எல்லாம் தள்ளுபடி செய்துவிட லாம் என்று சொன்னார்கள். அதேபோல் இந்த குத்தகை சாகுபடியாளர் களுக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று நம்முடைய அரசு எண்ணி இருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால் இதிலே ஒரு சில ஆலோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன். அவற்றின் மூலம் குத்தகை சாகுபடியாளர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன் தொல்லைகளைத் தாங்க முடியவில்லை என்று சில நிலச் சொந்தக்காரர்களே போராடுகின்ற நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையிலே குத்தகை சாகுபடியாளர்கள் நீண்ட தவணைகளில் அதாவது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி ஒரு தவணையிலும், 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி ஒரு தவணையிலும், 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி ஒரு தவணையிலும் குத்தகை பாக்கியைக் கட்டவேண்டும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட தவணைகளைக்கொடுத்து விட்டால் அந்த நிலங்கள் சரியாக விளைந்துவிடுமா என்பதை அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிலத்தின் சொந்தக்காரர்களே இப்போது போராட்டம் நடத்துகிறார்கள். இன்றைக்கு விவசாயிகளின் விளைபொரு ளுக்கு சரியான விலை கிடைக்கின்றதா? விளை பொருளுக்கு விலை இல்லை

என்று போராட்டம் நடத்துகின்ற இந்த நேரத்திலே குத்தகை சாகுபடியாளர் களுடைய உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது அவர்கள் குத்தகை பாக்கிகளை தவணை முறையில் கொடுக்கவேண்டும் என்று சொல்வது சிறந்த தாக இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர வர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய நிலத்திலே விளைவு குறைந்துகொண்டுதான் வருகின்றது. புயலாலும், வெள்ளத்தாலும், பூச்சிக் கோளாறுகளாலும் நிலத்தின் உற்பத்தி குறைந்துகொண்டு வருகின்றது. இந்த நிலைமையிலே அவர்களுடைய செலுத்தும் திறன் குறைந்துகொண்டு தான் வருகின்றதே தவிர அதிகமாக ஆகவில்லை. தவணை முறையில் செலுத்துவது ஓரளவுக்குச் சுமையைக் குறைப்பதாக இருந்தாலும் கூட ஒரு ஆண்டினுடைய குத்தகையைக் கொடுத்துவிட்டால் பழைய பாக்கிகளைத் தள்ளுபடி செய்து விடலாம் என்ற நிலையை ஏற்படுத்தினால் அதனை மறுக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

காரணம், நீண்ட காலமாகவே கொஞ்சம்கூட குத்தகை பணம் வரவில்லை என்ற எண்ணத்தில் இருப்பவர்களுக்கு ஒரு ஆண்டு குத்தகையாவது நிரந்தர மாக வரும் என்ற செய்தி மகிழ்ச்சியைத்தான் அளிக்கும். சந்தோஷப்படுவார்கள் ஆனால் தவணை முறை என்று சொன்னால் அவர்கள் பயப்படுகிறவர்கள், பின்னாலே எல்லாமே தள்ளுபடி ஆகிவிடுமோ என்று அவர்கள் சந்தேகப்படு கிறார்கள், பயப்படுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையிலே குத்தகை விட்டவர்களுக்கும் வழக்கம் குறையாமல், விவசாயிகளுக்கும் தொல்லை இல்லாமல், நிரந்தரமான ஒரு முடிவை காண வேண்டுமானால், ஒரு வருஷ பாக்கியை மட்டும் கொடுத்து விட்டால் மற்ற பழைய பாக்கிகள் எல்லாம் தள்ளுபடி என்று சொல்லிவிடுவது நல்லது. அதை குத்தகை கொடுத்தவர் களும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தவிர இன்னொரு சட்டத் திருத்தமும் வந்திருக்கிறது. அதை 25, 75 என்று சொல்வார்கள். அதாவது மொத்தத்தில் சாகுபடி செய்பவர்களுக்கு 100-க்கு 75 கலமும், குத்தகை விட்டவர்களுக்கு 100-க்கு 25 கலமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் புதிய சட்டம் பல இடங்களில் அமுலில் இல்லை. இப்போது அமுலில் இருப்பது 60, 40 என்று சொல்லப்படுகிற சட்டமே. இப்படி நிலைமை இருந் இருந்தால் பின்னால், 1980-81, 82 ஆம் ஆண்டுகளுக்குக் கூட இப்படி 60, 40





என்ற அளவிலேயே அமுல் நடத்தப்படும் நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே, இந்தச் சட்டத்தை தீவிரமாக அமுல் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன் வரவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அதேபோல ஒரு வருடத்து குத்தகைப் பாக்கியை உடனடியாக மொத்தமாகச் செலுத்தி விட்டால், பழைய பாக்கிகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற முறையை யும் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை நிலச் சொந்தக்காரர்கள் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று கூறுகிறேன். எப்படி விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக் கிறோமோ, அப்படியே இந்தக் குத்தகைதாரர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கிற முறையில் அது அமையும் என்று என் யோசனையாக கூறிக் கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆதரித்து விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

* திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இன்று இந்த மசோதாவிலே விவாதிப்பதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதை வர வேற்கிறேன். ஆனாலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். குத்தகைதாரர் களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கிகளை முழுமையாக கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று எண்ணினோமானால் அது மிக்க மனிதாபிமானமில்லாத முடிவாகத்தான் இருக்க முடியும். ஆனால் அமைச்சர் அவர்கள் மூன்று பகுதிகளாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

ஆனால் அதே சமயத்தில் தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள், கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக இருப்பதாக தெரிகிறது. அந்தக் கோயில், மடங்களின் நிலங்களை குத்தகை எடுத்திருப்பவர்கள் குத்தகை பாக்கி தராத நிலை இருக்கிறது. அதனால் அந்தக் கோயில்களிலும், மடங் களிலும் நடத்த வேண்டிய அறக் கட்டளைகள் முறையாக நடத்தப் பெறாமல் இருக்கிறது. விவசாயிகள் பிரச்சினை என்ற பெயராலும், அரசியல் காரணங் கள் என்ற பெயராலும் இந்தக் குத்தகை பாக்கிகள் அப்படியே நிலுவையில் நிற்கின்றன. நிலைமையை அரசியல்வாதிகளான நாம் அனைவரும் தெரிந்தோ தெரியாமலோ அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். அது நல்ல தல்ல.

அறங்காவலர்கள் என்று சொல்லப்படும் அலுவலர்களை நியமித்து விட்டால் மட்டும் போதாது. அந்த அறங்காவலர்கள் அறத்தை காப்பாற்ற முடியாமல், அறக்கட்டளைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கும் நிலைமைகளை

[திரு. எல். இளையபெருமாள்]

[1980 ஆகஸ்ட் 5

உணர்ந்து, அவற்றை களையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக்
கோயில்களின், மடங்களின் நிலங்களை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.
அந்தக் கோயில்களுக்கு நிர்வாகம் நடைபெற, காம்பன்சேஷன் என்று சொல்லப்
படுகிற, நஷ்ட ஈடு கொடுக்கவாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது ஒரு
ஆண்டுக்கு இவ்வளவு தேவை என்று கணக்கிட்டு, அதை அரசாங்கத்திலிருந்து
வழங்கி, அந்த நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, நிலமற்ற விவசாயி
களுக்கு, அல்லது குத்தகைதாரர்களுக்கு, அல்லது நிர்க்கதியாக இருக்கிற
விவசாய கூலிகளுக்கு, தொழிலாளர்களுக்கு. அந்த நிலங்களை அரசாங்கம்
பகிர்ந்துக் கொடுக்குமேயானால், இந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்டுவதாக
இருக்கும் என்பதை ஒரு யோசனையாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொன்று. அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.
அவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அதிலும் அமைச்சர் என்கிற
முறையில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களோடு கூட நெருங்கிப் பழகக் கூடிய
வாய்ப்பு பெற்றிருப்பவர். அவருக்கு நன்கு தெரிந்திருக்கும். கிராம முன்சீப்,
கணக்குப் பிள்ளை என்று இருக்கிற கிராம ஊழியர்கள், விவசாயிகளுக்கும்
அவர்தான் பயிரிடுகிறார் என்று எழுதுவார். குத்தகைதாரர்களுக்கும் அவர்
கள்தான் பயிரிடுவதாக எழுதுவார். ஒரு குறிப்பிட்ட நிலத்தில் இராமனும்
பயிரிடுகிறான் என்றும், கோவிந்தனும் பயிரிடுகிறான் என்றும் அவர்கள் சர்டிபி
கேட் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கிறது.

ஆகவே, இதைப் பதிவு செய்வதற்கு கிராமப் பகுதிகளில் ஒரு மக்கள் குழு
அமைக்க வேண்டும். அந்த மக்கள் குழு அந்தப் பகுதியில் உள்ள நிலச்
சொந்தக்காரர்கள், சாகுபடிக்காரர்கள், விவசாயிகள் ஆகிய எல்லோரையும்
அழைத்து விசாரித்து இந்த ஒரு மனிதன் இந்த நிலத்தை இவ்வளவு ஆண்டு
களாக பயிர் செய்கிறான் என்று எல்லா விவரங்களையும் அறிந்து முடிவு
செய்ய ஒரு மக்கள் குழுவை அமைத்தால் நீங்கள் கொண்டு வந்திருக்கிற
சட்டத்தினால் விவசாயிகளுக்கு உண்மையான பலன் கிடைக்க வாய்ப்பு ஏற்
படும். இதை நான் சொல்லும்போது அதிகாரிகளை நாம் நம்ப வேண்டாம்
என்று சொல்லவில்லை. ஆனால் நமது இந்திய அரசியலின் போக்கும்,
சமுதாயத்தில் மனிதாபிமானம் இல்லாத ஒரு நிலையும், புரட்சிகரமான திட்டங்
களை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாரற்ற நிலையும், சோஷியல் பாய்க்காட்டும்,
நாம் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டால் அத்தனையும் மாறும் என்று எண்ணி
னாலும் அவை மாறாத நிலையும், கல்வி மனிதனை உயர்த்துவதற்கு வழி



1980 ஆகஸ்ட் 5] (திரு. எல். இளையபெருமாள்)

காட்டாத நிலையும் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்படிப்பட்ட அவல நிலை இருப்பது என்னை விட அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

தஞ்சை மாவட்டத்தில், தென் ஆற்காடு மாவட்டத்தில், திருநெல்வேலி தாம்பிரபாணி பாசனப் பகுதிகளில், திருச்சியில் முசிறி, கரூர் போன்ற பகுதிகளில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதை எல்லோரும் அறிவர். ஆகவே மக்கள் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். வேண்டுமானால் அதை சர்வ கட்சியினரையும் கொண்ட குழுவாக வைத்துக்கொண்டாலும் சரி அல்லது கட்சிசார்பற்றவர்களை வைத்துக்கொண்டாலும் சரி அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டால்தான் விவசாயிகளுக்கு நல்லதொரு நிலை கிடைக்க வழி ஏற்படும். அப்படி ஒரு குழு இருந்தால் தவறு செய்கிற நிலை ஏற்படாது.

தஞ்சை ஜில்லாவில் ஒரு பகுதி, தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு பகுதி என்ற முறையில் அதிகாரிகளின் அதிகார வரம்பு இருப்பதால் மாயூரத்திற்கு இரண்டு நாட்கள், சீர்காழிக்கு இரண்டு நாட்கள், சிதம்பரத்திற்கு இரண்டு நாட்கள் என்று சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிர்வாக அமைப்பு மாற வேண்டும்.

எவ்வளவு விவசாயிகள் பயிரிடுகிறார்கள், யார் யார் நிலங்களில் பயிரிடுகிறார்கள், எவ்வளவு ஆண்டுகளாகப் பயிரிடுகிறார்கள், எவ்வளவு குத்தகை பாக்கி என்பதற்கு அந்தந்த பஞ்சாயத்து அலுவலகங்களில் ஒரு ரிக்கார்ட் தயார் செய்து பொதுமக்கள் கவனத்திற்கு வைப்பார்களானால் உண்மை விவசாயிகள் யார் யார் என்று தெரியும். கிராமங்களில் நம்பிக்கை காரணமாக முழு குத்தகைத் தொகையையும் கொடுத்துவிட்டாலும் அப்புறம் ரசீது தருகிறேன் வா என்பார்கள். அவன் போய்விடுவான். அப்படியிருக்கும் போது நீ கட்டியதாக ரிக்கார்டில் இல்லை என்றால் அவன் அவதிப்பட வேண்டியிருக்கும். ஆகவே அந்தந்தப் பஞ்சாயத்துக்களில் யார் யார் நிலங்களை யார் யார் பயிரிடுகிறார்கள், எவ்வளவு ஆண்டுகளாகப் பயிரிடுகிறார்கள், குத்தகை பாக்கி எவ்வளவு என்பதெல்லாம் பற்றிய கம்ப்ளீட் ரிக்கார்ட் இருக்க வேண்டும். அப்போது தான் இப்படிப்பட்ட சட்டங்களினால் விவசாயிகளுக்கு உண்மையான பலன் கிடைக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்
பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப்பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட
முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980) மீது சில
முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே

(பிற்பகல் 12-50)

புயல் அடித்து நீண்ட நாள் ஆகிறது. இந்த புயல் அடித்ததற்கு, நிவாரணம்
அளிப்பதற்காக இன்றைக்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அடுத்த புயல்
எப்போது வருமென்று சொல்ல முடியாது. இந்த நிவாரணம் கொடுப்பதற்குள்
வந்தாலும் வரலாம். அந்த கன்டிஷனிலே இந்த நாட்டினுடைய இயற்கை
சூழ்நிலை இருக்கிறது. உடனுக்குடன் நிவாரணம் கொடுப்பதற்கு மத்திய
அரசாங்கம் முன்வர வேண்டும். புயல் அடிக்கிறது, வெள்ளம் வருகிறது, அவை
உடைகிறது.' தமிழகத்திலே எப்படி பாதிப்பு ஏற்பட்டது என்பதைப் பற்றி
தமிழக அரசு குறிப்பு அனுப்புகிறது. அதற்குரிய நிவாரணத் தொகையை
உடனுக்குடன் அளிப்பதற்கான நிலைமைகள் நம் நாட்டிலே இல்லை.
உதாரணமாக, புயல் அடித்த காலத்திலே விவசாயிகளுக்கு குத்தகை
பாக்கியைத் தள்ளுபடி செய்யவில்லை, வசூலிப்பதைத் தள்ளி வைத்திருக்
கிறோம். புயல் அடித்தது, வெள்ளம் வந்தது. இதெல்லாம் உண்மை ஆயிற்றே?
துவக்கத்திலேயே உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, பாதிப்பிற்கு
உள்ளானவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புயல் அடித்தபோது, குடிசைகளிலே வசிப்பவர்களுக்கு ரூ. 200 என்றும்,
கூரை, ஓட்டு வீடுகளிலே வசிப்பவர்களுக்கு கடன் கொடுக்கப்படும் என்று
சொல்லப்பட்டு, பின்னர் கொடுக்கப்படவில்லை, அதேபோல் பர்மா அகதி
களுக்கும் நிவாரணம் கிடையாது. குத்தகைதாரர்களாக இருந்து, ஓட்டு
வீடுகளிலே வசிப்பவர்களின் நிலை என்ன? அதையெல்லாம் பரிசீலிக்க
வேண்டும். என்னுடைய கருத்து என்னவென்றால், இந்த குத்தகைதாரர் என்ற
வார்த்தையையே தமிழ்நாட்டிலே எடுத்துவிட வேண்டுமென்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குத்தகை விவசாயிகள்
என்பதற்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள்
சொன்னமாதிரி, கோயில் நிலங்களையும், மடத்து நிலங்களையும், இன்னும்
தனிப்பட்டவர்களின் நிலங்களையும் அரசாங்கம் எடுத்து, இந்த நிலங்களை
குத்தகைக்கு எடுத்து பயிரிடும் விவசாயிகளுக்கே இவைகள் சொந்தம் என்று
அறிவித்துவிட்டு, வங்கியின் மூலம் அதற்கான பணத்தை மொத்தமாக
அரசாங்கமே பெற்று, அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு அந்தப் பணத்தைக்





கொடுத்துவிட்டு, வருஷா வருஷம் இந்த விவசாயிகளிடம் வசூல் செய்து கொள்ளுகின்ற நிலைமை ஏற்பட்டால் ஒழிய, இந்த குத்தகை நிவாரணம், தள்ளுபடி என்பதெல்லாம் தொடர்ந்து இருந்துகொண்டே தான் இருக்கும்.

கேரளாவிலே 1978 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையிலே, அவர்களுக்கே அந்த நிலங்களைச் சொந்தமாக மாற்றியதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதே முறையில் குத்தகை விவசாயிகளைப் 'பாதுகாக்கிறோம், குத்தகை விவசாயிகளுக்கு நிவாரணம் தருகிறோம் என்று சொல்வதைவிட, இத்தகைய நிலங்களை 'உழுகின்றவனுக்கே நிலம் உரிமை' என்று மன்னார்குடியிலே விவசாயத் தொழிலாளர் மாநாட்டிலே கோஷமிட்டதற்கு ஏற்ப, அவர்களுக்கு உரிமையாக்க வேண்டும். அப்போது தான் உற்பத்தியும் பெருகும். ஏனென்று சொன்னால், தனக்கு நிலம் சொந்தமில்லை என்பதால், கொஞ்சம் ஆழமாக உழுவதற்குப் பதிலாக, மெத்தனமாக உழலாம். தான் எப்போதும் நிலத்திலே இருந்து வெளியேற்றப்படலாம் என்கிற நிலை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் நான்கு பசலியில் ஒரு பசலியைத் தள்ளுபடி செய்கிறோம், ஐந்து பசலியிலே இரண்டு பசலியைத் தள்ளுபடி செய்கிறோம் என்பதையெல்லாம்விட, இத்தகைய நிலங்களை அந்த குத்தகை விவசாயிகளுக்கு தள்ளுபடி பண்ணுகிறோம், அதாவது உழைக்கின்றவனுக்கே, உழுகின்றவனுக்கே அந்த நிலங்களை சொந்தமாக்க வேண்டும்.

கோயில் நிலங்களும், மடாதிபதிகளுடைய நிலங்களும் நிறைய இருக்கின்றன. பண்டார சந்நதிக்கு எதற்கு 7½ லட்சம் ஏக்கர்? கோவில்களிலே இருக்கின்ற சாமியா சாப்பிடுகின்றது. இல்லை. நைவேத்தியம் நடக்கட்டும்; மணி அடிக்கட்டும். மூன்று வேளையும் பூசைகள் நடக்கட்டும். அதை யார் வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளட்டும். ஆனால், இவ்வளவு நிலம் தேவையில்லை. அத்தகைய நிலங்களையெல்லாம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புயல் அடிக்கிறது, வெள்ளம் வருகிறது. வறட்சி வருகிறது. இப்படி புயலாலும், வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்படுகின்ற குத்தகை விவசாயிகளுடைய பிரச்னைகளைத் தீர்க்கின்ற வகையிலே, நிலங்களை அவர்களுக்கே உரிமையாக்க வேண்டும். மத்திய அரசாங்கம் இத்தகைய புயல், வெள்ளம், வறட்சி வந்தால், அதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கின்ற வகையிலே செயல்பட வேண்டும்.

[திரு. மு. அம்பிகாபதி]   [1980 ஆகஸ்ட் 5

மத்திய அரசின் பாரபட்சமான செயல்பாடுகளின் விளைவால் தமிழக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய பாதிப்பைப் போக்கும் முறையில் கடுமையான நடவடிக்கையை மத்திய அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்க இருக்கிற ஒரே வழி, புனிதமான வழி 'லாண்ட் டு தி டில்லர்' என்பதைத் தவிர வேறு வழி கிடையாது—ஆகவே உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்று சொல்வது சரியல்ல. மாநில அரசு மத்திய அரசைக் கேட்கலாம். பாரபட்சம் என்று சொன்னால் கேட்டு கொடுக்கப்படவில்லை என்று ஆகிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு நூற்றுக்கு மேற்பட்ட லைசென்சுகள் கேட்டு தேங்கிக் கிடக்கின்றன.

* திரு. பி. எம். தங்கவேல் ராஜ்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு எங்கள் கட்சியின் சார்பில் பேசிய திரு. இளையபெருமாள் அவர்கள் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளை வரவேற்று நல்ல முறையில் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவிலே 1972-73-ல் இருந்து 1977-78 முடிய ஐந்து ஆண்டுகளுக்கான குத்தகைகளை ஒன்றாகக் கூட்டி, பிறகு ஐந்தால் வகுத்து, பின் நான்கால் வகுத்து, முதலில் ஒரு பிரிவையும், பிறகு இரண்டு பிரிவுகளையும் செலுத்தவேண்டுமென்று சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1972-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் 21/72 என்ற சட்டத்தைக் கொண்டு வந்து 1381 ஆம் பசலி குத்தகை முழுவதும் கட்டினால் முந்தைய குத்தகை முழுவதும் தீர்க்கப்பட்டதாகக் கருத வேண்டுமென்று கூறி அதனை நிறைவேற்றினார்கள். அது நேரடியான சட்டமாக இருந்தது. இந்தச் சட்டம் நேரடியாக மூக்கைப் பிடிக்காமல் சுற்றி வளைத்து மூக்கைப் பிடிக்கிறது. 1972-ல் விலைவாசி நிலை வேறு. 1978-ல் பொருள்களின் விலைவாசி நிலைமை வேறு. ஒவ்வொரு ஆண்டும் பொருள்களின் விலை கூடிக்கொண்டே போகிறது. 1973-ல் நெல் எந்த விலைக்கு விற்றது, 1976-ல் எந்த விலைக்கு விற்றது, 1978-ல் எந்த விலைக்கு விற்றது, என்று பார்த்தால் தடுமாற்றம் ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அமை[illegible]



1980 ஆகஸ்ட் 5]   [திரு. பி. எம். தங்கவேல் ராஜ்]

ஏதாவது ஒரு ஆண்டு பசலியைச் செலுத்தினால் மற்ற இதர பசலிகள் தள்ளுபடியாகின்றன என்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா தி.மு.க. ஆட்சி 1977-ல் வந்தது. வந்து இரண்டு மாதத்திற்குள் நவம்பர் 11, 12 ஆகிய இரண்டு தினங்களில் பெரும் மழையும், புயலும் வெள்ளமும் ஏற்பட்டது என்பதை நாடு மறந்திருக்க முடியாது. குடகனாறு அணை உடைந்து பெரு வெள்ளம் ஏற்பட்டது, சேதம் ஏற்பட்டது. 1978 ஆம் ஆண்டிலும் பெரு மழையும் வெள்ளமும் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, 1978-79 ஆம் ஆண்டுக்கான குத்தகையையும் இத்துடன் சேர்த்து ஒரு பரிகாரம் கொண்டு வந்தால் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

1976-க்குப் பிறகு இரண்டு மூன்று வருஷங்கள் விவசாயிகளில் சிலர் குத்தகை பாக்கியைச் செலுத்தாததால் நிலத்தை விட்டு வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான இழந்த நிலத்தை மீண்டும் அடைய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் மாநில அரசு மத்திய அரசிடம் இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு சென்றால் உறுதுணையாக இருக்கும். மாநில அரசை விட மத்திய அரசு ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது, அந்தக் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது. ஏழை எளியவர்களுக்கும் பயன்படும் திட்டத்தை மத்திய அரசு ஆதரிக்கும் என்ற எண்ணத்தைக் கூறிக் கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கிறது என்று வரவேற்றாலும் ஒரு சில கஷ்டங்களும் இருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஏழை விதவைகள் இருக்கிறார்கள். ஏழை முதியவர்கள்

(பிற்பகல் 1-00)

இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் 1, 2 ஏக்கரை வைத்துக் கொண்டு ஜீவனம் செய்யக்கூடியவர்கள்தான். இந்தச் சட்டத்தின் மூலமாக அப்படி 1, 2 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கின்ற ஏழை நிலச் சொந்தக்காரர்கள் பலன் அடைய இடம் இல்லை இந்தச் சட்டத்திலே அவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் கொடுக்க இந்த அரசு முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையிலே

சட்டம் கொண்டுவரப்படவேண்டும். அந்த நிலைமையில் அந்தச் சிறு நிலச்
சுவாந்தார்களுக்கு மொத்தமாக ஒரு தொகையைக் கொடுத்தாலும் அவர்கள்
அதை வைத்துப் பிழைத்துக் கொள்வார்கள். இப்போது அதுவும் இல்லாமல்,
இந்தச் சட்டத்திலும் நிவாரணம் இல்லாமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற
நிலைமை தான் இருக்கிறது. இன்றைக்கு அந்தச் சிறு நிலச்சுவான்தார்கள்
கிராமங்களிலே பட்டினி கிடக்கக்கூடிய நிலைமை கூட ஏற்படுகிறது, அவர்கள்
கோர்ட்களுக்கு வந்து கண்ணீர் விட்டு அழுத நிலையைக்கூட நான் கண்ணாலே
பார்த்திருக்கிறேன்.

விவசாயிகளுக்கு சேதம் ஏற்பட்டால் அவர்களைக் காப்பதற்காக பயிர்
இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்
தான் அந்த அந்த வருடத்திலே மகசூல் பாதிக்கப்படுகிறபோது எவ்வளவு
நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு அந்த விவசாயிகளுக்கு
நட்ட ஈட்டைக் கொடுக்கமுடியும். விவசாயிகளுடைய நிலைமை பாதுகாக்கப்
படவேண்டும் என்ற நல்ல எண்ணம் மட்டும் போதாது, 1, 2 ஏக்கர் வைத்துக்
கொண்டிருக்கின்ற சிறு நிலக்காரர்களையும் பாதுகாக்கிற வகையிலே
சட்டத்திலே திருத்தம் செய்யவேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை
அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே,
மூன்று தடவைகளிலே குத்தகை பாக்கியை செலுத்துவதற்கான திட்டம்
இருக்கிறது. 1978-79 ஆம் ஆண்டிலே காவிரிக் கரைகளிலேயும் அமராவதி
யிலேயும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல.
1978 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட மழையாலே அமராவதிப் பகுதியிலே,
கட்டளை, மனவாசி, மாயனூர், புலியூர், வீரராக்கியம் போன்ற இடங்களிலே
சேதம் ஏற்பட்டதன் காரணமாக இன்று கூட விளையவில்லை, அப்படி பயிர்
சாகுபடியே இல்லாத நிலங்களுக்கு எந்த விதமான நிவாரணமும் கொடுக்கப்
படவில்லை. அதையும் கொண்டுவரவேண்டும், அதோடு கூட சிறு விவசாயி
களுக்கும் பயிர் பாதுகாப்புத் தரக்கூடிய முறையிலே சட்டத்தைக் கொண்டு
வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள்
(நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைக்
கூற விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிற நேரத்திலே இதிலே
அடிப்படையிலேயே சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை
நீக்கினால்தான் உள்ளபடியே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்தச்
சட்டத்தின் மூலமாகப் பணம் கிடைக்கமுடியும். புயலால், வெள்ளத்தால்



பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவரும் இன்றைய தினம் பலன் பெறுகின்ற
அளவுக்கு, புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும்
பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை.
தஞ்சை மாவட்டத்திலே ஏழு தாலுகாக்கள்தான் பாதிக்கப்பட்ட பகுதிகள்
என்று அறிவிக்கப்பட்டது. எனவே இந்தச் சட்டத்தின் மூலமாக உள்ளபடியே
சில பகுதிகள் விடப்பட்டு இருப்பதால், அனைத்துப் பகுதிகளுக்கும் பலன்
கிட்டாது. அரசு ஊழியர்களுக்கு முன்பணம், பிராவிடன்ட் பண்ட் பணம்
எவ்வாறு அனைவரும் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டு வழங்கப்
படுகிறதோ அதைப்போன்று தமிழகத்திலே உள்ள சாகுபடி செய்யக்
கூடியவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதி அவர்களுக்கு
நிவாரணம் அளிக்க வேண்டிய திருத்தத்தைச் செய்யவேண்டும். தஞ்சை
மாவட்டத்திலே புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு
ஆண்டுகளாக பெருத்த சேதத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே தஞ்சை
மாவட்டம் முழுவதையும் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்று
அறிவிக்கவேண்டும், அதன் மூலமாக அனைவரும் அந்தச் சலுகைகளைப்
பெறக்கூடிய முறையிலே சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். இப்படியே
கொண்டுவந்தால் அதன் காரணமாக உள்ளபடியே பாதிக்கப்பட்ட விவசாயிகள்
பலனைப் பெற முடியாது. 1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட சட்டத்தை இங்கே பேசிய அனைத்து
உறுப்பினர்களும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே அமைச்சர்
அவர்கள் அதை கவனத்தில் கொண்டு, நடந்து முடிந்த பசலிக்கு குத்தகை
பாக்கியை அளந்தால் அதற்கு முன்பாக உள்ள பாக்கிகள் அனைத்தும்
தள்ளுபடி செய்யப்படும் என்ற முறையிலே சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.
1972 ஆம் ஆண்டு ஜூலை முதல், 1978 ஆம் ஆண்டு ஜூன் முடிய உள்ள
குத்தகை பாக்கிக்கு மட்டும்தான் இந்தச் சட்டத்தில் வழிவகை சொல்லப்
பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு உள்ள இரண்டு பசலிகளுக்கும் எந்த வித
மான சலுகையும் அறிவிக்கப்படவில்லை. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
விவசாயிகள் கடந்த இரண்டாண்டுக் காலமாக சாகுபடி செய்தும், தங்களுடைய
வறுமையை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆகவே, அந்த நிலையிலுள்ள
விவசாயிகளுக்குக் கடந்த கால பாக்கிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்யும்
வகையில், சென்ற ஆண்டுக்கு மட்டும் குத்தகை அளந்தால் போதும் என்று
சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான குத்தகை பாக்கிக்கு உடனடியாகத்
தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. செ. இராமலிங்கம்) 1980 ஆகஸ்ட் 5]

இதே சட்டத் திருத்தத்தை 11—2—1980 ஆம் நாளன்று இந்த மாமன்றத்திலே கொண்டு வந்தபொழுது, 11—2—1980-இல் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்த பிறகுகூட ரெவின்யூ கோர்ட்டால், குத்தகை சாகுபடி செய்யும் பல விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக் கிறார்கள். அவ்வாறு ரெவின்யூ கோர்ட்டு மூலம் வெளியேற்றப்பட்டது செல்லாது என்று உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி வருவாய் வாரியத்தை ஒழிக்க இருக்கிறோமோ அப்படி இந்த ரெவின்யூ கோர்ட்டுகளையும் ஒழிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் என்னவென்றால், தஞ்சை மாவட்டத்தில் இந்த அதிகாரம் பெற்ற அதிகாரிகள், அதாவது ஆதரைஸ்ட் ஆபீசர்ஸ்-களாக வருபவர்கள், கடைசிக் காலத்தில், ரிடையர் ஆகும் ஒருசில ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிப்பட்ட பணிகளுக்கு வருகிறார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு மடங்கள், அறநிலையங்கள் போன்றவைகளுக்கு மேலாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். கடைசி இரண்டாண்டு காலம் அதிகாரிகளாக இருப்பதால் இப்படிப்பட்ட மடங்கள், ஆலய நிறுவனங் களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்குகிறார்கள். ஆகவே, ஏழை விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ரெவின்யூ கோர்ட்டுகளை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், 11—2—1980 ஆம் தேதிக்குப் பிறகு, ரெவின்யூ கோர்ட் மூலம் பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பந்தநல்லூரில், பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலத்திலிருந்து, சிறுகடம்பூர், திருவிடைமருதூர், முள்ளங்குடி, போழக்குடி, திருப்பனந்தாள், பந்தநல்லூர் மற்றும் திட்டச்சேரி ஆகிய கிராமங்களிலிருந்து நூற்றுக் கணக்கான விவசாயிகள் தாங்கள் பயிரிடும் நிலத்திலிருந்து ரெவின்யூ கோர்ட் மூலம் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட திருத்தத்தைக் கொண்டு வந்த பிறகு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வெளியேற்றத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் எல்லாம் எல்லாக் கிராமங்களிலேயும் அமல் செய்யப்படுகிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக இனாம் கிராமங்கள் ரயத்துவாரி கிராமங்களாக மாற்றப் படாததன் காரணமாக இந்தச் சட்டத்தை இனாம் கிராமங்களில் அமல்படுத்த



1980 ஆகஸ்ட் 5] [திரு. செ. இராமலிங்கம்]

முடியவில்லை. எனவே, இருக்கின்ற இனாம் கிராமங்களை உடனடியாக ரயத்துவாரி கிராமங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சட்டத்திருத்தங்களைக் கொண்டு வரும் நேரத்தில், சில சிறிய நிலச்சுவான்தாரர்களுக்கு மிகப்பெரிய அளவிற்கு எந்த விதமான பய னும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் பாதுகாக்கப்படுவதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். ஆறு, ஏழு ஆண்டுக் காலத்திற்கு முன்பு குத்தகை தள்ளு படிசெய்யும் நேரத்தில், அவர்கள் எந்தவிதமான பலனையும் அனுபவிக்காமலே நிலவரி கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலவரி கொடுக்கும் நிலைமைகளை மாற்ற வேண்டும். குறைந்தபட்சம் சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு வரிச்சலுகை அளித்து, தள்ளுபடி செய்யும் காலத்திற்காவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தாலும், புயலாலும் என்ற இயற்கைச் சீற்றத்தைக் காரணம் காட்டி நாம் விவசாயிகளுக்குச் சில சட்டங்களைக் கொண்டு வரவிருக்கின்ற காரணத்தினால் இந்தக் குத்தகை முறையையே அடியோடு மாற்றும் அளவிற்கு நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால் இப்படிப்பட்ட பிரச்னைகள் எழாது; நிரந்தரத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

கூட்டுறவு நிலவள வங்கியின் மூலமாக, சாகுபடி செய்யும் குத்தகை நிலங் களைச் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்குவதற்கான வழிவகை இருக்கிறது. ஆனால் கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக நிலவள வங்கிகள் கூட குத்தகை நிலங்களைக் கிரயம் செய்வதற்கு தொகை அனுமதிக்கப்படுவது கிடையாது. குறைந்தபட்சம் அப்படிப்பட்ட ஒருமுறையைக் கொண்டு வந்தால் தஞ்சை மாவட்டத்தில் குறைந்தபட்சம் தற்போது அமலிலே இருக்கின்ற மூன்றில் ஒரு பகுதியைத் தங்களுடைய குத்தகை உரிமைக்காகத் தள்ளுபடி செய்து கொண்டு, மீதி உள்ள மூன்றில் இரண்டு பங்கு நிலத்தையாவது பெற்றுக் கொள்ள முடியும். அதன் மூலமாக இரண்டு சாராரிடமுமே சுமுகமான உறவோடு இருப்பதோடு, அந்த நிலத்தைக் கிரயம் செய்து கொண்டு அந்தக் குத்தகை முறையை அடியோடு ஒழிக்க முடியும். எனவே, குறைந்தபட்சம் அப்படிப்பட்ட நிலவள வங்கிகளின் மூலமாகவாவது இந்தக் குத்தகை முறையை அடியோடு நீக்கி விடுவதற்கு வழிவகை காண வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1980 ஆகஸ்ட் 5

(பிற்பகல் 1-10)

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அறநிலையங்கள், மடங்கள், கோயில்கள் இவற்றிற்குத்தான் அதிகமான நிலங்கள் இருக்கின்றன. அறநிலையங்களுக்குத் தேவையான சொத்துக்கள் மட்டும் இருந்தால், இந்த நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம். தேவைக்கு மேல் அதிகமாகவே அவர்கள் வைத்திருக்கிறார்கள். அல்லது ஒரு சில ஆலயங்களுக்குச் சரியான முறையில் வருவாய் போவது கிடையாது என்கிற குறை கூட இருக்கலாம். ஆனால், ஒரு வேளை நைவேத்தியம் நின்று போவதாலோ அல்லது அபிஷேகம் நின்று போவதாலோ, ஆலயங்கள் அடியோடு ஒழிந்து போய்விடப் போவதில்லை. எனவே, இப்படிப்பட்ட சிறு குறைபாடுகளுக்காக, அந்த அறநிலையங்கள், கோயில்களை மட்டுமே கவனத்திலே கொண்டு, நாம் சாகுபடி செய்கின்ற விவசாயிகளை மிகவும் இன்னலுக்கு ஆளாக்க வேண்டிய அவசியமில்லை. அறநிலையங்கள், மடாலயங்கள், கோயில்கள் என்று பாகுபடுத்தாமல், எந்த விதிவிலக்கும் அளிக்காமல், குத்தகை சாகுபடி செய்கின்ற அத்தனை விவசாயி களுக்கும் உடனடியாக அவர்களுக்கு அந்த நிலங்களையெல்லாம் உடமையாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட அறநிலையங் களுக்குச் சொந்தமான நிலங்களைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிற நேரத்தில், அப்படிப்பட்ட குத்தகை நிலங்களுக்குச் சொந்தமான தொகையை வங்கிகளிலே நீண்டகால வைப்பு நிதியாக வைத்தால், அதன்மூலமாகக் கிடைக்கும் வட்டி தற்பொழுது கிடைக்கின்ற குத்தகையை விட அதிகமாகக் கிடைக்கும். அதன்மூலமாக, ஆலயங்களில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குத் தேவையான ஊதியத்தை, அல்லது மற்ற உதவிகளைச் செய்ய முடியும். அப்படிப்பட்ட குத்தகைச் சட்டங்கள் தேவை இருக்காது. எனவே, உடனடியாக அறநிலையங்கள் மடாலயங்கள், கோயில்கள் எதற்குமே விதிவிலக்கு அளிக்காமல், அதை உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்குச் சொந்தமாக்கும் முறையில் உடனடியாகச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு ஜூலை முதல் 1978 ஆம் ஆண்டு ஜூன் முடிய உள்ள குத்தகை பாக்கிகளை மட்டும், 31—12—1980, 30—6—1981, 30—6—1982 தவணைகளில் செலுத்தலாம் என்று கூறி இருக்கின்றீர்கள். அதே போன்று 1978-79, 1979-80 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து, குறைந்தபட்சம் 1979-80-க்கான பாக்கியைக் கட்டினால், முன்பிருந்த அனைத்தும் ரத்து செய்யப்படும் என்ற திருத்தத்தை நீங்கள் சேர்க்கவேண்டுமென்று வலியுறுத்தி அமருகிறேன். வணக்கம், நன்றி.



* திரு. க. பாரமலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்களுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், இது அதிகாரபூர்வமாகக் குத்தகைதாரர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்களுக்குதான் இந்தச் சலுகை பொருந்தும். ஆனால், இன்றைக்கு ஆயிரக்கணக்கான விவசாயிகள் குத்தகைதாரர்கள் சட்டப் பாதுகாப்பைப் பெற முடியாத நிலையில். நிலச் சொந்தக்காரர்களுடைய தயவிலேயே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு செய்தால், அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவோம் என்ற அச்சம்தான். அதனால்தான் அந்த நிலச் சொந்தக்காரர்களுடைய தயவிலேயே அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் எப்படி பினாமி நிலங் களைக் கைப்பற்ற நாம் மக்கள் குழுக்களை அமைக்க இருக்கின்றோமோ அதைப்போல், உண்மையான குத்தகை விவசாயிகளைக் கண்டு பிடிக்கவும் அந்த நிலங்கள் அவர்களுக்குப் போய் சேருவதற்கும் கிராமங்களிலே மக்கள் குழுக்கள் அமைத்தும் இந்தத் திட்டம் இன்றைக்குக் குத்தகை விவசாயி களுக்குப் பாதுகாப்புச் சட்டம் மூலம் விவசாயிகளுக்கு கொடுக்கின்ற சலுகை களை அவர்களுக்கும் கொடுக்கச் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல், இன்றைக்கு எங்களுடைய பகுதியில், கொடிக்கால் விவ சாயம் மிக அதிகமாகச் செய்கிறார்கள். அது புயலால் பாதிக்கப்படும்போது, விவசாயிகளுக்கு—சாதாரணமாக நெல் விவசாயம் செய்கின்றவர்கள் புயலால், வெள்ளத்தால், அந்தப் பயிர் பாதிக்கப்பட்டாலும்கூட—அடுத்த ஆண்டு தொடர்ந்து நாம் விவசாயம் செய்ய முடியும். ஆனால், கொடிக்கால் விவசாயம் 3 ஆண்டுகள் தொடர்ந்து இருப்பது. ஒரு தடவை அது பாதிக்கப் பட்டால், தொடர்ந்து 3 ஆண்டுகள் நிச்சயமாகப் பயிரிட முடியாது. ஓரிடத் திலே, ஒரு தடவைக்கு மேலாகக் கொடிக்கால் விவசாயம் செய்ய முடியாது. ஆகவே, 3 ஆண்டுகளுக்கு மொத்தமாக, விவசாயிகள் குத்தகைக்குப் பெற்று, 40 பேர் அல்லது 45 பேர் சேர்ந்து, குத்தகைக்குப் பெற்று கொடிக்கால் விவசாயம் செய்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டாலும், அந்த 3 வருடத்திற்கு மொத்தமாகச் சேரவேண்டிய குத்தகைப் பணத்தை அந்த விவசாயிகள் கொடுக்க வேண்டியிருக்கிறது.

[திரு. க. பாரமலை] [1980 ஆகஸ்ட்

அப்படிக் கொடுத்துவிட்டாலும் கூட, அந்த வட்டாரத்திலே ஏற்படுகின்ற,
புயலால், வெள்ளத்தால் ஏற்படுகின்ற, ரிப்பேர்களை. மண்மூடிப் போய்விட்
டால் ஏற்படுகின்ற சேதங்களை சீர் செய்ய முடியவில்லை. எங்கள் பகுதி
யிலே நூற்றுக்கணக்கான கோடிக்கால் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில்
கொடிக்கால் விவசாயிகளுக்கும் 3 ஆண்டுகளுக்கான குத்தகையை மொத்த
மாகத் தள்ளுபடி செய்கின்ற திருத்தத்தைக் கொண்டு வருவார்களேயானால்,
அதற்காக நான் நன்றி உடையவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்
கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே,
இங்கே சட்டப்பேரவையின் முன்னாலே இருக்கிற சட்ட முன்வடிவின்மீது
மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொன்
னார்கள். அந்தக் கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள்
அனைவருக்கும் தனித்தனியாக பதில் சொல்லவேண்டும் என்றாலும்,
மொத்தமாகச் சொல்லி, தேவைப்பட்டால் உறுப்பினர்கள் விளக்கம் கேட்கிற
போது பதில் சொல்லுகிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
இங்கே 1972, 1972 என்று சிலர் மீண்டும் சொன்னார்கள். இந்த 1972
என்றால் இதிலே என்ன இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
களாகிய நீங்கள் அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உறுப்பினர்கள்
எந்த அளவுக்கு நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு
நான் தெரிந்து கொண்டு வைக்காவிட்டாலும், நானும் உங்களைப் போன்று
ஒரு விவசாயக் குடிமகன் என்ற முறையில் நீங்கள் தெரிந்து கொண்டு வைத்
திருப்பதில் ஒரு பகுதியை நான் தெரிந்து வைத்திருக்கிறேன்.

1972 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்திற்கும் இப்போது கொண்டு வரப்
பட்டிருக்கும் சட்ட திருத்தத்திற்கும் மாறுபாடு என்ன என்பதை நீங்கள்
உன்னிப்பாகப் படித்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். நீங்கள் அதை நன்
றாகத் தெரிந்து வைத்திருந்தாலும், நான் சிலவற்றை சொல்ல விரும்பு
கிறேன்.

நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், 1972 ஆண்டு சட்டம் நல்ல
சட்டம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அன்றைக்கு ஒரு
சீர்திருத்தக் கருத்து, அன்றைக்கு இருந்த காலப்போக்கில் அது ஒரு சிறந்த
சட்டமாகத்தான் இந்த மாமன்றத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டது, மக்களும்
ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இன்றையதினம் அதைக் கொண்டு
வந்தால் மக்கள். அது எவ்வளவு சீர்திருத்த சட்டமாக இருந்தாலும்



1980 ஆகஸ்ட் 5] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அன்றைக்கு 1972 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டம் 1381 பசலியில் இதிலே உள்ள பாக்கியை மட்டும் கட்டி விட்டால், அதற்கு முன்னாலே இருக்கிற பாக்கிகள் பூராவும் ரத்தாகின்ற சட்டம் என்பதை நான் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். இதிலே 1381 ஆம் ஆண்டு பசலி என்றால் அதற்கு முன்னாலே இருக்கின்ற பசலிகள் எல்லாம் ரத்து என்று சொல்லுகிறபோது, அதற்கு முன்னாலே இருக்கின்ற பசலிகளைச் சிலர் கட்டி இருப்பார்கள். சிலர் பாதி கட்டியிருப்பார்கள், சிலர் கால் பாகம் கட்டியிருப்பார்கள். அப்படிக் கட்டினது தவறாகப் போய்விடும். கட்டாதவர்களுக்கு லாபமாகப் போய்விடும். கட்டியவர்களுக்கு நஷ்டமாகப் போய்விடும். இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1381-வது பசலியில் அதில் ஒன்று கட்டிவிட்டால் அதற்கு முன்னாலே இருக்கின்ற பசலி பூராவும் ரத்து செய்யப்படும் என்று சொல்லிவிட்டால், அதைக் கட்டியவர்களுக்கு லாபம் இல்லை. கட்டாதவர்களுக்குத்தான் லாபம். யார் அங்கே திறமைசாலிகளோ அவர்கள் கட்டாமல் இருந்து விடுவார்கள். யார் பயந்தவர்களோ, பாமரர்களோ அங்கே இருக்கிற நிலச் சொந்தக்காரர்களுக்குப் பயந்தவர்களோ அவர்கள் கட்டிவிடுவார்கள். அவர்களுக்கு அதிலே லாபம் இருக்காது. அதை கவனமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-20)

ஆனால், இன்றைக்குக் கொண்டு வந்து இருக்கும் சட்டம் இந்த 5 ஆண்டு அல்லது 3 ஆண்டில் எவ்வளவு கட்டியிருந்தாலும் சரி, அதிலே ஒரு பகுதி கட்டி இருந்தாலும் சரி, கால் பகுதி கட்டி இருந்தாலும் சரி, அத்தனையையும் வரவு வைத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. ஒரு கலம் கட்டி இருந்தாலும், ஒரு மரக்கால் கட்டியிருந்தாலும், அதை வரவு வைக்கவேண்டும் என்று தெளிவாக இந்தச் சட்டத்திலே இருக்கிறது.

இதைக் கொண்டு வருகிறபோது, இதில் தவணை கொடுத்து இருக்கிறோம் என்று சிலர் தவறாகக் கருதுவதாக நான் நினைக்கிறேன். தவணை அல்ல; தள்ளுபடி தான் முக்கியம். மீதி இருப்பது தான் தவணை. தள்ளுபடி முதல்; தவணை பின்னாலே தான் வருகிறது. தள்ளுபடி செய்து விட்டு, மீதிக்குத்தான் தவணை. எண்ணிப் பார்க்க வேண்டும். 1972 ஆம் ஆண்டில் கொண்டு வந்தது நல்ல சட்டம் இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஏன் என்றால், நானே அங்கே இருந்தேன் என்று இங்கே சொன்னார்கள். அன்றைக்கு இருக்கும் நிலையில் அந்தச் சட்ட முன்வடிவை அப்போது நிறைவேற்றியது சிறந்தது என்பதைத்தான் மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்

டார்கள். ஆனால், இன்றைக்கு ஒரு பசலி கட்டிவிட்டால் போதும் என்று
கொண்டு வந்தால், மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனக்கு
நன்றாகத் தெரியும். நீங்கள் எத்தனை விவசாயிகளோடு நெருங்கிப் பழகு
கிறீர்களோ அந்த அளவிற்கு நான் பழகவில்லை என்று சொன்னாலும்—நீங்கள்
100 விவசாயிகளோடு பழகுகிறீர்கள் என்று சொன்னால், நான் 10 விவசாயி
களோடாவது பழகி இருக்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற
போது, இங்கே இருக்கும் செயலாளர் எழுதிக் கொடுத்து, அதை நான்
இங்கே வந்து படிக்கிறேன் என்று யாரும் தயவு செய்து எண்ணிவிடக்
கூடாது. நானே மனம் விட்டு விவசாயிகளிடத்தில் பேசினேன். உங்க
ளுக்கு என்ன செய்தால் நன்மை கிடைக்கும் என்று பேசினேன். விவசாய
சங்கத்தில் உள்ளவர்களிடத்தில் பேசினேன். பயிரிடும் குத்தகைதார்
களிடத்தில் பேசினேன். பிறகு தான் எது நல்லதாக இருக்கும் என்று
எண்ணி, இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து இருக்கிறேன் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

ஐந்து ஆண்டு என்று சொன்னால், இந்த 5 ஆண்டு காலத்தில் யார்
எவ்வளவு கட்டினாலும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது ஒரு மரக்கால்.
ஒரு கலம், அல்லது 1 ரூபாய், அல்லது ½ ரூபாய், என்று கணக்கில் வைத்துக்
கொண்டு, கட்டியதாகச் செய்து. மீதி இருப்பதை ஒரு 5 வருஷம், அல்லது 5
வருஷத்திற்குச் சேர்த்து எவ்வளவு என்பதை 5 ஆக வகுத்து விட்டு, அதற்குப்
பிறகு கட்டிய தொகையையும் அதிலே கழித்து விட்டு, மீதி என்பதை நாம்
மறந்துவிடக்கூடாது. அப்படி வருகிறபோது இங்கே தவணை முழுங்குகிற
வேலை இல்லை. வசதி உள்ளவர்கள், ஆனவம் உள்ளவர்கள், வசதி
வாய்ந்தவர்கள், மிரட்ட முடிந்தவர்கள் கட்டாமல் இருந்தவர்கள் தப்பித்துக்
கொண்டார்கள். ஏழை எளியவர்கள், பிள்ளைப்பூச்சிகள், கண்டவுடன் பயப்
படுகிறவர்கள் அவர்களுக்கு நன்மை இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்
காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதை நான்
உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

1972 ஆம் ஆண்டிலே, 1381 பசலிக்குக் கட்டிவிட்டால், அதற்கு முன்னாலே
இருக்கிற தொகை ரத்து எவ்வளவு தெரியுமா, ஏறக்குறைய 3 கோடி மதிப்பு.
ஆனால் இன்றைக்கு எவ்வளவு தெரியுமா? ஏறக்குறைய 29 கோடி என்
பதை இந்த மன்றத்தில் நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். நாம் இன்
றைக்குத் தள்ளுபடி செய்வது 29 கோடி ரூபாய் அளவிற்கு என்பதை மீண்டும்
கூறுகிறேன். அன்றைக்கு தள்ளுபடி செய்தது 5 கோடி என்பதை இந்த
மன்றத்திலே நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.



அது மட்டுமல்ல, நான் தெரிவித்துக்கொள்வேன். அன்றைக்கு அப்படியே
அதைக் கட்டினால் நன்மை. இன்றைக்கு அதைக் கட்ட வேண்டியது 3
பசலியில் என்று சொல்லியிருக்கிறோம். அருமை உறுப்பினர்கள் ராஜ
மாணிக்கம் அவர்களும், இராமலிங்கம் அவர்களும் சொன்னார்கள். 72-ம்
வருஷத்தில் கொண்டு வந்த சட்டம், அதிலே பல நன்மைகள் இருந்தன.
அதை அனுபவிக்க விடவில்லை என்று சொன்னார்கள். சட்டத்தைப்
புரியாத பல விவசாயிகள் இருந்தார்கள். அதனால் குறிப்பிட்ட காலத்தில்
கட்டி அந்த நன்மையைப் பெற முடியவில்லை என்று சொன்னார்கள்.
அதனால்தான் இன்றைக்கு எல்லோருக்கும் நன்மை கொடுப்பதற்காக இதிலே
திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம். 10 வருஷம், 8 வருஷம் நன்மை
அனுபவிக்காதவர்களுக்குக்கூட நன்மை அனுபவிக்க வேண்டும் என்கிற வகை
யில் சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம்.

ஆனால். 1972-லே சட்டம் வந்தது என்றாலும், 1975 வரையிலும்
திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தது. ஆனால் 72-ல்
காலாவதியாகிவிட்டதற்கு, 3 ஆண்டுகள் இங்கே அந்த அரசு இருக்கிற
போது அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்கவில்லை என்று
நான் சொல்வதை சிலர் தவறாகக் கூட கருதக்கூடும். அது மட்டுமல்ல,
இங்கே பேசுகிறபோது அருமை சகோதரர் ராமலிங்கம் ஆனாலும் சரி,
அருமை சகோதரர் இராஜமாணிக்கம் ஆனாலும் சரி, இங்கே பேசிய மற்
றொரு உறுப்பினராக இருந்தாலும் சரி, ஏழை விவசாயி பற்றி சொன்
னார்கள். ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்து இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு
வேண்டும் என்று சொன்னார்கள். இதை ஏன் இவ்வளவு யோசித்து
யோசித்து கொண்டு வந்து இருக்கிறோம் என்றால், எங்களுக்குத் தெரியும்,
உங்களுக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும்கூட நன்றாகத் தெரியும், இரண்டு
ஏக்கர், மூன்று ஏக்கர் என்று வைத்து இருப்பவர்கள் குத்தகைக்கு விட்டு
இருக்கிறார்கள். விதவைகள் குத்தகைக்கு விட்டு இருக்கிறார்கள். அரசு
அலுவலகங்களிலே வேலை செய்கிறவர்கள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள்.
அவர்கள் சென்னையிலே வேலை பார்ப்பவர்களாக இருப்பார்கள்; நிலம்
தஞ்சையிலே அல்லது கோவையிலே அல்லது வேறு பல இடங்களிலே
இருக்கும். அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்புத் தரவேண்டும். தடிக்கம்பு
கொண்டு ஓங்கி அடிப்பதுபோல் அடித்தால் அவர்கள் எல்லாம் நொறுங்கி விடு
வார்கள். அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டும்; இவர்களுக்கும் பாது
காப்புத் தர வேண்டும். ஆகவேதான் தடிக்கம்பு கொண்டு ஓங்கி அடிக்காமல்,
மெதுவாக தட்டிக்கொடுத்து இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்
பதற்காகத்தான் இவைகளை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1980 ஆகஸ்ட் 5

அது மட்டுமல்ல சட்டத்தைக் கொண்டுவந்து நாங்கள் நிறைவேற்றிய
பிறகு நாங்கள் இந்த அவையிலே இல்லை என்பதைச் சொன்னேன்.
அவையில் இல்லாத காரணத்தால், அரசு இல்லாத காரணத்தால் கால
தாமதம் ஆகிவிட்டது என்பது உங்களுக்குத் தெரியும். 30—6—1980 வரை
தவணை கொடுக்கப்பட்டது. இன்றைக்கு தேதி 5—8—1980.
கொடுக்கப்பட்ட தேதி 30—6—1980. ஆனால் சட்டம் நிறைவேற்ற வந்திருக்
கிற நாள் 5—8—1980. இந்த இடைக்காலத்தில் யாராவது குத்தகைக்
கட்டவில்லை என்பதற்காக வெளியே தள்ளப்பட்டிருந்தால் அது செல்லாது;
அவர்கள் மனு செய்துகொண்டால் மீண்டும் குத்தகைதாரராகப் பதிவு செய்து
[illegible]
தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள், எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட
இந்தச் சட்டத்தை நுணுக்கமாகப் படிக்காமல் சொல்லியிருக்கிறார்கள் என்று
நினைக்கிறேன். புயலால் பாதிக்கப்பட்டவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்
பட்டவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள்—இவர்கள் எல்லோருக்கும்
சலுகை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியெல்லாம் சொன்
னால், விதவைகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்,
அரசு உத்தியோகத்தில் இருப்பவர்கள் எல்லாம் எப்படி பாதிக்கப்படுவார்கள்
என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அருமை சகோதரர் இராசமாணிக்கம் அவர்கள் தஞ்சாவூரில் 6 தாலு
காக்கள் மட்டும்தான் என்று சொன்னர்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ
எல்லா தாலுகாக்களும் இதில் அடங்கும். விவரம் வேண்டுமானால் தருகிறேன்.
ஒவ்வொரு தாலுகாவில் உள்ள கிராமங்கள் பட்டியலும் இருக்கிறது.
அவைகளை எல்லாம் படிப்பதற்கு நேரமாகும். அதனால் தாலுகாக்
களை மட்டும் சொல்லுகிறேன். தஞ்சை, ஒரத்தநாடு, கும்பகோணம்,
பாபநாசம், மாயூரம். சீர்காழி, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர்,
மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி தாலுகாக்கள் பூராவும் வருகின்றன.
பட்டுக்கோட்டை தாலுகாவில் மட்டும்—அது என்னுடைய வட்டம் என்று
சொல்வார்கள்—பூராவும் இல்லை. அதில் 161 கிராமங்கள்தான்
வருகின்றன. ஆனால் பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள பேராவூரணி
வட்டத்தில் 57 கிராமங்கள் வருகின்றன. இந்த இடங்கள் பூராவுக்கும்
நன்மை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 5] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

இந்தச் சட்டத்தைவிட சிறந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியும் என்று
நீங்கள் எல்லாம் சொன்னால் நிச்சயமாக நான் மகிழ்ச்சியடைவேன். ஏனென்
றால் பாதிக்கப்படுபவர்கள் யார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
இவ்வளவு தீவிரமாக இங்கே பேசினாலும் வெளியே போனதும் விதவைகள்
உங்கள் கண் முன்னால் வந்து நிற்பார்கள். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம்
வைத்திருப்பவர்கள் உங்கள் கண் முன்னால் வந்து நிற்பார்கள்; அரசு
அலுவலர்கள் உங்கள் கண்ணுக்கு முன்னால் வந்து நிற்பார்கள். அவர்களை
எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஓராண்டு கட்டினால் போதும் என்று சொல்லுகிறபோது, இந்தச் சட்டங்
களை நுணுக்கமாகப் பார்த்து, நன்றாகப் படிக்கவில்லையோ என்று சொல்ல
வில்லை; நன்றாகப் படித்துப் பார்த்து சொல்ல வேண்டும். ஓராண்டு என்பதை
விட, 5 ஆண்டு காலத்தை ஒன்றாகக் கூட்டி, அதை ஐந்தால் வகுத்து வருவதை
விட சிறந்த சட்டம் எப்படி கொண்டு வருவது என்று தெரியவில்லை.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் சொல்லும்போது இந்தச்
சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது பரிபூரணமாக நிறைவேற்றி விட்டீர்கள்
என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவையின் அனுமதியோடு அவையின்
நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**திரு. இரா. கருப்பையா** : தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்ச
ரவர்கள் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட தாலுக்காக்கள் பற்றி குறிப்
பிட்டார்கள். இதர மாவட்டங்களிலே பாதிக்கப்பட்ட தாலுக்காக்களையும்
கூறி அங்கே எந்த வகையிலே நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது
என்பதை விளக்கினால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : பேரவைத் தலைவரவர்களே,
இந்த மாநிலம் பூராவும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு நிவாரணம்
அளிக்கப்பட்ட விவரங்களைச் சொல்வது என்றால் நேரம் அதிகமாகும்.
புத்தகத்திலே இருக்கின்ற 7-வது பக்கத்திலிருந்து 62-வது பக்கம் வரை
படிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே எல்லா மாவட்டங்களிலும்
இருக்கின்றது. தஞ்சையில் மட்டுமல்ல, திருச்சியிலே இருக்கின்றது. இப்படி
எல்லா மாவட்டங்களிலும் உள்ள பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்
கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்கின்றபோது தஞ்சையைச் சுற்றி வந்ததால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் சொல்கின்றபோது தஞ்சையிலே இல்லை என்று சொன்னதற்காகத் தான் நான் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகின்றபோது இந்தச் சட்டத்தைப் பூரணமாக வரவேற்றுவிட்டு, ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அவர்களுடைய உணர்வுகளையும், எந்த உணர்வின் அடிப்படையிலே அவர் அவ்வாறு குறிப்பிட்டார் என்பதையும் இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கின்றது. குத்தகைதார் பதிவேட்டிலே தகராறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அடுத்து மக்கள் குழு அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைப்பற்றியும் இந்த அரசு ஆலோசித்துக்கொண்டு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இருக்கின்ற அனைவரும் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். அதாவது ஓடுகின்ற மாட்டை மேலும் தூண்டுவார்கள். சண்டி மாட்டை தூண்ட மாட்டார்கள் என்று சொல்வார்கள். ஏனென்றால் அதை எவ்வளவு தூண்டினாலும் பிரயோஜனம் இல்லை. ஆகவேதான் நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன், நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு வந்த பிறகு எவ்வளவு அதிகமாகவும் ஆழமாகவும் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். சில நேரங்களில் இங்கே இருக் கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்று கேட்டு 2 மாதம், 3 மாதம் ஆகும் என்று அவர்கள் நினைத்தாலும் அதற்கு முன்னா லேயே இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறேன். அப்படி நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு இன்னமும் தீவிரமாகப் பலவற்றைக் கொண்டு வருவதுபற்றி எண்ணிக்கொண்டிருக்கின்றது. மேலும் நான் இந்த மாமன்றத்திலே பல முறை சொல்லி இருக்கிறேன். நிலச் சீர்திருத் தத்தைப்பற்றி என்ன என்ன செய்யப் போகிறோம் என்பதை முன்னாலேயே சொல்லக்கூடாது. அதையெல்லாம் சொல்லாமல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்த பிறகு அதை அனுபவிக்க வேண்டும். சொல்லாமலே இந்த அரசு நல்லதைச் செய்யும் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நீங்கள் எல்லோரும் ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசுகின்றபோது 1977-78-க்கு முன்பு குத்தகை பாக்கியைக் கொடுக்க வேண்டியவர்கள் மீது வழக்கு தொடர்ந்து இப்போது நிலத்திலே இருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்ற நிலை இருந்தாலும், அந்த நிலம் அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் 1978-79, 1979-80 இந்த இரண்டு ஆண்டுகளுக்குரிய குத்தகையைப் பொறுத்த வரையில், வழக்கு தொடரப்பட்டு நிலத்திலே இருந்து சாகுபடியாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கக் கூடிய வகையிலே அவர்களுக்கு அந்த நிலம் திருப்பிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து 1381-வது பசலிக்கு முன்னாலே உள்ள குத்தகை பாக்கியைக் கொடுத்துவிட்டால் வழக்கு தொடர முடியாது என்று சட்டம் வந்தது. 1972-73-வது ஆண்டுக்கு முன்னாலே கொடுக்கப்பட வேண்டிய பாக்கிக்காக பலர் நிலத்திலே இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு இந்த உரிமை வழங்கப்படுமா? அவர்களுக்கு அந்த நிலம் திருப்பிக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். 1381-வது பசலிக்குரிய குத்தகைப் பாக்கி யைக் கொடுத்துவிட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. அப்போது வந்த அந்தச் சட்டத்தைப் பலர் உபயோகப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காகத்தான் அந்தச் சட்டம் கொண்டு வந்து 9 வருடங்களுக்குப் பிறகு இப்போது தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகு 3 ஆண்டுகள் அந்த அமைச்சரவை இருந்ததே அப்போது ஏன் கொண்டு வராமல் விட்டு விட்டீர்கள் என்று நான் முன்பே சொன்னேன்.

அடுத்து 1381-வது பசலிக்குரிய குத்தகையைக் கொடுத்து விட்டாலும் அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் . என்றால், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அரசு யோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

---

@ 1980 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.**

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

74. தமிழ்நாடு 1925 ஆம் ஆண்டு இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி சட்டத்தின்கீழ் வரும் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 23—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 161 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1926 ஆம் ஆண்டு இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 4 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

75. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 2—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 812 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுவுமில்லை.

—

23022

N81-7-182